விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 18 செவ்வாய்க்கிழமை (31.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 164

# மீள்குடியேற்றம் குறித்து ஜனாதிபதி நேற்று கூட்டம்

## காணி கண்டறியும் செயற்பாடு ஜூன் 3-ல் முடிபு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் அவர்களுடைய காணிகளை இனம் காணும் செயற்பாட்டினை எதிர்வரும் ஜூன் 3-ம் திகதி வெள்ளிக்கிழமைக்குள் நிறைவுக்கு கொண்டு வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார். (23-ம் பக்.)



## கட்சி ஆரம்பிக்கும் எண்ணமில்லை!



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன், நல்லுறவு இருப்பதாகத் தெரிவித்

23ஆம் பக்கம் பார்க்க....

## சிவில் விவகாரங்களில் படையினர் தலையீடு

(கொழும்பு)

ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களைக் காட்டிக் கொண்டு படையினர், சிவில் விடயங்களில் நுழைய எத்தனிப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது மாத்திரமல்ல எதிர்விளைவுகளையும் உண்டாக்க முயலும் செயற்பாடாகும்.

இதுவே கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் கடற்படை அதி

23ஆம் பக்கம் பார்க்க....

## பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு; மக்களின் காணி சுவீகரிக்கப்படாது

### இணைத்தலைவர்கள் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கென பொதுமக்களின் ஒரு துண்டு காணி கூட சுவீகரிக்கப்பட மாட்டாது என தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் இணைத்தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.

பலாலி விமான நிலையம் தற்போது இருக்கும் அளவினை விட விஸ்தரிப்பு செய்யப்படமாட்டாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் காலை நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி

23ஆம் பக்கம் பார்க்க....

## கஞ்சா கடத்தலில் பொலிஸுக்கு தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் கஞ்சா கடத்தலுக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கின்றது என வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் பிரதி தவிசாளர் சண்முகலிங்கம் சஜீவன் குற்றச்சாட்டியுள்ளார்.

வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச ஒருங்கிணைப்புக்

23ஆம் பக்கம் பார்க்க....

## மனநலம் பாதித்த பேரன் தாக்கி காயமடைந்த பேர்த்தி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகர் சிவன்கோவில் பகுதியில் கடந்த 15-ம் திகதி மனநலம் பாதித்த தன் பேரனால் தாக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பேர்த்தியான வயோதிப மாது நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சுப்பிரமணியம் சீதாலட்சுமி (வயது73) என்ற வயோதிபமாது தன் மகள் மற்றும் மகளின் இரு பிள்ளைகள், மகன் ஆகியோருடன வாழ்ந்து வந்த நிலையில், குறித்த வயோதிப மாதுவின் மகளுடைய மகன் ஒருவர் மனநலம் பாதிக்கப்பட்டிருக்கின்றார்.

27 வயதான மேற்படி மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன் தினசரி

23ஆம் பக்கம் பார்க்க....

## கிழக்கு முதலமைச்சர் மீதான தடை நீக்கம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், முப்படைகளின் தளங்களுக்குள் பிரவேசிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 20-ம் திகதி திருகோணமலை மாவட்டம் சம்பூர் வித்தியா

23ஆம் பக்கம் பார்க்க....

## சண்டை பிடிக்க வேறு இடம் உண்டு இங்கே சண்டை பிடிக்க வேண்டாம்

### மாகாணசபை உறுப்பினர்களுக்கு மாவை எச்சரிப்பு



(யாழ்ப்பாணம்)

மாகாண சபை உறுப்பினர்கள் சண்டை பிடிப்பதற்கு வேறு இடம் உள்ளது. இங்கே சண்டை பிடிக்க வேண்டாம் என தெல்லிப்பளை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் இணைத் தலைவருமான மாவை சேனாதிராஜா எச்சரித்துள்ளார்.

தெல்லிப்பளை பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்றைய

24ஆம் பக்கம் பார்க்க....

## ஞானசார தேரருக்கு பிடியாணை பிறப்பிப்பு

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடஅத்தே ஞானசார தேரருக்கு எதிராக மத்துகம நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

மத்துகம நீதவான் நீதிமன்றில விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகாத காரணத்தினாலேயே அவருக்கு பிடியாணை பிறப்பிக்க

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் மூலம் நியமனம் வழங்கல்

### இரண்டாம் கட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

2016.02.16, 2016.03.04-ம் திகதிகளில் நேர்முகத்தேர்வுக்கு தோற்றி தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை தொடர்ஒழுங்குக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு, வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் தமிழ், புவியியல், பொருளியல், கணக்கீடு ஆகிய பாடங்களுக்கு இரண்டாம் கட்டமாக பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை 3-I (அ) இற்கு நியமனம் செய்வதற்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு இன்று 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு செம்மணி வீதி, நல்லூர், யாழ்

24ஆம் பக்கம் பார்க்க....

## பொருத்து வீடுகள் கைவிடப்பட்டன!

(யாழ்ப்பாணம்)


மீள்குடியேற்ற அமைச்சினால் 65 ஆயிரம் வீட்டுத்திட்டங்கள் அமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் அமைக்கப்படவிருந்த பொருத்து வீடுகள் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜூலை 26 வரை கே.பிக்கு நாட்டை விட்டு வெளியேறத் தடை

(கொழும்பு)



விடுதலை புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகராக இருந்த குமரன் பத்மநாதன் (கே.பி), இலங்கையை விட்டு வெளியேறுவதை எதிர்வரும யூலை மாதம் 26-ஆம் திகதி வரை தடை செய்யும் உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

மேலும், குமரன் பத்மநாதனை

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புதிதாக தயாரிக்கின்ற நாடகங்களில் சிறுவர்கள், இளைஞர், யுவதிகள் இணைந்து கொள்ளலாம்

ஈழத்து மண்வாசனையுடன் புதிதாகத் தயாரிக்கப்படுகின்ற சிறுவர் நாடகங்கள், நவீன நாடகங்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 04.06.2016 அன்று மாலை 4.00 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள செயல் திறன் அரங்க இயக்கத்தின் வளாகத்தில் ஆரம்பமாகின்றன. இதில் பங்கு கொண்டு நடிக்க விரும்புபவர்கள் இணைந்து கொள்ளலாம். பயிற்சிகள் மாலை நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெறும். சிறுவர்கள் மட்டுமே நடிப்பதான நாடகத் தயாரிப்புக்கள் வார இறுதி நாட்களில் மாலை நேரங்களில் நடைபெறும்.

தயாரிக்கப்படுகின்ற நாடகங்கள் ஈழத்தின் நாடக வரலாற்றின் முக்கியமான நாடக நிகழ்வான நல்லூர் நாடகத் திருவிழா-2016 இல் மேடையேற்றப்படும். ஈழத்தின் பிரபலமான நாடக ஆசிரியர்களின் நாடகங்கள் பிரபல்யமான நெறியாளர்களால் நெறிப்படுத்தப்படவுள்ளன,

பயிற்சிகளிலும் நாடகத்திருவிழாவிலும் பங்கு கொள்பவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**தொடர்பு:-**

**0212216061, 0772111622**

e-mail:

jaffnatheatre@gmail.com

செயல் திறன் அரங்க இயக்கம்

Active Theatre Movement

நல்லூர் குறுக்கு வீதி (யாழ் மாநகர சபை முன் வீதி) நல்லூர், யாழ்ப்பாணம்

(சி-4751)

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில்

# முப்படையினரின் கட்டுப்பாட்டில் 5 ஆயிரத்து 341 ஏக்கர் காணி

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்குள மாத்திரம் 5 ஆயிரத்து 341.28 ஏக்கர் பொது மக்களின் நிலங்கள் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படையினதும் கட்டுப்பாட்டில் உள்ளதாக தெல்லிப்பளை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பிரதேச செயலகர் எஸ்.சிறிமோகனால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலங்களில் மீளகுடியேறுவதற்கு 9 ஆயிரத்து 968 குடும்பங்கள் பதிவு செய்துள்ளன, 940 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளது, 765 குடும்பங்கள் புதிதாக மீள்குடியேறவுள்ளனர், மேலும் 727 குடும்பங்கள்மீள்குடியேற வுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. மீள்குடியேறிவர்களில் ஒருபகுதியினருக்கான வீட்டு திட்டம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள நிலையில்,

மேலும் 2300 குடும்பங்களுக்கு வீட்டு திட்டம் வழங்கவுள்ளோம். எனினும் விடுவிக்கப்பட்ட இடங்களில் வந்து கொட்டில்கள் அமைத்து தங்கி இருப்பவர்களுக்கே வீட்டு திட்டம் வழங்கப்படும் என பிரதேச செயலகர் சிறிமோகனால் கூறப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சரும பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் இணைத் தலைவருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன், இந்த கருத்து ஏற்க முடியாது எனவும், இருபத்து ஐந்து வருட காலங்களாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் உள்ளவர்கள் உடனடியாக இங்கு வந்து கொட்டில் போட்டு தங்க முடியாது எனவும், இடம்பெயர்ந்து உள்ளவர்கள் தாம் இருக்கும் இடங்களில் இருந்து வேலைக்கு செல்ல வேண்டி இருக்கும் எனவும், அதேபோல் அவர்களது பிள்ளைகளும் அங்குள்ள பாடசாலைகளில் கல்வி கற்பார்கள் எனவும், இவ்வாறான நிலையில் எவ்வாறு இங்கு வந்து குடியேற முடியும். மேலும் அரச அதிகாரிகளுக்கும் வீடு வழங்கப்படல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன் போது மீண்டும் கருத்து தெரிவித்த தெல்லிப்பளை பிரதேச செயலர், இந்த திட்டத்திற்கு தான் நூறு வீதம் ஆதரவு எனவும் எனினும் சட்ட திட்டங்கள் இதற்கு இடமளிக்கவில்லை எனவும் அவர் கூறினார். இது தொடர்பில் உரியவர்களுக்கு தெரியப்படுத்தி வீடு இல்லாத அனைவருக்கும் வீட்டு திட்டம் என்ற திட்டம் கொண்டுவரப்படல் வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மேலும் பெண்தலைமைத்துவ குடும்பங்களும் இங்கு வந்து குடியேறினால் தான் வீடு வழங்கப்படும் என கோருவது தவறு எனவும் அவர்களால் எவ்வாறு துணையின்றி இங்கு வந்து மீள்குடியேற முடியும் என வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ்.சஜீவன் சுட்டிக்காட்டினார். இந்த கோரிக்கைகளுக்கு, அமைய தெல்லிப்பளை பிரதேச செயலரின் கருத்தை ஏற்ற ஒருங்கிணைப்பு குழுத்தலைவர்கள் இது தொடர்பில் விசேட தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றுவது என தீர்மானித்து, அதனை மீள்குடியேற்ற அமைச்சிடம் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.(செ-4)

## விற்பனையாகிறது!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு

முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்

# வெற்றிக்கு வழிகாட்டி

தரம் 3 , தரம் 4 , தரம் 5

பகுதி 1 , பகுதி 2

24 மாதிரி வினாத்தாள்கள் விடையுடன்

தொடர்புகளுக்கு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்

தொ.பே : 077 6258778

விலை : 240/-

(C-4749)

## மரண அறிவித்தல்

### பிரான்சிஸ் வின்செற் ரவீந்திரன் (சூட்டா)



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் வின்செற் ரவீந்திரன் (சூட்டா) அவர்கள் கடந்த 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்-திரேசம்மா ஆகியோரின் மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும், நாகலக்சுமியின் அன்புக் கணவரும், நிக்சன், நில்சன் ஆகியோரின் தகப்பனாரும், திவ்வியரூபா, அனோஜா ஆகியோரின் மாமனாரும், சயூட்லீன், பிறாஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதித் திருப்பலி இன்று (31.05.2016) செவ்வாய்க் கிழமை மாலை 3 மணியளவில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:-
குடும்பத்தினர்.

(4816)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

மலர்வு
09
09
1939



உதிர்வு
01
05
2016

# அமரர் பொன்னம்பலம் இராமநாதன்

(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் கடந்த 01.05.2016 ஆம் திகதி ( ஞாயிற்றுக்கிழமை ) இறைவன் அடிசேர்ந்த எமது குடும்ப குலவிளக்கு எமது தெய்வத் தந்தை பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 29.05.2016 ( ஞாயிற்றுக்கிழமை ) கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றது. 31.05.2016 ஆம் திகதி இன்று ( செவ்வாய்க்கிழமை ) அன்னாரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றுவதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

மேலும் அவரது பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், தந்தி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகளைப் பிரசுரித்தவர்கள், இரங்கல் உரை நிகழ்த்தியவர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்
தொ.பே.இல. 077 220 3132

(4770)

# லசந்த கொலை தொடர்பான ஆவணங்களை குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கவும்

## இராணுவத் தளபதிக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகளுக்காக இராணுவ புனாய்வுப் பிரிவினரிடம் இருக்கும் ஆவணங்களை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் இராணுவ தளபதிக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.



சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றிய லசந்த விக்ரமதுங்க 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கண்டறிய பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இந்தியாவுக்கு செல்கிறார் வெளிவிவகார அமைச்சர்

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக மும்பையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள கருத்தரங்கில் பங்கேற்க இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியா செல்லவுள்ளார்.




வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக இந்திய நடத்தும் முதலாவது பிரதான கருத்தரங்கு எதிர்வரும் ஜூன் 13 ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தியாவின் நுழை வாயில் கலந்துரையாடல் என்ற பெயரில் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கை, இந்திய வெளிவிவகார அமைச்சும் கேட்வே இல்லமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன.

இந்தக் கருத்தரங்கில் வெளிவிவகாரம் மற்றும் வர்த்தகம் சார்ந்த விவகாரங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், நேபாள பிரதிப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சருமான கமல் தாபாவும் இந்தக் கருத்தரங்கில் ஆரம்ப உரை நிகழ்த்தவுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார். (இ-10)

## மனம் திறக்கிறார் மகிந்த

கடந்த ஜனாதிபதித் தேர்தலன்று மகிந்த ராஜபக்ஷ தேர்தல்கள் ஆணையாளருடன் தொலைபேசி அழைப்பினூடாக உரையாடியுள்ளமை குறித்து சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்தகவலினை தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தேர்தல் தினத்தன்று மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி ஊடாக அழைப்பை ஏற்படுத்தி தான் தோல்வியடைந்து வருகிறேன் தானே என தன்னிடம் கேட்டதாகவும் அதற்கு காலை 6 மணிவரை எதுவும் சொல்ல முடியாது. எனினும் தற்போதைய முடிவுகள் உங்களுக்கு பாதகமாகவே உள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் தினத்தன்று மாத்திரம் அல்லாமல் அதற்கு முதலிலும் முன்னாள் ஜனாதிபதி தன்னுடன் தொலைபேசியில் உரையாடியிருப்பதாக மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றிக்கு வழங்கியுள்ள பிரத்தியேக நேர்காணலிலே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தேர்தலில் தோல்வியுற்றதற்கு பிறகு தாங்கள் அவரை சந்தித்ததுண்டா? என குறித்த ஊடகம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஆம், பல தடவைகள் தனக்கு அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. திருமண நிகழ்வு, மரண வீடு, ஆண்டு நிறைவு விழா போன்றவற்றில்தான் மகிந்தவை சந்தித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மிகவும் நீண்டகாலமாக எனக்கு அவரைத் தெரியும் என்பதோடு தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோரும் நீண்டகாலமாக எனக்கு தனிப்பட்ட ரீதியாக தெரிந்தவர்களே என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (இ-10)

## ஆணைக்குழுக்கள் மீது கபே அமைப்பு அதிருப்தி

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சும், அரச சேவைகள் ஆணைக்குழுவும் தமது பொறுப்புக்களை தவறவிட்டுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

அனுஷ பெல்பிட்டவை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதன் மூலம் அரச சேவைகள் ஆணைக்குழுவும் அமைச்சும் வேண்டும் என்றே திட்டமிட்டு தமது பொறுப்புக்களை தவற விட்டுள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலேயே அரச வளங்கள் பாரியளவில் பயன்படுத்தப்பட்டன. இந்த சம்பவங்கள் தொடர்பாக அனுஷ பெல்பிட்டவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளது. இருப்பினும் அமைச்சர் வஜிர அபேவர்தன, அனுஷ பெல்பிட்ட குற்றவாளி அல்ல எனக் கூறியுள்ளதாகவும் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார். (இ-10)

## முதலாம் ஆண்டுக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் வெளியீடு

முதலாம் வகுப்பிற்காக அடுத்த வருடம் பாடசாலைகளுக்குச் சேர்த்து கொள்ளப்படவுள்ள மாணவர்களுக்கான மாதிரி விண்ணப்ப படிவம் முறை குறித்த ஆலோசனை நேற்று ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் அறிக்கைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் முதலாம் ஆண்டுக்காக எதிர்பார்க்கப்படும் பாடசாலைகளின் அதிபருக்கு அஞ்சல் மூலம் அனுப்பமுடியும். (இ-10)

## க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

2016 ஆம் ஆண்டுக்கான க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் காலம் ஜூன் மாதம் 10-ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதனை பாடசாலை அதிபர்களும் வெளிவாரியாக விண்ணப்பிக்கும் மாணவர்களும் கவனத்தில் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் இதுவரை விண்ணப்பிக்கத் தாமதமானவர்களும் கவனத்திற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் எனவடமாகாண கலவிப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ)

## தகுதியற்றவர்கள் வாகனங்களை உபயோகிப்பதால் விலைஅதிகரிப்பு

### ஜோன் அமரதுங்க புது விளக்கம்

தகுதியற்றவர்கள் கார் போன்ற வாகனங்களை பயன்படுத்துவதாலேயே வாகனங்களின் விலை அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் கார்களை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்துள்ளதும் இதற்கான மற்றுமொரு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று கலேவெலை-வஹாகோட்டை தேவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆட்டோக்களின் பாவனையும் இலங்கையில் அதிகரித்துள்ளதாக ஆட்டோக்களின் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமையவே ஆட்டோக்களின் விலையும் அதிகரிக்க நேர்ந்துள்ளதாக



அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## மத்திய வங்கி ஆளுநர் விவகாரம்; இறுதி முடிவு ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் பதவிக் காலத்தை நீடிப்பதா? அல்லது புதிய நபர் ஒருவரை மத்திய வங்கி ஆளுநராக நியமிப்பதா? என்ற விவகாரம் நெருக்கடியொன்றை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் மாத கடைசியில் முடிவடைகின்றது. அவருக்கு பதவி நீடிப்பு வழங்குவதா? அல்லது புதிய ஆளுநர் ஒருவரை நியமிப்பதா? என்ற விடயம் தற்போது ஜனாதிபதியின் முடிவுக்கு விடப்பட்டுள்ளது.

மகேந்திரனுக்கு பதவி நீடிப்பு வழங்குவதற்கு சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் மற்றும் கூட்டு எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவருக்கான பதவி நீடிப்பை வழங்கும் விருப்பில் இருக்கின்றார் என அறியமுடிகின்றது.

இந்த நிலையில் இதுகுறித்த விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## நுண் கடனுதவி நிதியங்கள் பற்றி பசிலுக்கு போதிய அறிவு இல்லை

### எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்



நுண் கடனுதவி நிதியங்கள் தொடர்பாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எவ்வித அறிவும் இருக்கவில்லை என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொரளை மருத்துவ பரிசோதனை ஆய்வு நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு இந்த கடன் நிதியங்கள் பற்றி எந்த அறிவும் இருக்கவில்லை.

அது பற்றிதெரிந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறையும் அவருக்கு இருக்கவில்லை எனவும் தெரிவித்தார். (இ-10)

# தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் தமிழ், புவியியல், பொருளியல், கணக்கீடு ஆகிய பாடங்களுக்கு இரண்டாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர் விபரம்

செல்வி தர்சிகா தங்கவடிவேலு அல்வாய் 867020500V, திருமதி ஜாமினி கோபி தாசன் கிளிநொச்சி 856583554V, சுதே சினி மோகன் கிளிநொச்சி 888071709V, ராஜேஸ்வரன் கார்த்பன் கோப்பாய் 89100 3536V, பாரதி பொன்னையா உடுப்பிட்டி 908261178V, செல்வி சிவாஞ்சலி மகா லிங்கம் நீர்வேலி 907012832V, செல்வி சர்மிளா சத்தியவேல்நாதன் யாழ்ப்பாணம் 907772136V

சிவராசா நிரோஜன் யாழ்ப்பாணம் 842132614V, திருமதி பிரிந்தா மஞ்ஜீவன் சண்டிலிப்பாய் 865572557V திருமதி வேணுகா மநுசுதன் கொடிகாமம் 877 872 610V, சிறிகணேஸ் பவகணேஸ் உரும்பி ராய் 903540753V, திருமதி தாட்சாயினி பார்த்திபன், கரவெட்டி 828392638V, மரிய ஜோஸ்ஸ் சிந்துஜா அலோசியஸ் மரியதாஸ் யாழ்ப்பாணம் 906083590V, திருமதி துஷிதா வரதன், தொண்டைமானாறு 838192009V

செல்வராசா சதீஸ்வரன் முல்லைத்தீவு 812715020V, முகம்மது அலி முஸ்சாபீன் முல்லைத்தீவு 860031531V, தம்பையா ரஜிந்தன் முல்லைத்தீவு 883400542V குணசிங்கம் புஸ்பாகரன் முல்லைத்தீவு 853490741V, திருமதி அஃபீலா முஹம்மது ஜவ்சி முள்ளியவளை 846900128V சிவானந்தன் நிசாந்தன் முல்லைத்தீவு 71213100V, அம்புஜா தவராஜா, முல்லைத் தீவு 876013509V,

குணசிங்கம் குணசீலன் முல்லைத்தீவு 840353583V, கௌசல்யா அழகன் முல்லைத்தீவு 876674009V, குமாரசாமி குகன் மல்லாவி 871243239V, செல்வி மேரி கலிஸ்ரா கணேசானந்தம், முல்லைத் தீவு 868541784V, கஜனி சுந்தரலிங்கம் கொக்குவில் 915013040V பவித்திரா திரு நாவுக்கரசு கோப்பாய் 905242121V, செல்வி கௌரி சுப்பிரமணியம் நீர்வேலி 885 872956V

கஜேந்தினி சண்முகநாதன் யாழ்ப் பாணம் 867352775V, குகப்பிரியா செல்வ ராசா தெல்லிப்பளை 897034123V, தேவகி தம்பிராசா கைதடி 896252542V, கணேசமூர்த்தி மங்களமூர்த்தி வட்டுக் கோட்டை 872760555V, நிதர்ஷனா ராகு லன் முல்லைத்தீவு 848260584V, கயந்தா கந்தசாமி முல்லைத்தீவு 905362143V, மேரி வினித்தா அன்ரெனி இராசநாயகம் கர வெட்டி 898170624V,

அபிலஷா தர்மலிங்கம் அளவெட்டி 896702270V, அபிராமி கஜந்தன் பருத் தித்துறை 885702791V, முத்துலிங்கம் செல்வேந்திரன் யாழ்ப்பாணம் 80339 4962V, மார்க்கண்டு மோகன கிருஸ்னர் யாழ்ப்பாணம் 861122000V உஷாந்தினி சிவகுமார் முல்லைத்தீவு 905074628V சுதர்சனா வேட்டன் முல்லைத்தீவு 90539 1607V, சசீதா மோகன்ராஜா, முல்லைத்தீவு 905013092V,

செல்வி ஜனனி தேவகுமாரன் மாங் குளம் 896313665V, செல்வி நித்தியா குணசேகரம் சாவகச்சேரி, 908512391V, தோமாஸ் கென்றி பிரிசாந்தன் யாழ்ப்பாணம் 851864202V, குலேந்திரம் அமலன் முல்லைத்தீவு 882930661V, நடன சபாபதி ஜெகநாதன், முல்லைத்தீவு 81053 9356V, சுகந்தினி குகன் முல்லைத்தீவு 8985 90135V, நவரத்தினம் ஜங்கரன், முல்லைத் தீவு 902053964V,

திருமதி சிவதரிசினி பகீதரன் வவுனியா

## வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் மூலம் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் 1 (அ) இற்கு நியமனம் வழங்கல் - இரண்டாம் கட்டம்

828570625V, திருமதி பர்வின் முகம்மது வஸீம் பெரியமடு 896461125V, திருமதி ஷபானா பர்வீன் முகம்மது அஸ்வின் மன் னார் 868480653V, திருமதி முனவ்வறா ஹிதாயத்துல்லா மன்னார் 836952197V, திருமதி அன்ரோநட் சௌகார்த்திகா பீரிஸ் புஸ்பநாதன் மன்னார் 886661363V, செல்வி இவோன் சுகாசினி சனானந்தராசா மட்டக்களப்பு 895674095V, நற்குண நாதன் ஜிவராஜசிங்கம் மன்னார் 8930 91572V,

பாத்திமா ஷர்மிளா முஹம்மது அப்துல் மனாப் மன்னார் 907981908V,செல்வி தர் ஷனா கணேசன் வவுனியா 897561220V, திருமதி சுதர் பாஸ்க்கரன் வவுனியா, 867672931V, திருமதி சுமித்திரா சர வணன், 1ம் ஒழுங்கை, தோணிக்கல், வவு னியா 826893281V, செல்வி சர்மிளா சுந் தரம்பிள்ளை, வவுனியா 887143293V, திருமதி கௌசல்யா ரங்கஹீ வவுனியா 846562028V, தனபாலசிங்கம் சுகுமார், வவுனியா 900971273V,

குகேந்திரராசா லோகிதாசன் வவுனியா. 871743460V, திருமதி பிந்துஜா தேவராசா வவுனியா 887092826V, யூலியஸ் விஜய குமார் விஜயசங்கர் வவுனியா 911141990V, திருமதி பிரியா அச்சுதநாத் வவுனியா 8380 60153V, செல்வி அருந்ததி வில்வராசா 907852172V, கணேசமூர்த்தி கயெந்த ரூபன் வவுனியா 890711618V, கவிதா அச் சுதன் வவுனியா 908441133V, கதரீன் குக னேஸ்வரி ஜெனிற்றன் வவுனியா 885 322115V, சேகு அப்துல்லா சனூர்தீன் வவு னியா 863150981V

தமிழ்வாசன் நாவேந்தன் வவுனியா 872171754V, திருமதி கிர்த்திகா கிருஷாந் தன் வவுனியா 876672111V செல்வி மிதர் ஷனா சற்குணரத்தினம் வவுனியா 9054 10300V, தர்மலிங்கம் ஜீவநேசன் வவுனியா 912902838V, யோகராசா பிரேம்நாத் வவுனியா 852861789V, கௌசிகா சபா ரத்தினம், வவுனியா 907750477V ஜெக நாதன் சசிகுமார் வவுனியா 873422475V, திருமதி வளர்மதி றஜீதரன் யாழ்ப்பாணம் 875910779V

# நல்லூரில் நாளை கற்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசாமி கோயிலில் நாளை புதன்கிழமை கற்பூரத் திருவிழா நடைபெறும். காலை சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை மணவாளக்கோலத்தில்சுவாமிவீதியுலாவரும்நிகழ்வுஇடம்பெறும். (செ)



மீள்குடியேற்ற அமைச்சினால் யாழ் மாவட்டத்தில் நடை முறைப்படுத்தப்பட்டுள்ள 8 லட்சம் ரூபாய் வீட்டுத் திட்டத்துக்கான முதலாவ்து அடிக்கல்லினை பருத்தித்துறை பகுதியில் நேற்றைய தினம் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன் நாட்டிவைத்தார்

பருத்தித்துறை புலோலி மேற்கு பூவக்கரை ஜே/410 கிராம சேவகர் பிரிவின் கீழ் உள்ள 6 வீடுகளுக்கான அடிக்கல் நேற்றைய தினம் நாட்டப்பட்டது (செ-9)



# தொடரை வென்றது இங்கிலாந்து

## சண்டிமல் சதம் வீணானது

இலங்கை அணிக்கு எதிரான 2வது டெஸ்டில் 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி 2:0 என தொடரை வென்றது. சண்டிமால் சதம் வீணானது.

இங்கிலாந்து சென்றுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொட ரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் வென்ற இங்கிலாந்து அணி 1:0 என முன்னிலையில் இருந்தது.

இரு அணிகள் மோதிய இரண்டாவது போட்டி செஸ்டர் லீ ஸ்ட் ரீட்டில் நடந்தது. இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 498/9 ('டிக்ளேர்') எடுத்தது. இலங்கை அணி முதல் இன்னிங்சில் 101 ஓட் டங்கள் எடுத்தது.

'பொலோ ஒன்' பெற்று இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இலங்கை அணி நேற்று முன்தினம் மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் 309/5 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சண்டிமல் (54), சிறிவர்தன (35) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### சண்டிமல் சதம்

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. சிறி வர்தன (35) விரைவில் ஆட்டமிழந்தனர். பின் ஹேரத்துடன் இணைந்த சண்டிமல் உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர் டெஸ்ட் அரங்கில் 6ஆவது சதம் கடக்க, இலங்கை அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்த்தது.

அரைச தம் அடித்த ஹேரத் (61), அண் டர்சனிடம் சிக்கினார். எரங்க (1) நீடிக்க வில்லை. சண்டிமல் (126), பிரோட்டிடம் வீழ்ந்தார். கடைசியில் லக்மல் (11) ஆட்ட மிழக்க, இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் 475 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பிரதீப் (13) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

79 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தனது 2ஆவது இன்னிங்சுக்காக களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஹேல்ஸ் (11) ஏமாற்றம் அளித்த போதிலும் குக் (47), கொம்ப்டன் (22) ஆகியோர் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்க தனது வெற்றியிலக்கை 9 விக்கெட்டுக்களால் அடைந்து வெற்றி பெற்றது.

இந்த வெற்றியை அடுத்து டெஸ்ட் தொடரை 2:0 என கைப்பற்றியது இங்கி லாந்து. இரு இன்னிங்சிலும் சேர்த்து 8 விக்கெட் வீழ்த்திய அண்டர்சன் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவனார். (க)


# பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல் லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

**1.நூலகர்**

*தகைமைகள்*

நூலக தகவல் விஞ்ஞான பட்டதாரிகள்

அல்லது

நூலக தகவல் விஞ்ஞான பட்டதாரி பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள்

அல்லது

இலங்கை நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா தரம் - III (LEVEL- III) பரீட்சையில் (DIPLIS) சித்தி பெற்றவர்கள்

20 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும்.

உணவு, தங்குமிடம் என்பன வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(7753)

**விண்ணப்ப முடிவுத் திகதி:-10.06.2016**

தொடர்புகளுக்கு:-

**தி.இராசநாயகம்**

**தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**

**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

**தொலைபேசி இலக்கம்:-077-0604950, 021-4923118**

மின்னஞ்சல் முகவரி E-Mail-mahadevaswamikalchildrenhome@gmail.com



# கண்ணீர் அஞ்சலி

பயிலுநர் அதிபர் திரு. ப. சுதர்சன் அவர்களின் அன்புத் தந்தை



அமரர் **M.A பஞ்சநாதன்**

(ஓய்வுநிலை மக்கள் வங்கி அலுவலர்)

**அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.**

இணைப்பாளர், வளவாளர்கள்
பயிலுநர் அதிபர்கள் அணி – II
ஆசிரிய மத்திய நிலையம்
இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(4815)

# கிழக்கு முதலமைச்சர் மீதான பிரச்சினையை இனவாதிகள் பூதாகரமாக மாற்றுகின்றனர்

## மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

இன்று சில இனவாதிகள் கிழக்கு மாகாண முதலமைச்சர் மீதுள்ள பிரச்சினையை ஒரு பூதாகரமாக மாற்றி தங்களது கருத்துக்களை வெளியிடுகின்றார்கள் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் குற்றம் சாட்டியுள்ளார்.

வாழைச்சேனை மீராவோடை பாடசாலை குறுக்கு வீதியில் வடிகானுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

முதலமைச்சர் கடற்படை அதிகாரியை தாக்கவில்லை, கெட்டவார்த்தைப் பிரயோகங்களால் திட்டவில்லை அவர் சொன்னவார்த்தை நீ நடந்து கொண்ட முறை பிழை என்றுதான். ஆனால் முதலமைச்சர் பிழையாக நடந்து கொண்டார் என்று கடந்த அரசாங்கத்தில் பொலிஸ் அதிகாரியின் சட்டையைப் பிடித்து இழுத்த விமல் வீரவன்ச முதலைக்கண்ணீர் வடிக்கின்றார்.

இதேபோன்று கிழக்கு முதலமைச்சர் முப்படைக்கும் எதிரானவர் என்று சித்திரிக்கப்படுகின்றது. இதனை பயன்படுத்தி பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த பௌத்த குரு முதலமைச்சரின் வீட்டுக்கு வந்து தன்னுடையசெயறபாட்டை காட்டிய விதம் பௌத்த தர்மத்திறகு மாற்றமான ஒரு செயலாகும் என தெரிவித்துள்ளார்.

பௌத்த குரு பிரயோகித்த வார்த்தைப் பிரயோகம் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் கேவலப்படுத்தும் செயலாக அமைந்திருந்தது. இதனை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

நாங்கள்பொறுமையாக இருப்பதால் கோழைகள் என்று எவரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. எங்கள் இனத்திற்கு எதிராக செயற்படுபவர்களுகது எதிராக போராட தெரியும், ஆனால்பொறுமைகாத்து செயற்பாடுகளை செய்ய வேண்டும் என்று எங்களுக்கு போதிக்கப்பட்டுள்ளதால் அதனை கடைப்பிடித்து செயற்பட்டு வருகின்றோம் என கூறியுள்ளார்.

இவ்வாறான இனவாத செயற்பாடுகளை கடந்த அரசாங்கம் விட்டு வைத்திருந்ததால் தான் சிறுபான்மைச் சமூகம் மகிந்த குடும்பத்தை வீட்டுக்கு அனுப்பியது. அந்த நிலைமை மீண்டும் இந்த அரசாங்கத்திற்கு வந்து விடக் கூடாது.

நாங்கள் நல்லாட்சி மலர வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தது மகிந்தவுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன வரவேண்டும் என்பதற்காக வல்ல. ஆட்சி மாறவேண்டும். சிறுபான்மை மக்களின் பிரச்சினை ஆட்சியாளர்களின் காதுகளுக்கு கேட்க வேண்டும் என்பதற்காகத் தான் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தினோம் என்றும் தெரிவித்தார். (இ-10)

## தமிழ் அமைச்சர்களின் போராட்டங்கள் வேடிக்கையானவை - பிரபா கணேசன்

(கொழும்பு)

மலை நாட்டு மக்களுக்கான சம்பளப் பிரச்சினை மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப் போவதாக தமிழ் அமைச்சர்கள் சேர்ந்து நடத்திய போராட்டங்கள் வேடிக்கையான விடயம் என பிரபாகணேசன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே பிரபா கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுத்தரக்கோரி அமைச்சர்களான மனோகணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்ட போராட்டம் தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு கூறினார்.

மேலும் ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் ஆலோசனைகளை வழங்கியுள்ளதாக தெரிவித்ததோடு, அந்த அறிக்கையினை ஊடகவியலாளர்களிடமும் கையளித்தார்.(இ-10)

## வெறிச்சோடிய நிலையில் மத்தள விமான நிலையம்

### போபிஸ் நாளிதழ் சுட்டிக்காட்டு




உலக பிரசித்தி பெற்ற போபிஸ் நாளிதழ் மத்தள சர்வதேச விமான நிலையம் தொடர்பில் விசேட செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

உலகிலேயே பயணிகள் இன்றி வெறிச்சோடி கிடக்கும் விமான நிலையம் என்ற கருப்பொருளில் இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

"உலகிலுள்ள வெறிச்சோடிய சர்வதேச விமான நிலையத்தின் மறைந்திருக்கும் கதை" என்ற தலைப்பின் கீழ் இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

டேவிட் ஷேபார்ட் என்ற ஊடகவியலாளர் இந்த செய்தியை எழுதியுள்ளார்.

அவர் மத்தள விமான நிலையத்திற்கு சென்ற சந்தர்ப்பத்தில் தான் கண்ட விடயங்களையும், தன்னால் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

மத்தள விமான நிலையத்தில் விமான சத்தங்களைத் தவிர ஏனைய அனைத்து சத்தங்களும் கேட்பதாக அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், போபிஸ் நாளிதழில்மத்தள சர்வதேச விமான நிலையத்தின் வடிவமைப்பு குறித்தும் அவர் விமர்சித்துள்ளார். (இ-10)

# அனர்த்தங்களின் போது சேதமடைந்த பொருட்களுக்கு நட்டஈடு இல்லையாம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அனர்த்தங்களின் போது சேதமடைந்த பொருட்களுககு நட்டஈடு வழங்கப்படாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக வீடுகளில் காணப்பட்ட மின்சார உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் சேதமடைந்த போதிலும் அவற்றுக்கு நட்டஈடு வழங்கப்படாது என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கை அனர்த்தம் காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு அரசாங்கம் நட்ட ஈடு வழங்கும்.பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக நட்ட ஈடு வழங்குவது குறித்து கடந்த 27 ஆம் திகதி விசேட சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுநிருபத்தின் பிரதிகள் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சேதமடைந்த வீடுகள், குறித்த மதிப்பீட்டு அறிக்கைகள் துரிதகதியில் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் அது குறித்து கிராம உத்தியோகத்தருக்கு முதலில் அறிவிக்க வேண்டும்.

பின்னர் பிரதேச செயலகம் ஊடாக தேவையான மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படும். சேதமடைந்த வீடுகளுக்கு குறைந்த பட்சம் ஒரு இலட்சம் ரூபா முதல் அதிகபட்சமாக இருபத்து ஐந்து இலட்சம் ரூபா வரையில் நட்டஈடு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)


# துயர் பகிர்கின்றோம்

**பிரான்சிஸ் வின்சற் ரவீந்திரன் (சூட்டா)**



எமது இல்ல பணியாளர் திருமதி ***வி.நாகலட்சுமி*** அவர்களின் அன்புக் கணவரும், முன்னாள் பணியாளர் ***வி.நிக்ஷன்*** அவர்களின் அன்புத் தந்தையும் ஆகிய

**பிரான்சிஸ் வின்சற் ரவீந்திரன் (சூட்டா)**

அவர்கள் இறையடி சேர்ந்தமையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4809)

**உத்தியோகத்தர்கள், நலன்புரிச் சங்கம், மூத்தோர்கள், அரச முதியோர் இல்லம், கைதடி.**


## இராசி பலன்

31.05.2016
(வைகாசி 18, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
தசமி முன்னிரவு 8.59 மணிவரை
உத்திரட்டாதி முன்னிரவு 9.25 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
புகைத்தல் எதிர்ப்புதினம்
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | புத | சூரி சுக் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம், உத்திரம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்பு கிடைக்கும்.

**மேடம்:** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணியுரியும் சூழ்நிலை அமையலாம், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கம் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்:** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**கும்பம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள்.

**கடகம்:** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள், இளைய சகோதர வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**சிம்மம்:** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சுப செலவுகள் கூடும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகும், சுப தகவல்கள் வந்து சேரலாம், உதிரி வருமானம் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

### ஒரு லட்சம் கடன் பெற்றவர்கள்

# ரூ.8லட்சம் வீட்டுத்திட்டத்தில் உள்வாங்குமாறு கோரிக்கை

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஒரு இலட்சம் ரூபாய் கடன் திட்டத்தில் வீடு கட்டியவர்கள் தம்மை 8 இலட்சம் ரூபாய் வீட்டுத்திட்டத்திலும் உள்வாங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வீட்டுத்திட்டம் தொடர்பான அறிக்கையிடலின் போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த வருடம் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சில குடும்பங்களுக்கு வீடமைப்பு அதிகார சபையின் ஒரு இலட்சம் ரூபாய் கடன்திட்டத்தின் கீழ் ஒரு சமையல் அறை மற்றும் ஒரு அறை என்பன அமைப்பதற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மாதாந்தம் ஆயிரம் ரூபாய் செலுத்தி குறித்த கடனை மீளச் செலுத்த வேண்டும்.

ஆனால் இவர்களை புதிய வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்வதாக கூறியே இந்த கடன்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் மீள்குடியேற்ற அமைச்சினால் தற்போது வழங்கப்பட்ட 8 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய வீட்டுத்திட்டத்துக்கு மேற்குறித்த பயனாளிகள் விண்ணப்பித்திருந்த போதும் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஏனெனில் 8 இலட்சம் பெறுமதி உடைய வீட்டுத்திட்டத்தின் சுற்றுநிருபத்தில் குறிப்பிட்ட கட்டளைகளுக்கு அமைவாக அவர்களை புதிய வீட்டுத் திட்டத்துக்குள் உள்வாங்கமுடியாதுஎன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் மேற்குறித்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய கடன் திட்டத்தை பெற்ற மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்த நிலையிலும் கடனை மீள செலுத்த முடியாத நிலையிலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வேறு நிறுவனங்களினூடாக வழங்கப்படும் வீட்டுத் திட்டங்களும் கிடைக்காமல் போவதாகவும் தாம் கடனாளிகளாக தற்போது உள்ளதாகவும் குறித்த கடனை இரத்துச் செய்வதுடன் தம்மை புதிய வீட்டுத் திட்டத்துக்குள் இணைத்து தமக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

# துவிச்சக்கரவண்டியை ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்



(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ள பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஒன்றினை உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பிரியந்த தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நெல்லியடி பொலிஸார் ரோந்து சென்று கொண்டிருந்த போது அதி காலை நேரம் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் துவிச் சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவர் துவிச்சக்கர வண் டியை மதவுக்கு அருகா மையில் போட்டுவிட்டு ஓடியுள்ளனர்.

பெண்களுக்கான இத் துவிச்சக்கர வண்டி வேறு பகுதியில் திருடப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எனவே படத்தில் காணப்படும் இத் துவிச்சக்கர வண்டிக்கு உரித்துடையவர் இருந்தால் நெல்லியடி பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-60)

# வடமராட்சி தாழையடி-கட்டைக்காடு வீதியானது போக்குவரத்து செய்ய முடியாதளவிற்கு சேதம்




வடமராட்சி கிழக்கு தாழையடி கட்டைக்காடு வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவிற்கு சேதமுற்ற நிலையில் காணப்படுவதாகவும் இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லையென மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நீண்டகாலமாக சேதமுற்ற நிலையில் உள்ள இவ் வீதி பயணிக்க முடியாதளவிற்கு குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அண்மையில் பெய்த மழை காரணமாக வீதியால் சென்ற பேருந்து ஒன்று புதையுண்டதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியினைப் புனரமைத்துத் தருமாறு அப் பகுதி மக்களினால் சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்வித புனரமைப்பும் நடைபெறவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (இ-60)

# யாழ்.சிறைக் கைதிகளுக்கு எழுத்தறிவூட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு கைப்பணிப் பயிற்சி நெறியை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு சிறந்த அழகியல் உணர்வை வளர்ப்பதோடு குற்றச் செயல்களில் ஈடுபடாது தமது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வதற்கும் சுயதொழிலில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்டும் முகமாக யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் கைப்பணிப் பயிற்சி நெறி, எழுத்தறிவூட்டல் வகுப்புக்கள் என்பன சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஏ.சி.பெரேரா தலைமையில் இன்று 31.05.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக கல்விப் பணப்பாளர் நடராஜா தெய்வேந்திரராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் கைப்பணி பயிற்சி நெறியின் வளவாளராக செயற்படுவார். இப் பயிற்சி நெறியின் மூலம் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் பங்குபற்றி பயனடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் 221 ஆவது மலர் வெளிவந்துள்ளது. (இ-5)




# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனம் திருவருள் மிகு கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய 13 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 18 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (இ-5)

# புதிய தலைமையின் கீழ் விசாரணைகள் ஆரம்பம்

## வடக்கில் இடம்பெற்ற முறையற்ற நியமனங்கள் குறித்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இடம் பெற்ற முறையற்ற நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் தொடர்பான விசாரணைகள் புதிய தலைமையின் கீழ் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில்கடந்த 2010.01.01 தொடக்கம் 2015.03.15 வரை இடம்பெற்ற முறையற்ற நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு வடமாகாண சபையால் குழு ஒன்று கடந்த வருடம் நியமிக்கப்பட்டது. அந்த வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தலைமையில் 8 பேர் கொண்ட குழு கடந்த 2015.10.20 ஆம் திகதி வரை விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் பல காரணங்களை முன்வைத்து தொடர்ச்சியாக குறித்த விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது எனக் கூறி தலைமைப் பொறுப்பில் இருந்து அன்டனி ஜெகநாதன் விலகுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில் பல மாதங்களாக விசாரணைகள் இடை நிறுத்தப்படிருந்த காரணத்தால் பாதிக்கப்பட்டோர் தொடர்ச்சியாக இக்குழுவுக்கு முறையிட்டு வந்ததுடன் தொலைபேசி ஊடாகவும் முறைப்பாடுகளை தெரிவித்திருந்தனர்.

மாகாண சபையின் 52 ஆவது அமர்வில் குறித்த விடயம் தொடர்பாக சபையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட போது வடமாகாண சபை உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரன் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து இக் குழு மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி விசாரணைகளை தொடர்ச்சியாக ஆராய்வதற்கு இக்குழு கூடவுள்ளது. (இ-7-9)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு ஸ்ரீகதிரேசன் ஆலய மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர் வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம்திகதிசெவ்வாய்க்கிழமைகாலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ-5)

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட மூவருக்கு 75000 அபராதம்

துன்னாலை குடவத்தைப் பகுதியில் கசிப்பு விற்பனை செய்து வந்த மூவருக்கு 75 ஆயிரம்ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்தார்.

அண்மையில் குடவத்தைப் பகுதியில் கைது செய்யப்பட்ட மூவரை 27 ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோதே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது. (இ-60)

# துப்புரவாக்கல் வேலைத்திட்டம் சாவகச்சேரியில் ஆரம்பமானது

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் துப்புரவாக்கல் வேலைத் திட்டங்கள் நேற்றையதினம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகராட்சி மன்றச் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, 31.05.2016-இறுதி திண்ம பரிகரிப்பு நிலையப் பகுதி துப்புரவு செய்தல், 01.06.2016 - முருகமூர்த்தி கோயில் வீதிதுப்புரவுசெய்தல், 02.06.2016-கிராம்புவில் மேற்கு வீதி துப்புரவு செய்தல், 03.06. 2016-மீன்சந்தை, பள்ளவாசல் பகுதிகள் துப்புரவு செய்தல், கழிவுகள் வேறு பிரித்தல் தொடர்பாக உணவக உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கலந்துரையாடல், 04.06.2016-சாவகச்சேரி பொதுவிளையாட்டுமைதானம் துப்புரவு செய்தல், 05. 06. 2016-மரநடுகை செயற்படுத்துதல், உலக சுற்றாடல் தின நிகழ்வை முடிவுறுத்தல் என நகராட்சி மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-89)

# முதலமைச்சர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் முதலமைச்சர் விருது-2016இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கலைத் துறைக்கு அளப்பெரிய சேவையாற்றிய இரண்டு கலைஞர்களை பண்பாட்டலுவல்களின் புள்ளியிடலுக்கு அமைவாக தெரிவு செய்து சிபாரிசு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தயவுசெய்து நல்லூர்ப் பிரதேச கலைஞர்கள் மேற்படி விருதுக்கானவிண்ணப்பத்தை கலாசார உத்தியோகத்தரிடம் பெற்று உரிய ஆவணங்கள் படத்துடன் 10.06.2016 ஆம் திகதிக்கு முன்பாக நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்கும்படி நல்லூர் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (இ-5)

# நல்லாட்சியை உருவாக்கிய பெருமை கிழக்கு மாகாண சபைக்கே உரியது

## முதலமைச்சர் நஷீர் அஹமட் தெரிவிப்பு

(கொழும்பு)

**கிழக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் என்ன என்பதை தெளிவாக நாங்கள் அறிந்து வைத்திருக்கின்றோம் என்றும் இந்த நாட்டில் முதன் முதலாக நல்லாட்சியை உருவாக்கிய பெருமை கிழக்கு மாகாண சபைக்கே உரியது என்றும் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஹாபீஸ் நஷீர் அஹமட் தெரிவித்துள்ளார்.**

வாழைச்சேனை மீரா வோடை பாடசாலை குறுக்கு வீதிக்கு வடிகானுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

மாகாண சபைக்குரிய அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்துகின்ற மாகாண சபையாக கிழக்கு மாகாண சபை இன்று இருந்து கொண்டு இருக்கின்றது.

இன்றும் இருக்கும்மாகாண சபை அதிகாரத்திற்குட்பட்ட அனைத்து வேலைகளைச் செய்கின்ற மாகாண சபையாக நாங்கள் இருந்து வேலை செய்து கொண்டு இருக்கின்றோம்.

எந்தவித இன, மத வேறுபாடுகளையும் மறந்து நாங்கள் தமிழர்கள், சிங்களவர், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் எதுவும் இல்லாமல் எல்லா பிரதேசங்களிலும் எங்களது வேலைத்திட்டங்களை சரியாக செய்து வருகின்றோம்.

அனைத்து கட்சிகளையும் பங்காளிக் கட்சிகளாக இணைத்து ஆட்சி செய்து வருகின்றோம்.

முதலமைச்சருக்கு பிரச்சனை என்ற போது மாகாண சபையில் உள்ள இரண்டு உறுப்பினர்களைத் தவிர மற்றைய 34 உறுபபினர்களும் என்னுடன் தொடர்பு கொணடு பேசினார்கள்.

நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று குறிப் பாக சிங்கள உறுப்பினர்கள் கதைத்தார்கள். அவ்வாறு ஒற்றுமையாகத்தான் எங்களது மாகாண சபையை நடாத்தி வருகின்றோம் என்று தெரிவித்தார். (இ-10)

## கிழக்கு முதல்வர் நிபந்தனையின்றி

# கடற்படை அதிகாரியிடம் மன்னிப்புக்கோர வேண்டும்

## மு.கா.தலைவர் ஹக்கீம் வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கை கடற்படை அதிகாரியை அவமதித்ததற்காக, அவரிடம் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட், நிபந்தனையின்றி மன்னிப்புக் கோர வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமாதன ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார

கிண்ணியாவில், நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர்,

"கடற்படை அதிகாரியிடம் கிழக்கு முதலமைச்சர் மன்னிப்புக் கோரிய பின்னர், இந்தச் சூழ்நிலை ஏற்பட்டமைக்கான காரணங்களை ஆய்வு செய்ய முடியும்.

இந்தச் சம்பவங்களை வைத்து சில சக்திகள் அரசியல் ஆதாயம் தேட முனைகின்றனர். அந்த சக்திகளுக்கு வாய்ப்பளிக்கக் கூடாது.

பிளவுகளை ஏற்படுத்த முனையும் சக்திகளின் பொறிக்குள் நாம் அகப்படக் கூடாது. இந்தச் சம்பவங்களின் பின்னால் அரசியல் நோக்கங்கள் இருக்கக் கூடும்.

ஜனாதிபதியும் பிரதமரும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாம் பேய்களை புதைத்தோம். அவை மீண்டும் எழுந்திருக்காத வகையில் வழிகளைத் தேட வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற வகையில், நாட்டின் உறுதிப்பாட்டில் கவனம் செலுத்தியும், சிறுபான்மையினரின் கௌரவத்தைக் கருத்தில் கொண்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முனைகிறேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## சட்டவிரோத துப்பாக்கிகளை ஒப்படைப்பதற்கான

# பொதுமன்னிப்புக் காலம் நேற்று முதல் பிரகடனம்

(கொழும்பு)

அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கிகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கான பொதுமன்னிப்புக் காலம் மீண்டும் நேற்று முதல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதி வரை மீண்டும் பொதுமன்னிப்புக்காலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடமிருந்து கிடைத்துள்ள கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமன்னிப்புக் காலப் பகுதிக்குள், அனுமதியற்ற துப்பாக்கிகளை அருகிலுள்ள பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம் அல்லது மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்க முடியும் என்றும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 5 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு காலத்தில் 423 துப்பாக்கிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அதிகளவிலான துப்பாக்கிகள் கம்பஹா மாவட்டத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ய.தேனுயன்



யசோதரன் பிரதீபா தம்பதியரின் செல்வப் புதல்வன் செல்வன் தேனுயன் (31.05.2016) இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை பிரான்சில் தமது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார்.

இவரை பிரான்சில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, பருத்தித்துறையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா குடும்பம், அத்தை, அத்தான், மாமா, பெரியத்தை மற்றும் அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார், உற்றார், உறவினர்கள் அனைவரும் தேனுயன் குட்டியை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்க வாழ்க வென்று அம்மன் அருள் பெற வேண்டுகின்றோம்.

இங்ஙனம்: அப்பப்பா குடும்பம், பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(4808)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:79செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர்
தொ.இ: B/4457

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 32செவ் 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/4458

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 22 செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:O/L/சொந்தத்தொழில்
தொ.இ: B/4459

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 44செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்O/L/தனியார் தொழில
தொ.இ: B/4463

**மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 36 சூரிசெவ் 9 இல்
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5436

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 48செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/5442

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 47செவ் 7 இல்
உயரம்: 153cm
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: G/5443

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 9
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:DIPLOMA/முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/5444

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)


இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



அமெரிக்காவில் ஹவாய் சைவ ஆதீன சபை ஸ்தாபகர் ரிஷி தொண்டுநாதர் சுவாமிகளின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் குருதேவா அறநெறிப்பாடசாலையை அண்மையில் அமெரிக்க ரிஷி தொண்டுநாதர் சுவாமிகளின் தாயார் திருமதி சிவலோசினி கனகரத்தினம் திறந்து வைத்தார். முன்னதாக நிகழ்வில் கலந்து கொள்ளும் பிரமுகர்கள் கலாசார முறைமைகளோடும் வரவேற்புகளோடும் எருதுகள் பூட்டப்பட்ட வண்டிலில் அழைத்து வரப்பட்டனர். இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா வடக்கு மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன், அகில இலங்கை இந்துமாமன்றத்தலைவர் கந்தையா நீலகண்டன், பொதுமக்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் கலந்து வைக்கப்பட்டது.

# கிளிநொச்சியில் 282 பேர் பார்வை இழந்துள்ளனர்

## மாவட்டச் செயலகத் தகவலின்படி

(பனிக்கன்குளம்)

**நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் 282 பேர் கண்பார்வை இழந்துள்ளதாக மாவட்ட செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் கடந்த 2015 ஆம்ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிற்கு அமைய 282 பேர் பாதிக் கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்களில் 43 பேர் இரண்டு கண்களையும் இழந்துள்ளதுடன் 143 பேர் ஒரு கண் பார்வையை இழந்துள்ளனர்.

இதற்கமைய மாவட்ட செயலக புள்ளி விபரத்தின்படி, கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 108 பேர் ஒரு கண்பார்வையையும் 18 பேர் இரண்டு கண்பார்வையையும் இழந்துள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 49 பேர் ஒரு கண்பார்வையையும் 12 பேர் இரண்டு கண்பார்வையையும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 40 பேர் ஒரு கண் பார்வையையும் 13 பேர் இரண்டு கண்பார்வையையும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 42 பேர் ஒரு கண்பார்வையையும் இழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 2792 மாற்றுவலுவுள்ளோர் வசிப்பதாக மாவட்ட செயலகம் அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)





# காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு ஆங்கில மொழி மூலம் கடிதம் அனுப்பிவைப்பு

(பனிக்கன்குளம்)

காணாமற்போனவர்களை தேடிக் கண்டறியும் மக்ஸ்வெல் பரணகம தலைமை யிலான ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் இருந்து காணாமற் போனவர்களின் உற வினர்களுக்கு ஆங்கில மொழியில் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், விசாரணைகள், தேடுதல்கள் இடம்பெறுவதாக சிலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதங்களில் எழுதப்பட்டுள்ளதாகவும், சிலரது கடிதங்களில் விசாரணைகள், தேடுதல்கள் நிறைவுற்றது எனவும், நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ள அந்தந்த பிரதேச செயலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு எழுதப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் பரணகம ஆணைக் குழுவிடமிருந்து தமக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டிருப்பதாக தெரிவிக்கும் காணாமற்போனவர்களின் உறவினர்கள், தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதங்கள் ஆங்கில மொழியில் எழுதப்பட்டமை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த கடிதங்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் ஏனைய மாவட்டங்களில் உள்ள காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை தொடர்பில் இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இருப்பினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதியாக இடம்பெற்ற பரணகம ஆணைக் குழு விசாரணையில் இவ்வாறான கடிதம் ஒன்று தமக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக குறித்த கடிதத்துடன் வருகை தந்த தாய் ஒருவர் ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.

இப்போது இவ்வாறான கடிதம் தமது அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைக்கவில்லை எனவும், இது தொடர்பாக தமக்கு ஏதுவும் தெரியாது என பரணகம தெரிவித்ததுடன் தம்மிடம் இருந்த கடிதத்தை பெற்றுக் கொண்டு அதற்கு பதிலாக வேறு கடிதம் ஒன்றை எழுதி கையளித்ததாகவும் குறித்த தாய் தெரிவித்தார். (2-281)

# சர்வதேச விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப்பணிகள் மந்த கதியில்

கிளிநொச்சி நகரில் சுமார் 325 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சர்வதேச விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப்பணிகள் ஆறு ஆண்டுகளாகியும் மந்த கதியில் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டு துறையை மேம்படுத்தும் நோக்கில் மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு என்ற எண்ணக்கருவிற்கு அமைவாக சகலருக்கும் விளையாட்டுத்துறையை எடுத்துச் செல்லும் திட்டத்தினூடாக கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி இதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு வடக்கு மாகாண விளையாட்டுக்களுக்கான கட்டுமானத்தொகுதிகள் சுமார் 325 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் இதன் பணிகள் மந்த கதியிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இதன் கட்டுமானப் பணிகள் 2013 ஆம் ஆண்டில் நிறைவு பெற்று 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்டத்திலான போட்டிகள் இம் மைதானத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு வரைக்கும் இதன் பணிகள் இதுவரை முன்னெடுக்கப்படாமல் உள்ளன.

நல்லாட்சி அரசாங்கம் இதனை விரைவாக முன்னெடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)



பூநகரி பரமன்கிராய் அ.த.க பாடசாலையில் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் மேம்பாட்டின் பொருட்டு பல்வேறான உதவிப்பொருட்களை யாழ்.எய்ட் நிறுவனம் அண்மையில் வழங்கியதை படத்தில் காணலாம்.

# தொற்றா நோய்களினால் மனிதர்களுக்கு ஏற்படுகின்ற மரணத்தின் வீதம் அதிகமாகும்

## சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

தொற்றா நோய்களில் மனிதர்களில் ஏற்படும் இறப்பு வீதம் தொற்று நோய்களினால் ஏற்படும் மரணங்களை விட அதிகமானது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் 100 ஆவது ஆண்டை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மருத்துவ பரிசோதனையும், குருதி நன்கொடை நிகழ்வும் நேற்றுக் காலை 9 மணியளவில் பாடசாலையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சி.சிவமோகன் மற்றும் வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் டாக்டர் பி. சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்து தெரிவித்த வன்னி எம்.பி. டாக்டர் சி.சிவமோகன், தொற்றா நோய்களால் மனிதர்களில் ஏற்படும் இறப்பு வீதம் தொற்று நோய்களினால் ஏற்படும் மரணங்களைவிட அதிகமானது.

குறிப்பாக இருதய அடைப்பினால் ஏற்படும் இறப்புக்கள் மூன்றில் ஒரு பங்கு இடத் தைப் பிடிக்கின்றது.

எனவே இது சம்பந்தமான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் எமது டாக்டர்கள் ஈடுபடுவது மிகவும் பாராட்டுக்குரியது என்றார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், அரச வைத்தியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-281)

# யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் திறந்து வைப்பு



வன்னேரிக் குளம் ,ஐயனார்புரம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் மாகாணசபை உறுப்பினர்களது ஆதரவுடன் கடந்த 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆதரவற்ற ஆண்,பெண் முதியோர்களை மட்டும் பராமரிப்பதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

15 பேர்களை மட்டுமே தற்போது பராமரிக்க முடியும்.கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆதரவற்ற பராமரிப்புத் தேவையான முதியோர்களை சமூக சேவை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்து பிரதேச செயலரது ஒப்புதலுடன் அனுப்பி வைக்க வேண்டும்.அனுப்பும் போது அம் முதியவரது சுய விபரங்களும் இரத்த உரித்தாளர், பெயர், முகவரி,தொலைபேசி இலக்கம் அனைத்தும் எமக்கு அனுப்புதல் வேண்டும்.பிரதேச செயலரது ஒப்புதல் மிக முக்கியமானது.

சிலர் மன நோயாளிகள் ,தீராத படுக்கையிலுள்ள அபாயகரமான நோயாளிகளை அனுப்புகின்றனர்.ஓரளவு தனது வேலைகளைச் செய்யக் கூடியவர்கள் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.எம்மிடம் வந்த பின்பு நோய் வாய்ப்பட்டால் யாம் பராமரிப்போம் என்பதனை உறுதி செய்கிறோம் என மேற்படி முதியோர் இல்லத் தலைவர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார். (2)

# பாடசாலை சேவையில் ஈடுபடும் ஆட்டோக்களில் பாதுகாப்புக் கதவுகள் பொருத்தப்படவில்லை

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் மற்றும் முன்பள்ளி சிறார்கள் ஆகியோரை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான ஆட்டோக்களில் எவ்விதமான பாதுகாப்பு கதவுகள் பொருத்தப்படாது மாணவர்கள் ஆபத்தான முறையில் பயணிக்கின்றனர்.

இதனால் நாளாந்தம் விபத்துக்கள் ஏற்படவாய்ப்புக்கள் உள்ளதால் இவ்வாறான பாடசாலை மற்றும் முன்பள்ளி சேவையில் ஈடுபடும் ஆட்டோக்கள் தொடர்பில் பெற்றோர் மற்றும் வீதிப் போக்குவரத்து பொலிஸார், முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் கூடிய கவனம் எடுக்கவேண்டுமென சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

மேற்படி பிரதேசங்களில் குறித்த பாடசாலை மற்றும் முன்பள்ளி சேவைகளில் ஈடுபடும் ஆட்டோக்களின் தரம் தொடர்பில் உரியவர்கள் கவனம் எடுப்பதனுடாக விபத்துக்களிலிருந்து தமது பிள்ளைகளை காப்பாற்றிக் கொள்ளலாம் . இதேவேளை தமது ஆட்டோக்களில் தேவைக்கு அதிகமாக ஆடம்பரப் பொருட்களை பொருத்திக் கொள்ளும் உரிமையாளர்கள் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு தேவையான கதவுகளை பொருத்த முன்வருவதில்லை. அத்துடன் ஒரே தரத்தில் அளவுக்குகதிகமான பிள்ளைகளையும் தமது இலாப நோக்கத்திற்காக ஏற்றிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. இவ்வாறானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி பேராபத்துக்களை தடுக்க போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் வேண்டுகின்றனர். ஆகவே இதனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். (2-310)

# கேப்பாபிலவு சூட்டுச் சம்பவத்திற்கு பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.வலியுறுத்து

முல்லைத்தீவு கேப்பாபிலவு மாதிரி கிராமத்தில் வசித்துவரும் வி.தியீபன் என்பவரது வீட்டுக்குள் கடந்த 28ஆம் திகதி சிவில் உடையில் நுழைந்த இருவர் தம்மை பொலிஸார் என்று அடையாளப்படுத்திக் கொண்டு குறித்த இளைஞரை கைதுசெய்ய வந்துள்ளதாகவும், அதற்குரிய நீதிமன்ற பிடியாணை தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞர் அந்த நீதிமன்ற பிடியாணையை தனக்குக் காட்டுமாறு கோரிய போது காட்ட மறுத்தவர்கள், நீதிமன்ற பிடியாணையை காட்டாவிட்டால் வரமாட்டேன் என்று எதிர்ப்பு தெரிவித்த இளைஞன் மீது துப்பாக்கிச்சூட்டு பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். அதிர்ஷ்டவசமாக அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. இந்த சம்பவத்துக்கு வன்னி மாவட்ட மக்களின் சார்பாக தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்றதற்காக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதாகவும், அவர் ஒவ்வொரு வழக்குக்கும் தவறாமல் சமூகமளித்து வருவதாகவும், நேற்றைய வழக்கு தவணை ஒன்று இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் தொடர்ச்சியாக நீதிமன்ற விசாரணைக்கு சமுகமளித்து வருவதாக கூறப்படும் அவரை கைதுசெய்யுமாறு அழைப்பாணை அனுப்பியது யார்? அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக கூறும் பொலிஸார் அதனை காட்ட மறுத்தது ஏன்? என்ற கேள்விகளும் எழுகின்றன.

இந்த இடத்தில் குறித்த சந்தேக நபரினுடைய அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது. அத்துமீறி அவர் மீது துப்பாக்கிச்சூட்டு பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் தான் இவ்வாறான சட்டவிரோத சூடுகள், கொலைகள், கடத்தல்கள், காணாமற் ஆக்கப்படுதல்கள் என்பன மலிந்து காணப்பட்டன. தற்போதைய ஆட்சியில் அத்தகைய நிலைமைகள் இல்லை என்று ஜனாதிபதியும், பிரதமரும் கூறிவரும் நிலையிலேயே கேப்பாபிலவு துப்பாக்கிச்சூட்டு சம்பவம் நடைபெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தற்போதைய நல்லாட்சி அரசும் தமிழ் மக்களை கிள்ளுக்கீரைகளாக, புல் பூண்டு பூச்சிகளாக கருதியே நடத்தி வருகின்றது என்பதற்கு ஓர் உதாரணமாகும். கையில் துப்பாக்கி உள்ளது என்ற தைரியத்தில் எதையும் செய்ய துணிபவர்களிடம் எவ்வாறு நியாயத்தை எதிர்பார்ப்பது?

ஆகவே இந்த சட்டவிரோத துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை நடத்தியவர்கள் மீது பக்கச்சார்பற்ற பகிரங்க விசாரணை நடத்தி நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதுவே நல்லாட்சி அரசுக்குள்ள ஒரே வழியாகும். இந்த விடயம் தொடர்பாக பொலிஸ்மா அதிபரின் நேரடி கவனத்துக்கும் தான் கொண்டு சென்றுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். (2-281-250)

# ஐயன்கன்குளம் கிராமத்தினுள் யானைகள் அட்டகாசம்

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஐயன்கன்குளம் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்த காட்டு யானைகள் பெருமளவான பயன்தரு மரங்கள், பயிர்ச் செய்கைகள் ஆகியவற்றை அழித்துள்ளன. ஊர்மனைக்குள் புகுந்த காட்டு யானைகள் அழிவுகளைச் செய்தன. ஊர் மக்கள் திரண்டு பெரும் சத்தமிட்டு யானைகளைத் துரத்தினர். எனினும் மறுநாள் அதிகாலை மீண்டும் காட்டு யானைகள் ஊர்மனைக்குள் புகுந்து மரவள்ளி, பூசணி போன்ற பயிர்களையும் தென்னை, பலா போன்ற பயன்தரு மரங்களையும் அழித்தன.

எனவே உரிய அதிகாரிகள் மக்களின் பயிர் வகைகளை நாசம் செய்யும் காட்டு யானைகளின் அட்டகாசத்தை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2)

# வீதியோரங்களில் போடப்பட்டுள்ள மரத்துண்டங்களால் வடிகாலமைப்பு சேதமடையும் நிலையை எட்டியுள்ளது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுரைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட முள்ளியவளை4ஆம் வட்டார புதறிகுடா பிரதான வீதியின் ஓரங்களில் போடப்பட்டுள்ள மரத்துண்டங்களால் வீதியின் வடிகாலமைப்பு சீர்குலைந்துள்ளதுடன் வீதியும் சேதமடையும் அபாயம் காணப்படுகின்றது.




எனவே சம்பந்தப்பட்ட கிராமத்தினுள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தினர், கிராம அலுவலர் மற்றும் கரைதுரைப்பற்று பிரதேச சபையினர், முள்ளியவளை உப அலுவலகத்தினர் ஆகியோர் இதனை கருத்தில் கொண்டு குறித்த தடைகளை நீக்கி வீதியினுடைய வடிகாலமைப்பையும் வீதியையும் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிரதேசமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

# மாங்குளம்-வெள்ளாங்குளம் பிரதான வீதியில் கால்நடைகளால் போக்குவரத்துக்கு சிரமம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளத்திலிருந்து வெள்ளாங்குளம் செல்லும் பிரதான வீதியில் போக்குவரத்து செய்யும் வாகன சாரதிகள், மக்கள் ஆகியோர் கால்நடைகளால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்

இது தொடர்பாக கருத்து தெரிவித்த மக்கள் குறித்த வீதியில் கட்டாக்காலிகளாக பல கால்நடைகள் திரிவதாகவும் பல்வேறு விபத்து சம்பவங்களால் பலர் காயமடைந்து உயிரிழப்புக்கள் நிகழ்வதாகவும் இவை அநியாய உயிரிழப்பு எனவும் இவைகளை தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதவிர பொதுவாகவே முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து வீதிகளிலும் கால்நடைகளால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)





முரசொலி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி கடந்த முப்பது வருடங்களுக்கு பின்னர் நேற்று முன்தினம் 2 மணியளவில் முரசுமோட்டை வெட்டுக்காடு முரசொலி விளையாட்டுக் கழகத்திடலில் நடைபெற்ற போது...(படங்கள் :- பரந்தன் செய்தியாளர்)

# வைத்தியர்கள் இன்று பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

**வைத்தியர்கள் நியமனம் தொடர்பில் இடம்பெறுவதாகக் கூறப்படும் முறைகேடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நாடளாவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.**

எனினும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கொழும்பு, கம்பஹா, கேகாலை ஆகிய மாவட்டங்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்களின் விடுதி, புற்றுநோய் வைத்தியசாலை, காசல் வைத்தியசாலை உள்ளிட்ட அத்தியாவசிய வைத்தியசாலைகளில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படாது என, அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நவின் சொய்சா தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன்படி, குறிப்பிட்ட வைத்தியசாலைகள் தவிர்த்து ஏனைய வைத்தியசாலைகள் அனைத்திலும் இன்று காலை 08.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இவ்வாறு அடையாளப் பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கே.பி.குறித்த விசாரணை முடிவுகளில் திருப்தியில்லை

## விஜித ஹேரத் விசனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆயுத விநியோகஸ்தர் கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனிற்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச் செயல்கள் குறித்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தனக்கு திருப்தி அளிக்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தனது சட்டத்தரணி ஊடாகவே நீதிமன்றத்திற்கு அளித்த அறிக்கையிலேயே இதனை தெரிவித்தார்.

நீதிமன்றத்தினால் கே.பி.யின் வழக்கு தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.


தாக்கல் செய்த மனு குறித்து கே.பிக்கு எதிராக வழக்கு மே 9இல் ஆரம்பிக்கப்பட்டது.

இருப்பினும் விசாரணைகளை முன்னெடுக்குமாறு நீதவான் பிரீத்தி பத்மன் சுரசேனா அதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர் கேபியின் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி பிரசார செயலாளரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுகாரணமாக, கேபிக்கு ஜூலை 25ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்காக விதிக்கப்பட்டிருந்த தடையானது ஜூலை 26 வரை நீடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

# மண்சரிவில் சிக்கி காணாமற்போன நூறு பேரும் உயிரிழந்து விட்டனர்



(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் கேகாலை மாவட்ட அரநாயக்க பகுதியில் ஏற்பட்ட பாரிய மண்சரிவில் சிக்குண்டு காணாமற்போன சுமார் 100 பேரும் இறந்து விட்டதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரநாயக்க பகுதியில் ஏற்பட்ட இந்த மண்சரிவு அனர்த்தத்தைத் தொடர்ந்து நடைபெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது இதுவரையில் 67 சடலங்கள் தொடர்ந்து நடைபெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது இதுவரையில் 67 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில் 100 பேர் காணாமற்போனோர் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி முதல் இராணுவத்தினர் அப்பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நேற்றுடன் நிறுத்தப்பட்ட நிலையில் காணாமற்போன 100 பேரும் இறந்தவர்களாகவே கருதப்பட வேண்டியிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இந்தப்பகுதியில் இதுவரை படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 67 உடல்களே மீட்கப்பட்டதாகவும் ஏனையோரை உயிருடன் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்ற நிலையிலேயே அவர்கள் இறந்துவிட்டதாக கருதப்பட வேண்டியிருப்பதாக கொடிப்பிலி மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# மலையக பெருந்தோட்டங்கள் நட்டத்தில் இயங்கினால் அரசிடம் கையளிக்கலாம்

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு



மலையக பெருந்தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிப்பதில் உண்மையில்லை என தெரிவித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல நட்டம் என்றால் அனைத்தையும் பொறுப்பேற்க அரசாங்கம் தயார் என தெரிவித்துள்ளார்.

2ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மலையக பெருந்தோட்டக் கம்பனிகள் இலாபத்தில் இயங்குகின்றன. அவ்வாறு கிடைக்கும் இலாபங்கள் அனைத்தும் இரகசியமாக சேமிக்கப்படுகின்றன.

இலாபத்தை மறைத்து நட்டம் என கம்பனிகள் பொய் கூறிவருகின்றன. எனவே பெருந் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதென்றால் அவை அனைத்தையும் பொறுப்பேற்க அரசாங்கம் தயாராகவே உள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனவே தோட்டக் கம்பனிகள் நட்டம் என கூறிக் கொண்டிருக்காமல் அதனை அரசிடம் கையளிக்க முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# மலையகத் தமிழ்மக்கள் புறந்தள்ளப்படுகிறார்கள்

(கொழும்பு)

இலங்கையில் 200 வருடகால வரலாறு கொண்ட மலையகத் தமிழ்மக்களின் நிலவுரிமை, வீட்டுரிமைக்கான கோஷம் தற்போது வலுப்பெற்றுள்ளமைக்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயற்பாடுகளே காரணமாகும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் த.மு. கூட்டணியின் இணை உப தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை மாரத்தென்ன தோட்டத்தில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கான தனி வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அடிக்கல் நாட்டு நிகழ்வு ,மலையக புதிய கிராமங்கள் ,உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் நிதியொதுக்கீட்டில் கடந்த 27 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் மத்திய மாகாணசபை உறுப்பினர் ஆர்.இராஜாராம் உட்பட த.மு.கூட்டணி முக்கியஸ்தர்களும் ட்ரஸட் நிறுவனத்தின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும் அவர் உரையாற்றுகையில் ,மலையகத் தமிழ் சமூகம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து இந்த வருடத்துடன் 200 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. நீண்டகாலமாக எமது சமூகம் அரசியல் அநாதைகளாக இருந்தது. எமது சமூகத்திற்கு தலைமை வகித்த தலைவர்களால் எமது சமூகத்துக்கு மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுக் கொடுக்காத வரலாறே உள்ளது. நிலவுரிமை, வீட்டுரிமை குறித்து வலுவான கோஷம் நீண்டகாலமாக முன்வைக்கப்படவில்லை.

தற்போதைய நல்லாட்சியில் இந்தக்கோஷங்கள் வலுப்பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்ட பகுதிகளில் லயன் வாழ்க்கை ஒழிக்கப்பட்டு புதிய கிராமங்களை ஏற்படுத்துவதற்காக மலையக புதிய கிராமங்கள் ,உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டு அந்தப்பொறுப்பு அமைச்சர் திகாம்பரத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இன்று தோட்டங்களில் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் நிதியுதவியில் எப்படியாவது வீடொன்று கிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த நம்பிக்கை கடந்த காலங்களில் எமது மக்களிடத்தில் காணப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இலங்கையுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக சீசெல்ஸ் அறிவிப்பு

இலங்கையுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக சீசெல்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

பல்வேறு துறைகளில் நில்வி வரும் சவால்களை வெற்றிகொள்ள இலங்கையுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக சீசெல்ஸின் சமூக விவகார, சமூக அபிவிருத்தி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது இருநாடுகளுக்கும்நன்மையை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார்.

நாட்டின் மீன்பிடித்துறைக்கும் சுற்றுச்சூழல் துறைக்கும் இலங்கை அரசாங்கம் வழங்கிய உதவிகள் பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை விவகாரங்களிலும் இலங்கையுடன் உறவுகளை மேம்படுத்திக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். (இ-10)

# சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் இன்று



உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வருடாந்தம் மே 31 ஆம் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. புகைத்தல் பாவனையை கட்டுக் கோப்பிற்குள் கொண்டு வருவதற்காக வருடாந்தம் காலத்திற்கேற்ப ஒரு தொனிப்பொருளை முன்வைத்து மக்களை விழிப்புணர்வூட்டுவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இம்முறை தொனிப்பொருளாக "உருவமற்ற சிகரட் பெட்டிகளை அமுல்படுத்தல்" அமைந்துள்ளது. (எந்த வித விளம்பரங்களுமில்லாத மங்கலான நிறத்தில் அமைக்கப்பட்ட சிகரட் பெட்டி), அவுஸ்திரேலியா, அயர்லாந்து போன்ற நாடுகள் ஏற்கனவே இதனை நடைமுறைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வருடாந்தம் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படுவதன் முக்கியத்துவம்**

இலங்கையில் 2013ஆம் ஆண்டு கணிப்பின் படி டெங்கு நோயினால் மரணித்தோரின் தொகை 89, எயிட்ஸ் நோயினால் 29 பேர் மரணித்தனர், வீதி விபத்தினால் அதே ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன மாதம் வரை மரணித்தோரின் தொகை 500 ஆகும். ஆனால் ஒவ்வொரு வருடமும் இலங்கையில் சிகரெட் புகைப்பதனால் நாளொன்றிற்கு 60 பேர் மரணிக்கின்றனர். வருடாந்தம் இதனால் மரணிப்போரின் தொகை சராசரியாக 20000 ஆகும். சர்வதேச ரீதியாக வருடாந்தம் சுமார் 60 இலட்சம் பேர் புகைத்தலினால் உயிரிழக்கின்றனர். மேலும் இரண்டாம் நிலை புகைத்தலின் காரணமாக (புகைக்காதோர்) 6 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். சிகரெட் புகைப்பவர்களில் அரைவாசி பேர் மரணிப்பதற்கு நேரடி காரணமாக புகைத்தல் அமைகின்றது. அதாவது இருவர் சிகரெட் புகைத்தால் அதில் ஒருவர் மரணிப்பதற்கு பிரதான காரணமாக சிகரெட் பாவனை அமைகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் கூலிப்படையினரில் வருடாந்தம் 20000 பேர் மரணிப்பதனால் நாட்டிற்கு அனைத்து வகையிலும் பாரிய நட்டத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் பல பெண்கள் விதவையாக்கப்படுவதுடன், பல பிள்ளைகளை அநாதையாகுவதனால் இதர பல பிரச்சினைகள் உருவாகின்றன.

ஆசிய நாடுகளில் தொற்றாத நோய்கள் அதிகரித்து வருகின்றமை சுகாதாரத்திற்கு பெரும் சவாலாகும். சிகரெட் புகைத்தலானது தொற்றாத நோய்கள் ஏற்படும் பிரதான 4 காரணிகளில் ஒன்றாக உள்ளடக்கப்படுகின்றது. அதாவது புற்றுநோய், மாரடைப்பு, பாரிசவாதம், சுவாசநோய்கள், குருதி அமுத்தம் போன்ற அனைத்து விதமான தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கும் முதலாவது பிரதான காரணமாக அமைவது சிகரெட் பாவனை ஆகும்.

சிகரெட் புகைத்து புற்று நோய்கள், மரணங்கள் ஏற்படுவதற்கு முன்னரே உதடுகள் கறுத்து, கன்னங்களில் குழி விழுந்து, கண்கள் சிவந்து கலங்கி அவலட்சணமான தோற்றத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் வாய் துர்நாற்றம், பாலியல் பலவீனம் போன்ற அசௌகரியங்களுக்கும் சிகரெட் புகைப்பவர்கள் ஆளாகின்றனர். சிகரெட் புகைக்காமல் மலசலகூடம் கூட செல்ல முடியாத அளவு வாழ்க்கை சிகரெட்டிற்கு மட்டுப்படுத்தப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை போன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதிகமானோர் கஷ்டப்பட்டு உழைக்கும் தனது சம்பளத்தில் பெரும பகுதியை சிகரெட் புகைப்பதற்கு செலவழிக்கின்றனர். இதனால் தனி மனித பொருளாதார பிரச்சினை ஏற்படுவது மட்டுமின்றி நாட்டின் பொருளாதாரமும் பாதிப்படைகின்றது. சிகரெட் கம்பனியின் 92வீதமான பங்குகள் பிரித்தானிய அமெரிக்காவிற்கு சொந்தமான பங்குகளாகும். சிகரெட் புகைப்பதனால் ஒரு நாளைக்கு சிகரெட் கம்பனி 27 கோடி ரூபா இலாபம் ஈட்டுகின்றது. அதில் 92 வீதமான தொகை பிரித்தானிய அமெரிக்காவிற்கு சென்றடைகின்ற அதேவேளை இலங்கை அரசாங்கம் வருடத்திற்கு 222 பில்லியன் சுகாதாரத் துறைக்கு செலவழிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. சிக்ரெட் புகைப்பவருக்கு மட்டுமின்றி கர்ப்பிணித் தாய்மார்கள், பிள்ளைகள் என சிகரெட் புகைக்காத பலரும் பெரிதளவில் இதனால் பாதிப்படைகின்றனர்.

நாடு என்கின்ற ரீதியில் சிகரெட் பாவனையை குறைக்கும் நோக்கிலும் ,மேற் குறிப்பிட்ட பாதிப்புக்களை குறைப்பதற்காகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டும் நோக்கிலும் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

**இலங்கையில் சிகரெட் பாவனை**

மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் 2015ம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையின்படி 15 வயதிற்கு மேற்பட்ட ஆண்களில் 31வீதமானோர் சிகரெட் புகைக்கின்றனர்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கைக்கேற்ப 2014ம் ஆண்டில் 4 பில்லியன் சிகரெட்டுக்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

கடந்த 10 வருடத்துடன் ஒப்பிடுகையில் 14வீதமான வீழ்ச்சி காணப்படுவதுடன், 25 வயதிற்கு மேற்பட்டவர்களின் சிகரெட் பாவனை 35.5 வீதமாக இருக்கும் அதேவேளை, 15 தொடக்கம் 24 வயதிற்குட்பட்ட இளைஞர்களின் சிகரெட் பாவனை 25.1 வீதமாகவும் காணப்படுகிறது. அதாவது இளைஞர்களின் பாவனை குறைந்து வருவதானது மகிழ்ச்சியடையக் கூடிய ஒரு விடயமாகும்.

**கம்பனிகளின் நேரடித் தந்திரோபாயங்கள்**

இருவர் சிகரெட் புகைத்தால் ஒருவர் மரணிக்க நேரடி காரணமாக அமையும் உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்யும் சிகரெட் கம்பனியின் பிரதான நோக்கம் அவர்களின் விற்பனையை மேம்படுத்தலும், இலாபத்தை அதிகரித்துக் கொள்வதுமே ஆகும். இதற்காக இவர்கள் மேற்கொள்ளும் கீழ் காணும் உத்திகளை மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

அழகான இளைஞர், யுவதிகளை பயன்படுத்தி பொது இடங்களில் சிகரெட் புகைக்க வைக்கின்றனர். இதன் பிரதான நோக்கம் இளைஞர்களை ஈர்ப்பதாகும்.

சிகரெட் விற்பனை செய்யும் கடைகளில் மிகக் கவர்ச்சிகரமான முறையில் சிகரெட் பெட்டிகளைக் காட்சிப்படுத்தி வைத்திருத்தல்,. மேலும் கூடுதலாக சிகரட் விற்பனை செய்யும் கடைகளுக்கு "அபிஷேக" என்ற குறியீட்டை வழங்கி அவர்களுக்கு சன்மானங்கள் கொடுத்து ஊக்குவிக்கப்படுகின்றன.

**அனுசரணைகள் வழங்குதல்**

சிகரெட் கம்பனியானது பல பொ்து நிகழ்ச்சிகளுக்கு தங்களின் அனுசரணைகளை வழங்கி நன்மதிப்பை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிப்பதுடன் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளினூடாக விளம்பரங்களையும் மேற்கொள்கின்றது.

உதாரணம்: 2015ம் ஆண்டு பொருளாதார அமைச்சுடன் இணைந்து வரட்சியான பிரதேசங்களுக்கு 100 கிணறுகள் அமைத்துக் கொடுத்திருந்தமை.

**CSR செயற்றிட்டங்களை மேற்கொள்ளுதல்**

2015ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நிலையான விவசாய அபிவிருத்தி செயற்றிட்டத்தை (Sustainable Agriculture Development Project SADP) நடைமுறைப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**திரைப்படங்கள**

இளைஞர்கள் விரும்பிப் பார்க்கின்ற திரைப்படங்களில் நடிக்கும் நடிகர் நடிகைகளுக்கு பணம் கொடுத்து பாடல், வசனம், காட்சி, நகைச்சுவை போன்ற அனைத்து அம்சங்களிலும் சிகரெட் விளம்பரங்களை திணித்திருத்தல்.

மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையமானது 2015 ஜூன் மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் இலங்கையில் திரையிடப்பட்ட 18 தமிழ்த் திரைப்படங்களில் மேற்கொண்ட ஆய்விற்கமைய மொத்தமாக ஒரு மணித்தியாலயம் 15 நிமிடங்கள் சிகரெட் விளம்பரங்கள் திரைப்படங்களில் உள்ளடக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஊடக விளம்பரங்கள்**

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளங்கள் போன்ற அனைத்து ஊடகங்களையும் பயன்படுத்தி மிக நுட்பமாக தங்களுடைய விளம்பரங்களை மேற் கொள்ளுதல்.

உதாரணம்: அண்மையில் சிகரெட் கம்பனியின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்ட நிலையான விவசாய அபிவிருத்தி செயற்றிட்டம் பல பத்திரிகைகளிலும் வெளி வந்திருந்தமை.

**போலியான ஆய்வுகளை மேற்கொள்ளல**

பொது இடங்களில் இளைஞர்கள் மத்தியில் சிகரெட் பாவனையை தூண்டுகின்ற விதத்தில் வினாக்களை கேட்டு சிகரெட் பாவனையை தூண்ட முயற்சித்தல்.

**சிகரெட் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி வைத்திருத்தல்**

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நிஷாந்த டி மெல் 2015ம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்விற்கேற்ப அரிசி, மா, சீனி, தேங்காய், போன்ற பொருட்களுக்கு விலையேற்றம் நடந்தாற் போல் சிகரெட்டிற்கான விலை அதிகரிப்பு ஏற்படவில்லை.மேலும் சிகரட்டின் விலையின் 70வீத வரியாகக் காணப்படுவதால் அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய வரித் தொகையும் இழக்கப்பட்டிருக்கின்றன, அதாவது கடந்த 10 வருடங்களில் 100 பில்லியன் ரூபா அரசாங்கம் இழந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது, ஆய்வின் படி 2010ஆம் ஆண்டில் சிகரெட் ஒன்றின் விலை ரூபா 45ஆக இருந்திருக்க வேண்டும்




ஆனால் 2016ம் ஆண்டிலும் சிகரெட் ஒன்றின் விலை ரூபா 35 ஆகவே இருக்கின்றது.

இந்நிலையில் இம்முறை வரி அதிகரிப்பின் போதும் சிகரெட்டிற்கான வரி அதிகரிக்கப்படவில்லை என்பதும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும்.

**புகையிலை உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தல்**

இலங்கையின் வட பகுதி உட்பட, மொனராகலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் சூழலுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற புகையிலை உற்பத்தியை ஊக்குவித்து வருகின்றனர்.

2011ஆம் ஆண்டு சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் பொருளியற்றுறையினரால் ஹங்குராங்கெத்த, வலப்பனை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் உட்பட ஊவா மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்ட புகையிலை உற்பத்தி தொடர்பான ஆய்வின் போது சில கணிப்புக்கள் பெறப்பட்டுள்ளன.

ஏனைய பயிர்ச்செய்கையை விட புகையிலைப் பயிர்ச் செய்கைக்கான செலவு அதிகம், கூடுதலான இரசாயண வகைகளை யும் பூச்சிக் கொல்லிகளையும் பாவிக்க வேண்டும்.

❖ புகையிலை உற்பத்தி செய்யப்பட்ட மண்ணில் ஏனைய பயிர்ச்செய்கை மேற் கொள்வது கடினம்.

❖ புகையிலை உற்பத்தி செய்தமை யால் அங்கு வசித்து வந்த முயல்கள், தேனீக்கள் என்பன கூட அவ்விடங்களை விட்டு வெளியேறிவிட்டது.

❖ புகையிலை உற்பத்தியிலிருந்து ஏனைய பயிர்ச் செய்கைக்கு மாறிய கமக்காரர்கள் நிலையானதும், திருப்தியுமானதுமான இலாபத்தை ஈட்டியிருந்தனர். அத்தோடு ஏனைய பயிர்களுக்கு சந்தையில் பொது இடமும் பேரம் பேசும் வாய்ப்பும் கிடைததாக கமக்காரர்கள் தெரிவித்திருந்தனர்.

❖ புகையிலை உற்பத்தியிலிருந்து ஏனைய உற்பத்திகளுக்கு மாறிய கமக்காரர்களின் குடும்ப நிலை மற்றும் பிள்ளைகளின் கல்வி நிலையிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருந்தது.

ஆயினும் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி 2020ம் ஆண்டு புகையிலை உற்பத்தியை முற்றாக தடை செய்வதாக தெரிவித்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**சிகரெட் பாவனையை தடுக்கும் முறைகள**

சிகரெட் பாவனையை தடுப்பதற்கு பிரதான மூன்று முறைகள் காணப்படுகின்றன.

01.பயன் தகு கொள்கைகளை உரு வாக்குதல் (Effective policies)

02.பழகும் முன் காத்தல் (Prev ention)

03.உளவியல்சிகிச்சை முறை (Coun seling)

**பயன் தகு கொள்கைகளை உருவாக்குதல் (Effective policies)**

சிகரெட் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு சட்ட ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே இம்முறை பாவிக்கப்படுகின்றது.

சரியான முறையில் சிகரெட்டின் விலையை அதிகரித்தல் மற்றும் வரி அறவீடு செய்தல்.

சிகரெட்டிற்கான வரியை உரிய முறையில் அதிகரித்தல்

சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கை படங்களை பொறித்தல் மற்றும் சிகரெட் பெட்டிகளின் கவர்ச்சியைக் குறைக்க உருவமற்ற, விளம்பரமற்ற சிகரெட் பெட்டிகளை அமுலாக்கல் (Plain packaging)

சிகரெட்டை கொள்வனவு செய்யக் கூடிய வயதெல்லையை தீர்மானித்தல்.

**பழகும் முன் காத்தல் (Prevention)**

சிகரெட் பாவனையை பழகுவதற்கு முன்னரே அது பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி தடுத்தலானது மிகப் பயன் கூடிய தும், இலகுவானதுமான முறையாகும்.

சிகரெட் பாவனையினால் ஏற்படும் இனங்காணக் கூடிய தாக்கங்களை சிறுவர், இளைஞர்களுக்கு புரியவைத்தல்.

இளைஞர்கள், சிறுவர்களை ஏமாற்றுவதற்கு கம்பனிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற தந்திரோபாயங்கள் தொடர்பாக தெரியப்படுத்தல். அவ்வாறான விளம் பரங்களுக்கு ஏமாறாமலிருப்பதற்குரிய உத்திகளை தெளிவுபடுத்தி வழிகாட்டுதல்.

சிகரெட் பாவனை தொடர்பான மூடநம்பிக்கைகளையும் அதன் உண்மைகளையும் தெரியப்படுத்தல்.

**உளவியல் சிகிச்சை முறை (Counseling)**

சிகரெட்டை தற்போது பாவித்து வருபவர்களை அதிலிருந்து விடுபட வைப்பதற்காக உளவியல் சிகிச்சை முறை பாவிக்கப்படுகின்றது.

உள நல வைத்திய ஆலோசனையின் படி பாவனையாளர்கள் அதிலிருந்து விடுபட பின்வரும் விடயங்களை மேற் கொள்ளலாம்.

01. சிகரெட் பாவனையை நிறுத்துவதற்கான நாளொன்றை தீர்மானிக்கவும்.

02. இது தொடர்பில் ஏனையோருடன் கலந்துரையாடவும் (மனைவியிடம், பிள்ளைகளிடம்,நண்பர்களுடன், அயலவர்களுடன்)

03. இறுதியில் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றி சிந்திக்கவும் (சிகரெட் பாவனையை நிறுத்தியவுடன் நண்பர்களிடமிருந்து கிடைக்கவிருக்கும் தாக்கங்கள், விஷேட தினங்களின் போது நீங்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி திட்டமிடுங்கள்

04. சிகரெட் பாவனையை நிறுத்த வேணடுமென்ற தீர்மானத்தை முறியடிக்கவும் சிகரெட் பாவனையை தூண்டுவதற்கும் காத்திருக்கும் குழுவிற்கு பதில் கூற தயாராகுங்கள் (உதாரணமாக நான் சிகரெட் புகைப்பதை நிறுத்திவிட்டேன் என்னை பலவந்தப் படுத்த வேண்டாம் எனக் கூறுங்கள்)

05. சிகரெட் பாவனையை நிறுத்திய பின்னரும் புகைக்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வரும் ஆசை பற்றியும் சிந்தியுங்கள் (சிகரெட் புகைக்காமல் இருப்பது உங்களுக்கு பெறும் அசௌகரியத்தை தருமானால் அதனைப் பற்றி அதிருப்தியாக உணராதீர்கள், மீண்டும் நிறுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள்)

06. சிகரெட்டிலிருந்து விடுதலையான பின்னருள்ள சந்தோஷத்தை அனுபவியுங்கள் அது பற்றி பேசுங்கள்.


**மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம்**

# மத்தியதரைக் கடலில் மூழ்கி 700 அகதிகள் பலி!

சட்ட விரோதமாக கப்பல்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முயன்ற 700இற்கும் மேற்பட்ட அகதிகள் மத்தியதரைக்கடல் பகுதியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக ஏற்பட்ட விபத்துகளில் பலியாகியுள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட சிரியா, லிபியா போன்ற நாடுகளிலிருந்து ஐரோப்பாவில் புகலிடம் தேடி அகதிகள் சட்ட விரோதமாக படகுகள், கப்பல்கள் மூலமாக செல்கின்றனர். ஆனால் மத்தியதரைக் கடல் பகுதியில் இப்போது மோசமான வானிலை, கடல் சீற்றம் காணப்படுகிறது. இதனை அறியாமல், தப்ப முயன்ற அகதிகள் கப்பல்கள் கடந்த சில நாட்களாக விபத்தில் சிக்கி மூழ்கி வருகின்றன.

இது தொடர்பாக ஐ.நாவின் அகதிகளுக்கான ஆணையர் அலுவலக செய்தித் தொடர்பாளர் காரலோட்டாசாமி கூறியதாவது, லிபியாவிலிருந்து ஐரோப்பாவை நோக்கிப் புறப்பட்ட அகதிகள் படகு, கடந்த புதன்கிழமை கவிழ்ந்ததில் 100 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.



சம்பவ இடத்துக்கு அருகே நின்று கொண்டிருந்த இத்தாலி கடற்படைக் கப்பலில் இருந்த வீரர்களால் அவர்களை காப்பாற்ற முடியவில்லை.

லிபியாவின் சபராதா துறைமுகத்தில் இருந்து அகதிகளை ஏற்றி வந்த மற்றொரு படகு வியாழக்கிழமை கவிழ்ந்ததில் 550 பேர் வரை உயிரிழந்தனர். இந்த படகில் மொத்தம் 670 பேர் இருந்தனர். அந்த படகில் இன்ஜின் இல்லை. இவர்களில் 79 பேரை சர்வதேச ரோந்து படையினர் மீட்டுள்ளனர். இதுவரை 15 உடல்கள் கிடைத்துள்ளன.

மூன்றாவதாக மத்தியதரைக் கடல் பகுதியில் வெள்ளிக்கிழமை கவிழ்ந்து விபத்துக்குள்ளான படகிலிருந்து 135 அகதிகளை கடற்படைக் கப்பல் மீட்டது. கடலில் மூழ்கி உயிரிழந்த 45 பேரது உடல்கள் மீட்கப்பட்டன. அந்தப் பகுதியில் தொடர்ந்து தேடுதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. (இ-10)

### ஐ.எஸ்.தாக்குதலால்

# ஹீட் நகரத்தை விட்டு வெளியேறும் மக்கள்



பலூஜா நகரை மீண்டும் கைப்பற்ற ஈராக் அரசு படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில்,. ஐ.எஸ். தீவிரவாதிகள் யூப்ரடெஸ் நதிக்கரையில் இன்னும் வடக்கே அமைந்துள்ள மற்றொரு நகர் மீது பெரிய தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஐ.எஸ் .அமைப்பை சேர்ந்த தற்கொலை தாக்குதல்காரர்கள் ஹீட் நகருக்குள் ரொக்கெட் தாக்குதல்களை தொடுத்த பின்னர் நுழைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹீட் நகரில் உள்ள பல மாவட்டங்கள் ஐ.எஸ். கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக சொல்லப்படுகிறது. இச் சூழலில் பல குடும்பங்கள் அந்நகரை விட்டு வெளியேறி வரு கிறார்கள்.

அரசு படைகளும், பழங்குடியின போராளிகளும் தொடர்ந்து ஐ.எஸ் தாக்குதல்களுக்கு எதிர்த் தாக்குதல்களை தொடுத்து வருகிறார்கள்.

கடந்த மாதம்தான், ஐ.எஸ் பிடியிலிருந்து ஹீட் நகரத்தை மீட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஈரான் ஹஜ் பயணிகளுக்கு இடையூறு; சவுதிக்கு மக்களை அனுப்ப மாட்டோம்

## ஈரான் அமைச்சர் அறிவிப்பு

இந்த வருடம் ஈரான் அதன் குடிமக்களை ஹஜ் வழிபாட்டிற்காக சவுதி அரேபியாவிற்கு அனுப்பாது என ஈரானின் பண்பாட்டுத்துறை அமைச்சர் அலி ஜன்னடி தெரிவித்துள்ளார்.

சவுதி அதிகாரிகள் ஈரானிய புனித யாத்திரிகர்களின் பங்களிப்பிற்கு இடையூறு விளைவிப்பதால் அது சாத்தியமற்றது என அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஹஜ் பயணத்தின்போது, ஈரானியர்கள் பலர் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான புனித யாத்திரிகர்கள் மோசமான கூட்ட நெரிசலில் சிக்கி கொல்லப்பட்டனர்

இச்சம்பவத்திற்கு ஈரான், சவுதி அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியது.

சிரியா மற்றும் ஏமன் உட்பட பல்வேறு போர் பகுதிகளில் இந்த இரு பிராந்திய போட்டி நாடுகளும் வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்டுள்ளதால் ஈரான் மற்றும் சவுதி அரேபியாவிற்கு இடையேயான பதற்ற நிலை அதிகரித்துக் கொண்டு வருகிறது. (இ-10)

# கனடா நாட்டின் அதிஉயர் கடேற் விருதைப்பெற்ற தமிழ் மாணவன்



கனடாவின் அதி உயர் கடேற்(Cadet) விருது அமோஸ் டன் ஸ்டன் என்ற இலங்கைத் தமிழ்மாணவனுக்கு வழங்கப் பட்டுள்ளது. கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீவன் ஹார்பர் அண்மையில் இந்த விருதை வழங்கி கௌரவித்தார்.

கனேடிய கடேற் விருதுகளில் அதி உயர் விருதாகக் கருதப்படும் Lord Strathcona Award விருதே, அமோஸிற்கு வழங்கப்பட்டுள்ளது.

உடல் பயிற்சி மற்றும் இராணுவப் பயிற்சிகளில் அதி உச்ச திறமைகளை வெளிப்படுத்தும் கடேற் வீரர்களை ஊக்குவித்து கௌரவிக்கும் நோக்கில் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றது.

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட அமோஸ் தற்போது கனேடிய பிரஜையாவார். மணிடன்ஸ்டன் - மேரிடண்ஸ்டன் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வாரன அமோஸ் American Football விளையாட்டிலும் மிகச்சிறந்த திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# மாலியில் கண்ணி வெடியில் சிக்கிய ஐ.நா.அதிகாரிகள் உட்பட 5பேர் பலி

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் மொப்தி பகுதியில் இராணுவ வீரர்களுடன் ஐ.நா. குழுவினர் இராணுவ வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்தனர். அந்த பகுதியில் கண்ணிவெடி புதைக்கப்பட்டு இருந்ததால் கண்ணி வெடியில் சிக்கி வாகனம் வெடித்து சிதறியது. இதில் வாகனத்தில் சென்ற 5 பேரும் பலியானார்கள். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

சம்பவம் நடந்த பகுதி, மாசினா விடுதலை முன்னணி என்ற தீவிரவாத அமைப்பின் ஆதிக்கத்தில் உள்ள பகுதி. மேலும் அந்த அமைப்பு ஒரு ஜிகாதி குழு என்பதும் அதற்கு, அல்-கொய்தவுடன் தொடர்பும் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(இ-10)

# ஹெய்டி முழுவதும் சிவப்பு எச்சரிக்கை

அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு தொடர்ந்து போராடி வரும் ஹெய்டியில், தற்போது பரவி வரும் கொலரா நோய், அதன் சுகாதார நெருக்கடிகளை மிகவும் தீவிரமாக்கியுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஹெய்டியில் இடம்பெற்ற மிக மோசமான நிலநடுக்கத் தைத் தொடர்ந்து, கொலரா பரவுகை அங்கு அதிகரித்தது. இந்த வருடத்தில் மாத்திரம் இது வரை 16 ஆயிரம் கொலராநோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளதாக ஹெய்டியின் பொதுச் சுகாதாரம் மற்றும் சனத்தொகை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக ஆண்டுதோறும் 175 பேர் கொலராவினால் பலியாகின்றனர். கடந்த ஏப்ரல் மற்றும் தற்போதைய மே மாதங்களில் மாத்திரம் 27 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக நான்கு திணைக்களங்கள் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளன.

கொலரா நெருக்கடி ஆரம்பித்தது முதல் இதுவரை ஏறக்குறைய 10 ஆயிரம் உயிரிழப்புக்கள் ஹெய்டியில் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அங்கு கொலரா நோயாளர்களுடன் ஒப்பிடும் போது, மருத்துவ வசதிகள் குறைவாகவே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# வெனிசுலா நாட்டில் மர்மநபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு 11 பேர் பலி!

(கரகஸ்)

தெற்கு அமெரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள வெனிசுலா நாட்டில் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த மர்மநபர்கள் 11 பேரை பிடித்து வரிசையாக நிற்கவைத்து சுட்டுக் கொன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெனிசுலா நாட்டின் டிரிஜுல்லா மாவட்டத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்குள் நேற்று முன்தினம் ஆயுதங்களுடன் ஒரு மர்ம கும்பல் புகுந்தது. அங்குள்ள வீடுகளில் குடியிருந்தவர்களை வெளியே இழுத்துவந்து வரிசையாக நிற்கவைத்து துப்பாக்கிகளால் கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றுவிட்டு, வாகனங்களில் ஏறி தப்பிச் சென்றது.

இந்த தாக்குதலில் 15, 16, 17 வயதைச் சேர்ந்த தலா ஒருவரும், 18 முதல் 76 வயதுக்குட்பட்ட எட்டுப் பேரும் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



கொல்லப்பட்ட 76 வயது நபர் கொலம்பியா நாட்டைச் சேர்ந்த ஆல்பர்ட்டோ டியாஸ் பாட்டினோ என்பது தெரிய வந்துள்ளது.


இந்த கொடூர சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார், கொலையாளிகளை தேடி வருகின்றனர். (இ-10)

# தவறான பாதையில் நாட்டை வழிநடத்தி செல்லமாட்டேன்

## பிரதமர் மோடி திட்டவட்டம்

(பெங்களூர்)

**தவறான பாதையில் நாட்டை வழிநடத்தி செல்மாட்டேன் என பிரதமர் நரேந்திர மோடி திட்ட வட்டமாக தெரிவித்துள்ளார்.**



மத்தியில் பா.ஜனதா தலைமையில் ஆட்சி அமைந்து 2 ஆண்டுகள் முடிவடைந்ததையொட்டி கர்நாடக மாநிலம் தாவணகெரே நகரில் நேற்று முன்தினம் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடந்தது. இதில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

மத்தியில் பா.ஜனதா ஆட்சி அமைந்து 2 ஆண்டுகள் முடிவடைந்து உள்ளது. முந்தைய காங்கிரஸ் அரசு பெரிய பெரிய திட்டங்களை செயற்படுத்தியது. இதனால் நாடு பயன் அடையவில்லை. அதில பெரிய பெரிய ஊழல் நடந்தது. அவர்கள் தான்(காங்கிரஸ்) பயன் அடைந்தனர்.

**வளர்ச்சித்திட்டங்கள்**

அதே குற்றத்தை நான் செய்யமாட்டேன். நான்நாட்டை தவறான பாதையில் வழி நடத்தி செல்ல மாட்டேன்.

பா.ஜனதா ஆட்சியில் அனைத்து தரப்பு மக்களின் வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அமுல்படுத்தி வருகிறோம். திறன் மேம்பாட்டு திட்டம், ஏழை மக்களின் பாதுகாப்பை கருதி காப்பீட்டு திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம். இதன் மூலம் 25 கோடி ஏழை மக்கள் பயன் அடைந்து வருகிறார்கள். ஜன்-தன் திட்டத்தின் மூலம் தொடங்கப்பட்ட வங்கி கணக்குகளில் ரூ.37 ஆயிரம் கோடி சேமிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழை மக்களை செல்வந்தர்களாக கருதும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த 60 ஆண்டுகளில் செய்யாத வளர்ச்சி பணிகளை 2 ஆண்டுகளில் செய்துள்ளோம். நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தில் வறட்சி ஏற்படுகிறது. விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

இதன் காரணமாக 11 மாநிலங்களின் முதலமைச்சர்களை தனித்தனியாக அழைத்து ஆலோசனை நடத்தினேன். தண்ணீரை தேக்கி வைக்கும் திட்டங்களை அமுல்படுத்தும்படி அவர்களுக்கு கூறி இருக்கிறேன்.

இடைத்தரகர்களின் பிடியில் இருந்து விவசாயி களை விடுவிக்க வேண்டும் என்பதுதான் எங்களின் பெரிய முழக்கம். நாங்கள் மின்னணு சந்தையை அறிமுகம் செய்துள்ளோம். இதன் மூலம் விளைபொருட்களை விவசாயிகளே விற்பனை செய்யும் அதிகாரத்தை கொடுத்துள்ளோம். விவசாயிகள் அதிக விலையை பெற முடியும். 2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின்வருமானத்தை இரட்டிப்பு ஆக்க வேண்டும் என்பது எனது கனவு. அந்த கனவை நிறைவேற்ற எனககு நீங்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

பாரதச் செய்தி

# பிரதமர் மோடியின் தாயாருக்கு விருது



உத்தரப்பிரதேச மாநிலத்தில் இருந்து வெளியாகும் 'நாரி ஜக்ரான்' என்ற இந்தி பத்திரிகை ஆண்டுதோறும் 'நாரி ஜக்ரான் சமமான்' என்ற விருதுகளை வழங்கி பல்துறையை சேர்ந்த பெண்பிரபலங்களை கௌரவித்து வருகிறது.

அவ்வகையில், இவ்வாண்டுக்கான இந்த விருதை பெறுபவர்கள் பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென் இடம்பெற்றுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள புனிதநகரமான வாரணாசியில் நேற்று முன்தினம் 'நாரி ஜக்ரான் சம்மான்' விருது வழங்கும் விழா நடைபெற்றது.

'நாரி ஜக்ரான்' பத்திரிகையின் ஆசிரியரான மீனா சவுபே அளித்த இவ்விருதினை பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென்னின் சார்பில் அவரது மூத்த மகனான சோம்பாய் தாமோதர் தாஸ் மோடி பெற்றுக் கொண்டார்.

தனது தாயாரை இவ்விருதுக்கு தேர்வு செய்தமைக்காக நன்றி தெரிவித்து இவ்விழாவில் பேசிய சோம்பாய் தாமோதர் தாஸ் மோடி, மகளிரின் பாதுகாப்புக்காக இந்த விருதை நாட்டில் உள்ள அனைத்து தாய்மார்களுக்கும் அர்ப்பணம் செய்வதாக தெரிவித்தார். 96 வயதாகும் தனது தாயாரால் தற்போது தொலைதூர பயணங்களை மேற்கொள்ள முடிவதில்லை. எனவே, அவரது சார்பாக இந்த விருதை பெற்றுக்கொள்ள நான் வந்திருக்கிறேன்.

இதற்கு முன்னர், கடந்த 2014 ஆம் ஆண்டு நான் வாரணாசி நகருக்கு வந்திருக்கிறேன். இந்த வாரணாசி தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக நரேந்திர மோடி தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு வாரணாசி நகரத்தில் ஏராளமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# சோனியா வீட்டை முற்றுகையிட்டு பா.ஜ.கவினர் நேற்று ஆர்ப்பாட்டம்

(டில்லி)

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது கடந்த 2008-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் டில்லியில் உள்ள பாட்லா ஹவுஸ் நீதிமன்றத்தில் என்கவுண்டர் நடைபெற்றது. இந்த என்கவுண்டரில் இந்தியன் முஜாகிதீன் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த இரண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஒருவன் தப்பியோடிய நிலையில், இரண்டு பயங்கரவாதிகள் மட்டும் கைது செய்யப்பட்டனர். பாட்லா என்கவுண்டரில் தப்பிய நபர் ஒருவர் தற்போது ஐ.எஸ். ஐ.எஸ்.அமைப்பில் உள்ளார்.

இந்த என்கவுண்டரில் பொலிஸ் ஆய்வாளர் மோகன் சந்த் ஷர்மாவும் பலியானார். கைதான பயங்கரவாதி மீது பொலிஸ் ஆய்வாளரை சுட்டுக் கொன்றதாகவும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.



இதனிடையே பாட்லா ஹவுஸ் என்கவுண்டர் போலியானது என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திக் விஜய்சிங் கடந்த வாரம் சர்ச்சைக்குரிய கருத்தினை தெரிவித்தார்.

மேலும் மத்திய அரசும் இந்த என்கவுண்டர் குறித்து நீதி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இருப்பினும் அப்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் மத்திய அமைச்சராக இருந்த சிவராஜ் பாட்டில் திக்விஜய் சிங்கின் கருத்துக்கு மறுப்பு தெரிவித்தார். பாட்லா ஹவுஸ் என்கவுண்டர் போலியானது அல்ல என்றும் நேர்த்தியானது என்றும் கூறினார்.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து டில்லியில் உள்ள அக்கட்சியின் தலைவர் சோனியா காந்தியின் இல்லம் முன்பாக பா.ஜ.கவினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். (இ-10)

# கறுப்பு பணத்தை மீட்க சுவிஸ் செல்கிறார் மோடி

(டில்லி)

கறுப்பு பணத்தை மீட்டு வர மோடி அரசு ஒரு சிறு துரும்பை கூட நகர்த்தவில்லை என்று காங்கிரஸ் கூறி வரும் குற்றச்சாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க பிரதமர் மோடி தீவிரமாக உள்ளார்.

பல இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு இந்தியர்கள் பதுக்கிய கறுப்பு பணத்தை இந்தியா கொணடு வருவது குறித்து சுவிட்சர்லாந்து அரசுடன் நேரடியாக பேச அவர் முடிவு செய்துள்ளார்.

பிரதமர் மோடி அடுத்த வாரம் அமெரிக்கா உட்பட ஐந்து நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறார். டில்லியில் இருந்து எதிர்வரும் 6 ம் திகதி அவர், ஆப்கானிஸ்தானுக்கு சென்று விட்டு அங்கிருந்து டோகா வழியாக சுவிட்சர்லாந்து நாட்டுக்கு செல்லவுள்ளார்.

மோடி, சுவிட்சர்லாந்து போவதற்கான எல்லா ஏற்பாடுகளை இரு நாட்டு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும், அதிகார பூர்வமாக வெளியுறவுத்துறை தரப்பில் உறுதி செய்யப்படவில்லை. (இ-10)




# சிறுவர் அரங்கம்



# கண்ணாடிப்புலி

...'இல்லை. என்னைப் பார்த்த படியே இருந்தது.' என்றது கொள்ளிக்கண் புலி.

'அப்படி வா வழிக்கு. அது வெறும் பொம்மைப் புலி. நம்ம உடம்பில் எவ்வளவு சதை இருக்கு. நம்மை ஒரு சின்ன சட்டத்தில் அடைச்சுட முடியுமா? அப்படி சுருங்குறதுக்கு நம்ம உடம்பு என்ன பஞ்சு மிட்டாயா?' என்றது.

அப்போது இடைமறித்து இன்னொரு புலி 'தாத்தா, மனித வாடை அடிக்குது. பேச்சை நிறுத்திட்டு மோப்பம் பிடிங்க. இந்த மரத்தின் மேலேயிருந்துதான் வாடை வருது. புலி பிடிக்க வந்த மனுசன் இந்த மரத்து மேலதான் இருக்கணும்' என்றது.

கிழட்டுப் புலி ஆமோதித்தது. அது மற்ற புலிகளிடம் 'நாம் ராத்திரி பூரா இங்கேயே டேரா போடுவோம். அவன் எப்படியும் காலையில் மரத்தை விட்டு இறங்கி வருவான். அப்போ அவனை பிடிச்சு காலை ஆகாரமா சாப்பிடலாம்' என்றது.

கிழட்டுப் புலியின் பேச்சைக் கேட்டு ராம்லால் நடுங்கி



னான். 'ஒரு புலியை ஏமாற்றலாம். இத்தனை புலிகளை எப்படி சமாளிப்பது?' என்று குழம்பினான்.

அப்போது காற்று பலமாக வீசியது. கிளைகள் வேகமாகக் குலுங்கின. அதனால் இன்னாரு கிளையில் தூங்கியபடி இருந்த ஒரு குரங்கு, தடுமாறிக் கீழ் நோக்கி விழத் தொடங்கியது.

ராம்லாலின் மூளை சுறுசுறுப்பானது. அவன புலிகளுக்குக் கேட்கும்படி கத்தினான்.

'குரங்கு நண்பா, கீழே நல்ல வேட்டை காத்திருக்கு. நீ நேத்திக்கு ஒரு புலியைப் பிடிச்சியே. அது மாதிரி நிறையப் புலிகள் கீழே இருக்கு.

ஒரு குதி குதிச்சு ஒவ்வொரு புலியா பிடிச்சுக்கிட்டு வா. அதுகளை சட்டத்தில் அடைச்சுடுறேன்' என்றான்.

புலிகள் அவனது கர்ஜனையைக் கேட்டு நடுங்கின. அதே சமயம், குரங்கு கிழட்டுப் புலியின் மீது வந்து விழுந்தது.

அது விழுந்த வேகம், கிழட்டுப் புலியைத் திக்குமுக்காடச் செய்தது.

அது அதிர்ச்சியில் ஓடத் தொடங்கியது.

தலைமைப் புலி ஓடியதைக் கண்டு மற்ற புலிகளும் நாலா பக்கமும் சிதறின.

காலையானதும் ராம்லால் தெம்பாக மரத்திலிருந்து இறங்கி, கிராமம் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

(முற்றும்)




- 1223 - செங்கிஸ் கானின் மங்கோலியப் படைகள் கிப்சாக்கியரை சமரில் தோற்கடித்தனர்.
- 1889 - பென்சில்வேனியாவில் ஜோன்ஸ்டவுன் நகரில் அணைக்கட்டு ஒன்று உடைந்ததில் 2,200 பேர் கொல்லப்பட்டனர்.
- 1900 - பிரித்தானியப் படைகள் ரொபேர்ட் பிரபு தலைமையில் ஜோகார்னஸ்பேக் நகரைக் கைப்பற்றின.
- 1902 - தென்னாபிரிக்காவில் இரண்டாவது போவர் போர் முடிவுற்றது. தென்னாபிரிக்கா பிரித்தானியாவின் முழுமையான ஆட்சியின் கீழ் வந்தது.
- 1910 - தென்னாபிரிக்க ஒன்றியம் அமைக்கப்பட்டது.
- 1911 - டைட்டானிக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1921 - ஐக்கிய அமெரிக்காவில் ஒக்லஹோமா, துல்சா என்ற இடத்தில் இடம்பெற்ற இனக் கலவரங்களின் போது 39 பேர் கொல்லப்பட்டனர்.
- 1931 - பாகிஸ்தானின் குவெட்டா என்ற இடத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 40,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்கள் சிட்னி நகரைத் தாக்கின.
- 1961 - தென்னாபிரிக்கா பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகியது. தென்னாபிரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1962 - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- 1970 - பெருவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் யூங்கே என்ற நகர் முழுமையாகப் புதையுண்டதில் 47,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1973 - சென்னையில் இருந்து புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்சு விமானம் 440 பாலம் விமான நிலையத்தை அண்மித்த போது தீப்பற்றி எரிந்ததில் அதில் பயணம் செய்த 65 பேரில் 48 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - கனடாவில் நியூ பிரன்ஸ்விக்கையும் பிரின்ஸ் எட்வர்ட் தீவையும் இணைக்கும் கூட்டமைப்புப் பாலம் (Confederation Bridge) திறக்கப்பட்டது.
- 1981 - யாழ்ப்பாணம் பொது நூலகம் நள்ளிரவு நேரம் இலங்கை காவல் துறையினரால் எரிக்கப்பட்டது.
- 2004 - வீரகேசரி பத்திரிகை நிருபரும் பத்திரிகையாளருமான ஐயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2005 - இலங்கையின் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி மேஜர் நிசாம் முத்தாலிப் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2007 - டொராண்டோ தமிழியல் மாநாடு ஆரம்பமானது.

**பிறப்புகள**

- 1819 - வால்ட் விட்மன், அமெரிக்கக் கவிஞர். (இ. 1892)
- 1852 - ஜூலியஸ் ரிச்சர்டு பெட்ரி, செருமானிய நுண்ணுயிரியலாளர். (இ. 1921)
- 1928 - பங்கஜ் ராய், இந்தியத் துடுப்பாளர். (இ. 2001)
- 1930 - கிளின்ட் ஈஸ்ட்வுட், அமெரிக்க நடிகர்
- 1931 - நீலாவணன், ஈழத்துக் கவிஞர். (இ. 1975)
- 1945 - லோரண்ட் பாக்போ, ஐவரி கோஸ்ட்டின் 4வது அரசுத்தலைவர்.
- 1966 - ரொசான் மகாநாம, இலங்கைத் துடுப்பாளர்.
- 1976 - கோலின் பார்ரெல், ஐரிய நடிகர்

**இறப்புகள்**

- 1809 - ஜோசப் ஹேடன், மேற்கத்திய இசையறிஞர. (பி. 1732)
- 1832 - எவரிஸ்ட் கால்வா, பிரெஞ்சு கணிதவியலர். (பி. 1811)
- 1910 - எலிசபெத் பிளாக்வெல், ஆங்கிலேய-அமெரிக்க மருத்துவர். (பி. 1821)
- 1962 - அடோல்வ் ஏச்மென், செருமானிய கேணல். (பி. 1906)
- 1976 - ஜாக்குவஸ் மோனாட், நோபல் பரிசு பெற்ற செருமானிய உயிரியலாளர. (பி. 1910)
- 1987 - ஜான் ஆபிரகாம், திரைப்பட இயக்குநர் (பி. 1937)
- 2002 - சுபாஸ் குப்தே, இந்தியத் துடுப்பாளர். (பி. 1929)
- 2004 - ஐயாத்துரை நடேசன், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்.
- 2009 - மில்வினா டீன், மூழ்கிய டைட்டானிக் கப்பலின் கடைசியாக உயிருடன் இருக்கும் ஒரே ஒரு பயணி. (பி. 1912)

**சிறப்பு நாள்**

- புகையிலை எதிர்ப்பு நாள்.

## புகையிலை எதிர்ப்பு நாள் மே 31



உலக புகையிலை எதிர்ப்பு நாள் உலகெங்கும் மே 31 ஆம் நாளன்று கொண்டாடப்பட்டு வருகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் சேர்ந்து இந்நாளை 1987ம் ஆண்டில் சிறப்பு நாளாக அறிவித்தது. உலகில் மனித இறப்புகளைத் தோற்றுவிக்கும் முக்கிய காரணிகளில் புகையிலை இரண்டாவது இட த்தை வகிக்கிறது. இச்சிறப்பு நாளின் அறிவிப்பு மூலம் உலக சுகாதார நிறுவனம் ஆண்டுதோறும் புகையிலை சம்பந்தமான சுமார் 3.5 மில்லியன் இறப்புகளைக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கிறது.

# பாரியளவிலான மோசடிகள் குறித்த விசாரணைகளைத் துரிதப்படுத்தவும்

## பொலிஸாருக்கு அரசு உத்தரவு

(கொழும்பு)

**பாரியளவிலான ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.**

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தின் போது அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் பாரியளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பிலான பொலிஸ் விசாரணைகளை எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் பூர்த்தியாக்குமாறு கோரப்பட்டுள்ளது. நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட நிறுவனங்கள் இந்த விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு ஜனாதிபதியும் பிரதமரும் அண்மையில் உத்தரவிட்டுள்ளனர்.

இதன்படி பாரியளவில் அரச சொத்துக்களை கொள்ளையிடுதல், பொதுமக்கள் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் பாரியளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஊழல் மோசடிகள் தொடர்பிலும் அதனுடன் தொடர்புடையவர்கள் தொடர்பிலும் விரிவான அறிக்கை ஒன்று அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

# 23 ஆயிரம் ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்

## கல்வி அமைச்சு தகவல்



23 ஆயிரம் ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் ஆசிரிய சேவைக்காக சுமார் 23 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு விசேட போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்தி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாகத தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் காணப்படும் சுமார் 10 ஆயிரம் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

பாடசாலை கட்டமைப்பை உரிய முறையில் மேற்கொள்ள இந்த ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அமைச்சர் காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் கிரமமான முறையில் இந்த ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# நோயாளிகள் பாதிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது

## நீதிக்கான மக்களின் குரல் வலியுறுத்து

அப்பாவி நோயாளிகள் பாதிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது என நீதிக்கான மக்களின் குரல் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆளும் கட்சிக்கும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் அப்பாவி நோயாளிகளை பாதிக்கக் கூடாது என அந்த அமைப்பு ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

வைத்தியர் நியமனங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கும் வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் நாடு தழுவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகவும் வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அனர்த்தம் இடம்பெற்ற பகுதிகளில் போராட்டம் நடத்தப்படாது என சங்கம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பில் ஓரளவு நியாயம் உண்டு என்றே கருதுகின்றோம்.

வைத்திய சங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான முரண்பாடு அரசியல் ரீதியான கோணத்தில் நகர்கின்றது.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணனிப் பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட நாட்டின் முக்கிய புத்தி ஜீவிகளில் பலர் இலவசக் கல்வியின் மூலம் கல்வித் தகைமை பெற்றுக்கொண்டவர்களாவர்.

அவர்களும் மனிதர்களே, அவர்களுக்கு தனிப்பட்ட வாழ்க்கை உண்டு. தொழில் செய்வதனைப் போன்றே நியாயமான முறையில் பணம சம்பாதிப்பதும் அவர்களின் உரிமையாகும்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விவகாரத்தில் அரசாங்கம் கடுமையான நிலைப்பாட்டை பின்பற்றியதாகவே கருதுகின்றோம்.

எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் நெகிழ்வுப் போக்குடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது. நீதிக்கான மக்களின் குரல் அமைப்பு ஊடக அறிக்கையின் மூலம் வலியுறுத்தியுள்ளது. (இ-10)

# நல்லிணக்க செயற்பாட்டில் இலங்கை முன்னோக்கிச் செல்கிறது- யுனிசெப்

மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த மோதல்கள் முடிவுற்ற நிலையில், சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதிலும், கல்விக்கு முன்னுரிமை அளித்து முன்னேற்றுவதிலும் இலங்கை முன்னோக்கி செல்கின்றதென யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி உனாமெக்கலே தெரிவித்துள்ளார்.

வன்முறைகளும் மோதல்களும் இளம் பிள்ளைகளின் மூளை வளர்ச்சியை வெகுவாக பாதிக்கின்றதென குறிப்பிட்ட அவர், அவற்றை ஆரம்பத்திலேயே நிறுத்தாவிட்டால், பரம்பரையாகக் கூட தாக்கங்களை ஏற்படுத்தக் கூடுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசும் யுனிசெப் அமைப்பும் இணைந்து, கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்திய, தெற்காசிய பிராந்தியத்தின் தொடர்ச்சியான சமாதானமும் கல்வியும் சம்பந்தமான ஆய்வரங்கில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு, தரமான கல்வியின் ஊடாக சமாதானம் மற்றும் சமூக ஒருங்கிணைப்பை மீள வலுப்பெற வைக்க முடியுமென இங்கு உரையாற்றிய கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். சமாதானத்தை நிலைநாட்டி சமூகத்தை மேம்படுத்த உதவும் இச் செயற்பாட்டை, இலங்கை அரசாங்கம் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந் நிகழ்வில், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், இராஜாங்க அமைச்சர் பௌசி, யுனிசெப் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## என்ன செய்யலாம் என்ற கேள்வி

நம்மோடு பழகுபவர்களை அல்லது சம்பந்தப்பட்டவர்களை நாம் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

நம்மிலும் மேலானவர்கள்; நமக்குச் சமமானவர்கள்; நமக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆகியோரே அந்த மூவரும்.

நாம் இவர்கள் மூவரிடமே என்ன செய்யலாம் என்ற கேள்வியைக் கேட்டாக வேண்டும். அதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

நம் மரியாதைக்குரியவர்கள்; நம் பெற்றோர்- மூத்தோர்; நாம் வேலை பார்க்கும் இடத்தில் உயர் அதிகாரிகள் அல்லது முதலாளிகள் போன்றவர்கள் முதல் வகையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு இருக்கும் தகுதி காரணமாக ஒவ்வொன்றையும் இவர்களைக் கலந்தே அந்தந்த விடயங்களில் முடிவெடுப்பது நம் கடமை. இதை மீறும் போது கடுமையான குற்றச்சாட்டுக்கு மட்டுமல்ல, தண்டனைக்கும் உள்ளாக வேண்டிவரும். நாமாக எடுத்த முடிவானது, நல்ல பயனைத் தந்துவிட்டால் பிரச்சினை இல்லை. தீமையை தந்துவிட்டாலோ மேற்கூறிய இவர்கள் ஆட்டம் போட்டுத் தீர்ப்பதோடு அவ்வப்போது உள்ளத்தைப் புண்படுத்தும் வகையில் சொல்லாலும் செயலாலும் துன்புறுத்துவார்கள். நமக்கேன் இந்த வம்பு?

நமக்குச் சமமானவர்கள் என்பவர்கள் நம் நண்பர்கள் அல்லது தோழிகள். வியாபாரமென்றால் பங்குதாரர்கள்; கணவன் என்றால் மனைவி. மனைவி என்றால் கணவன். இவர்களை என்ன செய்யலாம் என்று கேட்டு அதன்படி செய்தால் அவர்களது முழு ஒத்துழைப்பும் இறுதி வரை கிடைக்கும். கஷ்டமோ நஷ்டமோ இருவரும் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் கூறிக் கொள்ள வசதியாக இருக்கும். அது மட்டுமல்ல, நாம் சற்றும் எண்ணிப்பாத்திராத சில கோணங்களை அவர்கள் சொல்லி நம்மை அசத்தக் கூடும்.

மிக அவசியமென்றால் இவர்களைப் பொறுத்தளவில் ஒரு தந்திரத்தைக் கையாளலாம். இன்னதைச் செய்வது என்று நாமாக ஒரு முடிவை எடுத்துவிட்டாலும் பெயருக்கு இவர்களிடம் என்ன செய்யலாம் என்று கேட்டு வைக்கலாம். நாம் செய்த முடிவையே அவர்கள் சொல்லிவிட்டால் பழம் நழுவிப் பாலில் விழுந்த கதை தான். மாறாக, நேர் எதிரான கருத்தைச் சொன்னால் நாம் ஏற்கனவே முடிவு எடுத்துவிட்டதாகக் காண்பித்துக் கொள்ளாமல் இருபக்க விடயங்களையும் அலசி நாம் எடுத்த முடிவு என்பது போல் சொல்லி அவர்களைச் சம்மதிக்க வைக்கலாம்.

நமக்கும் அவர்களுக்கும் நல்ல முறையில் உறவு இருந்தால் ஒரு படி மேலே போய், நான் இப்படிச் செய்யலாம் என்று நினைக்கிறேன். இருந்தாலும் (நீங்கள்) சொல்கிற படி செய்கிறேன் என்று சொல்லலாம். இப்படிச் சொன்ன பிறகு நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நம் பக்கம் சாய்வார்கள் என்பதில் சந்தேகமென்ன?

நமக்குக் கீழானவர்கள் என்பவர்கள் நம் உத்தரவுக்குக் கட்டுப்பட்டவர்கள்; வயதால் நமக்கு இளையவர்கள்; நம்முடைய சந்ததியினர் மற்றும் நம் வேலைக்காரர்கள்.

என்ன செய்யலாம் என இவர்களிடம் நாம் கேட்பதன் மூலம் நாம் அன்பும் பண்பும் மிக்கவர்கள்; மனிதாபிமானம் மிக்கவர்கள்; மற்றவர்களின் கருத்தையும் மதிப்பவர்கள் என்றெல்லாம் அவர்கள் எண்ணவும் நம்முடைய முடிவுகளை- விருப்பத்தை அவர்களைச் செயலாற்ற வைக்கவும் இந்த உத்தி பயன்படும். முயன்று தான் பாருங்களேன்.

**லேனா தமிழ்வாணன்**



# ஊழல் மோசடிகள் விசாரணை துரிதம்



மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடிகள் குறித்த விசாரணைகள் இப்போது முடுக்கி விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த அரசாங்கத்தில் முக்கிய பதவி வகித்தவர்களும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கடந்த இரண்டு வாரங்களாக விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ எம்.பியின் செயலாளர் ஒருவரின் வீட்டிலிருந்து பத்து கிலோ தங்கம் பொலிஸாரால் கடந்த 26 ஆம் திகதி கைப்பற்றப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், பொரலஸ்கமுவவிலுள்ள குறித்த செயலாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**கெஹலியவுக்கு 20 கோடி ரூபா வழங்கியது குறித்து லலித் வீரதுங்கவிடம் விசாரணை**



முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு 2012 ஆம் ஆண்டு வைத்திய சிகிச்சைக்காக 20கோடி ரூபா வழங்கியது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் பாரிய நிதி மோசடி தொடர்பான பொலிஸ் பிரிவு கடந்த வாரம் விசாரணைகளை மேற்கொண்டது.

2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற விபத்தில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கீழே விழுந்து கால் முறிவுக்குள்ளானார். குறித்த பணத்தொகை அப்போது அவரது சிகிச்சைக்காக வழங்கப்பட்டதாக கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**கல்கிஸ்ஸ காணி விவகாரம் தொடர்பாக யோஷிதவின் பாட்டியிடம் விசாரணை**

கல்கிஸ்ஸ பிரதேசத்திலுள்ள ஆடம்பர வீடு மற்றும் சொத்துக்கள் தொடர்பாக பொலிஸ் பாரிய நிதி மோசடிப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் படி யோஷித ராஜபக்ஷவின் பாட்டியின் பெயரில் மேலும் 14 காணிகள் இருப்பதாக வெளிவந்துள்ள தகவல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள அவர் பாரிய நிதி மோசடிப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த காணிகளை கொள்வனவு செய்வதற்காக எவ்வாறு பணம் கிடைத்தது என்பது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சீ.எஸ்.என் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்ட போது அதற்கு முதலீடு செய்தது தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளில் யோஷித ராஜபக்ஷ தரப்பில் வெளியான விடயங்களை அடிப்படையாக கொண்டு யோஷித ராஜபக்ஷ தாய்வழிப் பாட்டியிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**அம்பாந்தோட்டை துறைமுக திறப்பு விழா கலை நிகழ்ச்சிகள் தொடர்பாக நடிகர் ஜக்சன் அந்தனியிடம் விசாரணை**

மஹிந்த ஆட்சியில் அம்பாந்தோட்டை துறைமுக நீர் நிரப்பும் வைபவம் மற்றும் துறைமுக திறப்பு விழா வைபவத்துக்கு நடன



நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு 113 மில்லியன் ரூபா செலவிட்டு நிதி முறைகேடு நடந்திருப்பது தொடர்பாக பிரபல சிங்கள திரைப்பட நடிகர் ஜக்சன் அந்தனியிடம் விசாரணை மேற்கொள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

நன்னீர் திருவிழா என்ற பெயரில் இந்த நடன நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதற்காக ஜக்சன் அந்தனியின் செலக்னா நிறுவனத்துக்கு 20 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு தெரிய வந்துள்ளது.

**காசோலை கொடுக்கல்-வாங்கல் முன்னாள் ஜனாதிபதியின் அலுவலக பிரதானி காமினி செனரத் மீது விசாரணை**

மகிந்த ஆட்சியின் போது இடம்பெற்றதாக கூறப்படும் நிதி முறைகேடு தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதியின் அலுவலக பிரதானி காமினி செனவிரத்ன கடந்த வாரம் பொலிஸ் பாரிய நிதி மோசடிப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**பசில் ராஜபக்ஷவின் காணி விவகாரம் தொடர்பாக உபுல் திசாநாயக்க கைது**

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கம்பஹா ஒரு தொட்ட பிரதேசத்தில் காணி கொடுக்கல்-வாங்கல் தொடர்பாக டி.ஏ. ராஜபக்ஷ மன்றத்தின் உப தலைவர் உபுல் திசாநாயக்க பொலிஸ் பாரிய நிதி மோசடிப் பிரிவினரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.

அந்த மன்றத்திற்காக பத்து மில்லியன் ரூபா பெறுமதியான காணி குறித்த கொடுக்கல்-வாங்கல் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

**ஊழல் மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்த ஆட்சியிலும் பதவிகள்**

மகிந்த ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடி நிதி முறைகேடுகளில் சம்பந்தப்பட்டோருக்கு இந்த நல்லாட்சி அரசாங்கத்திலும் பதவிகள் வழங்கப்பட்டிருப்பது குறித்து இந்த அரசை பதவிக்கு கொண்டுவர உழைத்தோர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு அயராது உழைத்த நல்லாட்சிக்கான மக்கள் அமைப்பு ஊழல் மோசடி நிதி முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீது நல்லாட்சி அரசாங்கம் மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பது குறித்து பகிரங்கமாக அதிருப்தி வெளியிட்டுள்ளது.

நடவடிக்கை எடுக்காததுடன் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இந்த அரசு பதவி வழங்கியுள்ளது குறித்தும் இந்த அமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

**சஜின்வாஸ் குணவர்தன அமைப்பாளராக நியமனம்**



மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் செல்லப் பிள்ளையாகவும் வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினராகவும் இருந்தவர் சஜின்வாஸ் குணவர்த்தன.

இவர் அந்நாட்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பிரிட்டன் சென்ற போது பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் டாக்டர் கிறிஸ் நோனிசை கன்னத்தில் அறைந்து சர்ச்சையை ஏற்படுத்தியவர்.

மகிந்த ஆட்சியில் சஜின்வாஸ் குணவர்த்தன எம்.பி. ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 32 வாகனங்களை முறைகேடாகப் பெற்று பயன்படுத்தியது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் இவருக்கு சொந்தமான பெற்றோல் நிலையங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாவுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் பெற்ற பெற்றோல், டீசல் மற்றும் எரிபொருளுக்கு பணம் வழங்காதது குறித்து இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு தொடரப்பட்டதும் இவர் அந்த நிலுவை பணத்தை மீளச்செலுத்தினார்.

இது போன்ற முறைகேடுகளில் ஈடுபட்ட இவருக்கு அரசு பாதுகாப்பு வழங்குகிறது. இதற்கு மேலாக ஸ்ரீ.ல.சு. கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவரை பலபிட்டிய தொகுதியின் ஸ்ரீ.ல.சு. கட்சி அமைப்பாளராக நியமித்ததும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

**அனுஷ பெல்பிட்டவின் நியமனம் ஏற்படுத்தியுள்ள சர்ச்சை**

மகிந்த ஆட்சியில் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவராக அனுஷ பெல்பிட்ட நியமிக்கப்பட்டார். அதற்கு முன்னர் இவர் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்தார்.

(தொடரும்)

# லா-நினாவால் இலங்கைக்கு அதிகளவில் பாதிப்பு இல்லை

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கடும் வரட்சி மற்றும் கடும் மழை, வெள்ளத்தை ஏற்படுத்திய எல்-நினோ பருவநிலை, முடிவுக் கட்டத்தை எட்டியுள்ள. அதேவேளை, அடுத்து லா-நினா என்ற கடும் குளிரான பருவநிலை மாற்றம் ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த லா-நினா பருவநிலை மாற்றத்தினால், எல்-நினோவைப் போன்று கடுமையான பாதிப்புகள் ஏற்படும் என்றும், எனினும் இலங்கை அதிகளவில் பாதிக்கப்படாது என்றும், வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் லலித் சந்திரபால தெரிவித்துள்ளார்.

"எல்-நினோ இப்போது முடிவுக் கட்டத்தில் இருக்கிறது. ஜூன்-ஜூலை மாதமளவில் இது இயல்பு நிலைக்கு வரும். அப்போது லா-நினா உருவாகலாம்.

இதுவும், எல்-நினோவைப் போன்று அழிவுகளை ஏற்படுத்தலாம். எனினும், இது இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தலாக இருக்காது.

லா-நினா, எல்-நினோ ஆகிய இரண்டுமே சமுத்திரத்தின் வெப்ப நிலை மாற்றங்களால் தான் உருவாகிறது.

இரண்டு காற்றமுத்த தாழ்வு நிலைகள் தெற்கு இந்தியப் பெருங்கடலில் உருவான போதும் அவற்றினால், இலங்கைக்குப் பாதிப்பு ஏற்படவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, லா-நினாவினால், அத்திலாந்திக் பகுதியில் அதிகளவு சூறாவளிகளும், பிரேசிலில் வரட்சியும், இந்தோனேசியா, இந்தியாவில் கடும் மழையும் ஏற்படக் கூடும் என்று அனைத்துலக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-10)

# மரணித்தவரின் இறுதிக்கிரியைகளைக்கூட நடத்த முடியாது திண்டாடும் தோட்ட மக்கள்

(கொழும்பு)

மஸ்கெயா - காட்மோர் கல்கந்த தோட்டத்தில் கடந்த 28ஆம் திகதி காலை ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 47 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் இடம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்களில் 60 வயது மதிக்கத்தக்க அருள்சாமி என்பவர் உயிரிழந்துள்ளார்.

சுகயீனம் காரணமாக நாவலிபிட்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவர் மரணமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, குறித்த தோட்டத்தில், ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகமாக வெளிக்கள உத்தியோகத்தரின் வீட்டிலும் தோட்ட ஆலயத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறிருக்க உயிரிழந்தவரின் சடலத்தை எங்கு வைப்பது என்று காட்மோர் கல்கந்த தோட்ட மக்கள் திண்டாடுகின்றனர்.

குறித்த சடலத்தினை அடக்கம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-10)

# தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சி நல்லூர் விதாதாவள நிலையத்தில்

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் கீழ்வரும் பயிற்சி நெறிகள் நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இலவசமாக நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளோர் தமது சுய விபரக்கோவையுடன் 07.06.2016 ஆம் திகதிக்கு முன்னதாக விதாதா வள நிலையத்திற்கு நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

பயிற்சி நெறிகளாவன Liquid Soap தயாரித்தல், Hand Wash, Dish Wash, ஊதுபத்திதயாரித்தல், Web Desiging Programme, கணனி வலையமைப்பு (LAN, WAN), கணனி வன்பொருள் (Computer HandWare), Computer Graphic Designing (Photo Shop), வாழ்த்து அட்டைகள் வடிவமைத்தல், பேக்கரி தயாரிப்புக்கள், எள்ளுருண்டை தயாரித்தல், கச்சான் அல்வா தயாரித்தல், LED மின்குமிழ் தயாரித்தல், Packaging Methods.

விதாதா வள நிலையத்தின் முகவரி விதாதா வள நிலையம், நல்லூர் (திருநெல்வேலி சமுர்த்தி வங்கிக்கு அருகில்) தொலை. இல 021 222 1034 என நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ

# அனர்த்தங்களால் இடம்பெயர்ந்துள்ள சாரதிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்க விசேட நடவடிக்கை

வெள்ளம் மற்றும் மண்சரிவால் இடம்பெயர்ந்துள்ள சாரதிகள், சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு விசேட வேலைத் திட்டமொன்றை வாகன போக்குவரத்து திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய போக்குவரத்து திணைக்களத்தின் வெரஹெர தலைமையக அலுவலகத்தில் இதற்கான விசேட கருமபீடமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையாளர் நாயகம் லலித் சந்திரசிறி தெரிவித்தார்.

அதற்கமைய வெள்ளம் மற்றும் மண்சரிவால் குறித்த சாரதி பாதிக்கப்பட்டுள்ளதாக கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அந்த சாரதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு சாரதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

ஒருநாள் சேவையூடாக , மேலதிக கட்டணங்கள் இன்றி சாதாரண சேவைக்குரிய கட்டணத்தின் அடிப்படையில் சாரதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்கள் வரிசையில் நிற்காது ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட கருமபீடத்திற்கு நேரடியாக சென்று சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த விசேட திட்டத்தினூடாக வாகன போக்குவரத்து அனுமதிப்பத்திரம் மற்றும் வெள்ளம் மற்றும் மண்சரிவால் காணாமற் போயுள்ள வாகன இலக்க தகடுகள் என்பனவற்றையும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையாளர் நாயகம் லலித் சந்திரசிறி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 736

Search for people, places and things | Nagendram | Home

### சிந்து


பிறருக்கு உதவும் மனம்
பிறவியிலேயே இருக்கும்
யாரும் சொல்லிக் கொடுத்து
வருவதில்லை...



### மது

டாக்டர் நீங்க
சொன்ன மாதிரி
தினமும் அல்வா சாப்பிட்டேன்
தொப்ப குறையவே மாட்டேங்குது.
நாசமா போச்சு
நான் அல்வா
சாப்பிட சொல்லலையா
அளவா சாப்பிட
சொன்னேன்.

### ஹாசினி



வக்கீல்:-
ஏம்மா போன வாரம் தான்
உன் புருஷன்கிட்ட இருந்து
விவாகரத்து
கேட்ட. வாங்கிக் குடுத்தேன்.
இப்ப மறுபடியும் வந்து உன்
புருஷனோட சேர்த்து வைங்கன்னு
சொல்லுற. என்னம்மா ஆச்சு..??

மனைவி:-
ஆமா சார், அந்த ஆளு
என் கண்ணு முன்னாடியே
சந்தோஷமா சுத்திட்டு திரியுறத
பார்த்து என்னால
சகிச்சுக்கிட்டிருக்க
முடியல சேர் அதான்.


### அச்சு

காதலியும் 2G நெட்வேர்க்கும் ஒண்ணு



பொறுமையை ரொம்ப சோதிக்கும்.

### வின்ஜக்ஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

171

## பராசக்தியில் சிகரம் தொட்டார் சிவாஜிகணேசன்

1952 ஒக்டோபர் 17 ஆம் திகதி அன்றைய தினம் தீபாவளித் திருநாள். அந்தத் தீபாவளிக்கு தனிச் சிறப்பு உண்டு. அன்றுதான் தமிழ் திரைப்பட வரலாற்றில் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய பராசக்தி வெளிவந்தது.

முதல் நாளன்று படம் பரபரப்பாகப் பேசப்படவில்லை. ஆனால் மறுநாள் எங்கு திரும்பினாலும் பராசக்தி பற்றித்தான் பேச்சு.

பராசக்தியில் சிவாஜி கணேசன் என்ற புதுநடிகர் கதாநாயகனாக நடித்திருக்கிறார். இதுபோல வேறு யாராலும் இவ்வளவு சிறப்பாக நடிக்க முடியாது. குரல் சிம்மக்குரல்தான்.

பராசக்தியில் மு.கருணாநிதி வசனம் எழுதியிருக்கிறார் பாருங்கள். வசனம் என்றால் இதுவல்லவா வசனம்! தீப்பொறி பறக்கிறது. அதிலும் கடைசியாக வரும் நீதிமன்றக் காட்சி பிரமாதம். பாடல்கள் ஒவ்வொன்றும் அருமை.

சினிமா ரசிகர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்ட கருத்துக்கள் இவை.

சிவாஜிகணேசன் ஒரே படத்தின் மூலம் சூப்பர் ஸ்டாராக உயர்ந்தார். இதற்கு முன் முதல் படத்திலேயே சூப்பர் ஸ்டார் ஆனவர் எம்.கே.தியாகராஜபாகவதர் ஒருவர் தான்.

சிவாஜிக்குப்பிறகு முதல் படத்திலேயே சிகரத்தைத் தொட்டவர் எவரும் இல்லை.

**நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள்**

பராசக்தி கதையை எழுதியவர் பாவலர் பாலசுந்தரம். அது தேவி நாடக சபையினரால் நாடகமாக நடிக்கப் பட்டு வந்தது.

ஏ.வி.எம்.படங்களை விநியோகித்து வந்த நேஷனல் பிக்சர்ஸ் பி.ஏ.பெருமாள் முதலியார் பராசக்தியைப் படமாகத் தயாரிக்க விரும்பினார். இதுபற்றி ஏவி.மெய்யப்ப செட்டியாருடன் கலந்து பேசினார்.

ஏவி.எம்.கூட்டுறவுடன் நேஷனல் பிக்சர்ஸ் பேனரில் படத்தைத் தயாரிப்பது என்று முடிவாகிற்று.

ஆரம்பத்தில் பராசக்தியை ஏ.எஸ்.ஏ.சாமி டைரக்ட் செய்வதாக இருந்தது. பின்னர் கிருஷ்ணன்-பஞ்சு இரட்டையர்கள் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றார்கள்.



ஏற்கனவே மந்திரி குமாரி, மதுரநாட்டு இளவரசி முதலிய படங்கள் மூலம் புகழ் பெற்று விளங்கிய மு.கருணாநிதி திரைக்கதை-வசனம் எழுதினார்.

**சிவாஜிகணேசன்**

கதாநாயகனாக புதுமுகத்தை அறிமுகம் செய்ய பெருமாள் முதலியார் விரும்பினார். ஏற்கனவே சிவாஜி கணேசன் நடித்த பல நாடகங்களை அவர் பார்த்திருக்கிறார். எனவே சிவாஜி கணேசனை கதாநாயகன் வேடத்திற்கு ஒப்பந்தம் செய்தார்.

மற்றும் எஸ்.எஸ். ராஜேந்திரன், எஸ்.வி.சகஸ்ரநாமம், வீ.கே.ராமசாமி, வீ.கே. ராமச்சந்திரன், பண்டரிபாய், ஸ்ரீரஞ்சனி ஆகியோரும் இடம்பெற்றனர்.

படப்பிடிப்பு தொடங்கி சில ஆயிரம் அடிகள் எடுக்கப்பட்ட பின் படத்தை மெய்யப்ப செட்டியார் போட்டுப் பார்த்தார். சிவாஜிகணேசனின் தோற்றமும் நடிப்பும் அவருக்கு திருப்தி அளிக்கவில்லை.

பெருமாள் முதலியாரை அழைத்து முதன் முதலாக என்னுடன் கூட்டுச் சேர்ந்து படம் எடுக்கிறீர்கள். ரிஸ்க் வேண்டாம். கணேசனுக்குப் பதிலாக கே.ஆர்.ராமசாமியைப் போட்டு படத்தை எடுப்போம் என்று கூறினார்.

ஆனால் பெருமாள் முதலியார் அதற்கு சம்மதிக்கவில்லை. சிவாஜிகணேசன் ஒல்லியாக இருப்பதால் நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். (தொடரும்)

# இலங்கையின் மீறல்களை குழிதோண்டிப்புதைக்க முயன்றவரா அடுத்த ஐ.நா. பொதுச் செயலாளர்?

(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி...)

'இலங்கை மீதான விசாரணையை முடிவிற்குக் கொண்டு வந்த பின்னர் முன்னெடுக்கப்பட்ட விடயங்களை அறிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். நான் தொடர்ந்தும் யு.என்.டி.பியில் செயற்பட வேண்டும் என நான் விரும்பினேன். ஆனால இதில் நான் தோல்வியுற்றேன்' என சின்ஹறா தெரிவித்தார்.

சின்ஹறாவின் பதவி விலக்கல் தொடர்பாக ஐ.நா செயலாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட போது, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை அறிக்கை தயாரிப்பதில் பணியாற்றிய அதிகாரி ஒருவர் ஊழியர் குறைப்பு நடவடிக்கையின் மூலம் பதவி விலக்கப்பட்டமை தொடர்பாக ஆராயப்பட்டது. இது தொடர்பான பானின் அலுவலகம் நவம்பர் 2012இல் ஆராய்ந்தது. சின்ஹறாவின் பதவி விலக்கலானது பொதுமக்கள் மத்தியில் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் மனித உரிமை மேம்படுத்தல் செயற்திட்டம் மீதான நம்பிக்கையைக் குழிதோண்டிப் புதைத்துவிடும் என பானின் உயர் மட்ட ஆலோசகர்கள் கருதினர்.

2013 யூலையில், அதாவது பான் தனது மனித உரிமை மேம்படுத்தல் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர், சின்ஹறாவின் பிரச்சினை தொடர்பான அரசியல் தலையீடுகள் தொடர்பாகக் கருத்திற் கொண்ட பானின் அலுவலகம் கிளார்க்கின் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டது. இதற்கு சிறிது காலத்தின் பின்னர், யு.என்.டி.பி மனிதவள அதிகாரியிடமிருந்து சின்ஹறா தொலைபேசி அழைப்பொன்றைப் பெற்றார். தற்காலிகமாக யு.என்.டி.பி. ஊழியர் கோட்பாட்டுச் செயற்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதில் சின்ஹறாவின் உதவி பெறப்பட்டது. ஆனால் இது நிரந்தரமாக்கப்படவில்லை.

ஐ.நா. பிரதிச் செயலர் எலியேசன் மற்றும் பானின் நிறைவேற்று அதிகாரி மல்கோரா ஆகியோர் கிளார்க்கிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டனர். சின்ஹறா விவகாரத்தை தான் அசட்டை செய்யவில்லை எனவும் இதனை ஆராய்வதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால் மல்கோராவோ அல்லது எலியேசனோ கிளார்க்கிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு உரையாடினர் என்பதை யு.என்.டி.பி மறுத்தது.

பெற்றி அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீது எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்காத அதேவேளையில் சின்ஹறா பதவி விலக்கப்பட்டதானது நீதிக்கு அப்பாற்பட்ட செயல் என மனித உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

'இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மீறல்களைத் தடுப்பதில் ஐ.நா. தவறிழைத்தமை தொடர்பாக அறிக்கையிடுவதில் உதவிய அதிகாரியான சின்ஹறாவை யு.என்.டி.பி பதவி விலக்கி பழிவாங்கியதானது மிகவும் துன்பகரமான ஒரு நிகழ்வாகும். இவ்வாறான தவறுகளை தட்டிக்கேட்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ள தனது ஊழியர்களில் ஒருவரைப் பதவி விலக்கியமை மிகவும் அதிருப்தியான செயலாகும்' என மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் பிரதி இயக்குனர் பிலிப் பொலோபியன் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்களைத் தட்டிக்கேட்க வேண்டும் என்கின்ற பானின் அறிவுறுத்தலையும் அவரது முயற்சியையும் யு.என்.டி.பி தட்டிக்கழித்துள்ளதையே சின்ஹறாவின் பதவி விலக்கல் குறித்து நிற்பதாகவும், உலகில் அநீதிகள் இழைக்கப்படும் போது அதனைத் தட்டிக்கேட்பதற்கு எந்தவொரு ஐ.நா. பணியாளர்களும் முனவரக்கூடாது என்பதை வெளிப்படுத்தி நிற்கும் ஒரு முட்டாளத்தனமான செய்தியாகவே சின்ஹறாவின் பதவி விலக்கல் அமைந்துள்ளது என பொலோபியன் குறிப்பிட்டார்.

பான் கீ மூன் தான் விரும்பியவாறு 'மனித உரிமை மேம்பாட்டு செயற்திட்டத்தை' முன்னெடுக்க முடியும் ஆனால இதில் யு.என்.டி.பி பங்கு பற்றத் தவறியுள்ளது' என பொலோபியன் தெரிவித்தார்.

பானின் மனித உரிமை மேம்படுத்தல் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கான உயர்மட்டக்குழுவின் இணைத்தலைவராக கிளார்க் நியமிக்கப்பட்டதாகவும் இதன் மூலம் பானின் இந்தச் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கு கிளார்க் தனது அர்ப்பணிப்பை வழங்கியுள்ளார் என்பதையே உறுதிப்படுத்துவதாகவும் யு.என்.டி.பியின் லோநீக்ரோ தெரிவித்தார்.

நாடுகளின் வதிவிடப் பிரதிநிதிகள் தமது பணி நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கருத்திற் கொண்டு செயற்படுவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதற்காக நாங்களும் உங்களுக்கு ஆதரவாக இருப்போம் என யூலை 29 அன்று யு.என்.டி.பி வதிவிடப் பிரதிநிதிகளுக்கு கிளார்க் மற்றும் எலியேசன் அனுப்பிய கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனாலும் யு.என்.டி.பி.யின் செயற்திட்டம் தொடர்பாக மனித உரிமை ஆர்வலர்கள் திருப்தியடையவில்லை. கிளார்க் தனது அமைப்பின் நலன்களுக்கு சவால் விடுக்கும் எந்தவொரு கோட்பாடுகளையும் தனது வீற்றோ அதிகாரத்தின் மூலம பலவீனப்படுத்துவதாக ஐ.நா அதிகாரி ஒருவர் தனது சக அதிகாரி ஒருவருக்கு அனுப்பிய மின்னஞ்சலில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் நடந்தேறிய மீறல்கள் தொடர்பாக யு.என்.டி.பி இன்னமும் பாடங்களைக் கற்றுக்கொள்ளவிலலை என ஐ.நா. மற்றும் அதற்கு வெளியே செயற்படும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மியன்மாரில், யு.என்.டி.பியால் முன்னெடுக்கப்பட்ட பணி விமர்சனத்திற்கு உள்ளானது. அதாவது மியன்மார் அரசாங்கத்தால் தனது சொந்த நாட்டில் வாழும் சிறுபான்மை றோகின்யா முஸ்லிம் இனத்தவருக்கு எதிராக திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட மீறல்களை வெளிப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு யு.என்.டி.பி தவறியுள்ளதாக விமர்சிக்கப்படுகிறது. அண்மைய ஆண்டுகளில் 100,000 வரையான றோகின்ய இனத்தவர்கள் தமது சொந்த நாடான மியன்மாரை விட்டு வெளியேறியுள்ளனர். தொடர்ந்தும் மியன்மாரில் உள்ள றோகின்யர்கள் மீது அந்நாட்டு அரசாங்கம் திட்டமிட்ட மீறல்களை மேற்கொண்டு வருகிறது.

'இலங்கையில் இழைக்கப்பட்ட தவறுகளிலிருந்து ஐ.நா. மற்றும் ஏனையோர் பாடங்களைக் கற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டே ஐ.நா. செயலாளர் நாயகத்தின மனித உரிமை மேம்பாட்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறான மீறல்களை மேற்கொள்ளும் நாடுகள் அதிலிருந்து தப்பிக்காது தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது' என ஒக்டோபர் 2015இல் வெளியிடப்பட்ட ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் இரகசிய அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற பல்வேறு மீறல்களுக்கும் மனித உரிமை சமூகத்தால் இழைக்கபபட்ட திட்டமிடப்பட்ட தவறே காரணமாகும். இது வினைத்திறனுடன் முன்னெடுக்கபட வேண்டும். இவ்வாறான தவறு மீண்டும் ஏற்பட இடமளிக்கக்கூடாது என இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

(முற்றும்)

# பாதுகாக்கப்பட்ட பொக்கிஷங்கள் அழிக்கப்பட்ட நாள் இன்றாகும்



ஆசியாவின் மிகப் பெரும் நூலகம் என வர்ணிக்கப்படுவதுடன் யாழ்ப்பாணத்தின் கல்விக் களஞ்சியமாக விளங்கிய யாழ்ப்பாணப் பொதுநூலகம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி எரியூட்டப்பட்டது. இச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 35 ஆண்டுகள் கடந்துள்ளன.

யாழ். மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கிய நூலக எரிப்புச் சம்பவத்தின் போது இரு உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் அங்கிருந்த 97 ஆயிரம் புத்தகங்களும் எரிநது சாம்பலாகின.

மனிதனுக்கு சுவாசிப்பது எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியமானது வாசிப்பது என்பதில் ஈழத்தமிழர்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்கள். அதன்காரணமாகவே 1842 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் முதல் நூலகம் உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிப்பு என்பது இலங்கை இனப்பிரச்சினையில் ஒரு முக்கிய நிகழ்வாகும். இந் நிகழ்வு 1981 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி நள்ளிரவுக்கு பின்னர் சிங்கள வன்முறைக் குழுவொன்றால் இடம்பெற்றது. இது 20 ஆம் நூற்றாண்டின் இன, நூலழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படுகிறது.

1981 ஆம் ஆண்டின் மே மாதம் யாழ்ப்பாணத்தில் மாவட்ட சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. பிரசாரம் உச்சத்தில் இருந்தது. தேர்தல் பாதுகாப்புப் பணிகளிலீடுபடுவதற்காக இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிங்களக் காவலர்கள் வந்திருந்தனர்.

31 மே 1981 அன்று தமிழர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் சிங்கள காவலர் ஒருவர் மரணம் அடைந்தார். அவ்வளவுதான். கொத்துக் கொத்தாக வந்த சிங்களவர்கள் தமிழர்கள் மீது ஆவேசத் தாக்குதலில் ஈடுபட்டனர். இங்கே சிங்களவர்கள் என்றால் சிங்களக் காவலர்கள், இராணுவத்தினர், இனவெறியர்கள், வன்முறையாளர்கள் என்று அத்தனை பேரும் அடக்கம்.

முதலில் புத்தகக் கடைகளைக் குறிவைத்தனர். அடுத்தது, பத்திரிகை அலுவலகம். இலங்கையில் முதல் தமிழ்ப் பத்திரிகை என்ற பெருமைக்குரிய ஈழநாடு பத்திரிகை அலுவலகம் தீக்கிரையானது. யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலுக்குத் தீ வைத்தனர். அக்கம்பக்கத்தில் தென்பட்ட தமிழர்களின் வடுகள், கடைகள், வாகனங்கள் அனைத்தையும் நெருப்பு கொண்டு எரித்தனர்.

அதன்பிறகும் வெறி அடங்கவல்லை. அடுத்து எதை அழிப்பது என்று அலைந்த இன வெறியர்களின் கழுகுக் கண்களில் யாழ்ப்பாணம் பொது நூலகம் சிக்கியது: உற்சாகமடைந்த இனவெறியர்கள் யாழ். நூலகத்துக்குள் நுழைந்தனர். தடுத்து நிறுத்திய காவலாளியை நெட்டித் தள்ளினர். கைவசம் கொணடு வந்த பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் கொணடு நூலகத்தின் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துப் பார்த்துத் தீ வைத்தனர். பெற்றோல்குண்டுகள் வீசப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

நூலகத்தின் மேற்கு மூலை பகுதிதான் முதலில் எரியத் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக நூலகத்தின் அடுத்தடுத்த பகுதிகளும் எரியத் தொடங்கின. நூலகம் எரிகிறது என்றால் புத்தகங்கள் எரிகின்றன என்று அர்த்தம். புத்தகங்கள் எரிகின்றன என்றால் தமிழரகளின் கலாசாரக் குறியீடுகள் எரிகின்றன என்று அர்த்தம். செய்தி கேள்விப்பட்ட தமிழர்கள் பதைபதைத்தனர்.

நூலகம் எரிந்துகொண்டிருக்கும் செய்தி மாநகர சபை ஆணையாளர் சிவஞானத்துக்குக் கிடைத்தது. பதறித் துடித்த அவர், உடனடியாக தீயணைப்பு வீரர்களையும் மாநகரசபை ஊழியர்களையும் நூலகத்துக்கு அனுப்பினார். தீயை அணையுங்கள், ஆவணங்களைக் காப்பாற்றுங்கள் என்று உத்தரவட்டார். அதன்படி நூலகத்தை நெருங்கிய தீயணைப்பு வீரர்களைத் தடுத்து நிறுத்தினர் சிங்கள காவலர்கள். மேலிடத்து உத்தரவு அவர்களை அப்படிச் செய்ய வைத்திருந்தது.

நூலகத்துக்குள் சேமித்து வைக்கப்பட்டிருந்த 97 ஆயிரம் நூல்கள் கருகிச் சிதைந்தன. மருத்துவம், இலக்கியம், ஜோதிடம் உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த நூல்கள், ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சாமபலாகின. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி நூற் தொகுதி, சி. வன்னியசிங்கம் நூற்தொகுதி, ஐசாக் தம்பையா நூற்தொகுதி, கதிரவேற்பிள்ளை நூற்தொகுதி, அமெரிக்காவில் இருந்து நன்கொடையாக வந்திருந்த நூற்தொகுதிகள் ஆகியன அழிந்து போன பொக்கிஷங்களில் அதிமுக்கியமானவை.

இவ்வழிப்பு நேர்ந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பொது நூலகம் கிட்டத்தட்ட 97ஆயிரம் அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்தது

நூல்கம் எரிக்கப்பட்டது ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் அழியா காயம் ஒன்றை ஏற்படுத்தி, தமிழ்த் தேசியப் போக்குக்கு உரம் ஊட்டியது.

இந்த நூலகம் கே.எம்.செல்லப்பா என்னும் ஆர்வலரொருவரால் உருவாக்கப்பட்டது.

நவம்பர் 11. 1933 ஆம் ஆண்டில் தனது வீட்டில், சில நூல்களுடன் இவர் நடத்தி வந்த நூல் நிலையமே இது. இதனைப் பலருக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தும் நோக்கில், செல்லப்பாவும் வேறு சில பிரமுகர்களும் இணைந்து செயற்பட்டு, இந்த நூல் நிலையத்தை யாழ். நகரின் மத்தியில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இதற்கென வாடகைக்குப் பெறப்பட்ட ஒரு சிறிய அறையொன்றுக்கு மாற்றினார்கள். அக்காலத்தில் சில நூறு நூல்களே இங்கிருந்தன.

1936 இற்குப் பின்னர், நூலகம் யாழ். நகரசபையிடம கையளிக்கப்பட்டு, யாழ்ப்பாணக் கோட்டைக்கு அருகே, புதிதாகக் கட்டப்பட்ட நகர மண்டபத்துக்கு அண்மையிலுள்ள இடமொன்றுக்கு மாற்றப்பட்டது. யாழ்ப்பாண மாநகரசபை அந்தஸ்துக்குத் தரமுயர்த்தப்பட்டுப் புதிய சபை பதவியேற்றபின், இந்த நூலகத்துக்கான புதிய கட்டடமொன்றைக் கட்டும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நூல் நிலையத்திற்கான அடிப்படைகளைத் தீர்மானித்து வழிநடத்தும் நோக்கில், அக் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பல கல்வியாளர்களையும் பிரமுகர்களையும் உள்ளடக்கிய குழுவொன்று 1953 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதற்கான கட்டடத்தை வடிமைக்கும் பணியும் இந்தியாவின் தமிழ் நாட்டைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் நரசிம்மனிடம் ஒப்படைக்கப்பட்டது.

தராவிடக் கட்டடக்கலை பாணியைத் தழுவி இரண்டு தளங்கள் கொண்ட அழகிய கட்டடமொன்றை இவர் வடிவமைத்தார்.

கட்டடத்தை இரண்டு கட்டங்களில் கட்டிமுடிக்கத் தீர்மானித்து, முதற்கட்டமாக கட்டடத்தின் முன்பகுதிக்கான அடிக்கல் 1953 மார்ச் மாதத்தில் நாட்டப்பட்டது.

1959 இல் கட்டடவேலைகள் முற்றாக முடிய முன்னரே, அப்போது யாழ்ப்பாண மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா நூலகத்தின் திறப்பு விழாவை நடத்தினார்.

யாழ்ப்பாணப் பொது நூலகம், 1981 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அனைத்துலக அளவில் அதிகமாகப் பேசப்பட்ட ஒரு நூலகம் ஆகும். 20 ஆம் நூற்றாண்டின் முப்பதுகளின் ஆரம்பத்தில் தொடங்கிப் பல ஆர்வலர்களுடைய அயராத உழைப்பினாலும், பொது மக்களினதும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களினதும் தாராளமான ஆதரவினாலும் வளர்ச்சி பெற்றிருந்த இந்த நூலகம் அதன் அரை நூற்றாண்டு நிறைவை அண்மித்துக்கொணடிருந்தபோதே மே 31, 1981 எரிக்கப்பட்டுச் சாம்பலானது.

அந்த நெஞ்சைப் பிளக்கும் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார் பேரறிஞனும் ஆராய்ச்சியாளனுமாகிய வண.தாவீது அடிகள். அந்த நூலக எரியூட்டலினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு இலக்கியவாதி "சுஜாதா" 1981-ம் ஆண்டு டிசெம்பர் மாத ஆனந்த விகடன் இதழில் "ஒரு இலட்சம் புத்தகங்கள்" என்கிற தலைப்பில் பாரதி நூற்றாண்டு சிறப்புச் சிறுகதை ஒன்றை எழுதியிருந்தார். அதே நிகழ்வில் பெரிதும் கவலையுற்ற வெளிநாட்டு ஆங்கிலேய அறிஞர் ஒருவர் யாழ்ப்பாண பொது நூலகம் எரிந்து கருகி நீறாகிக் கிடந்த சாம்பல் மேட்டிலே நின்ற வண்ணம் ஆங்கிலக்கவிதை ஒன்றை எழுதினார்.

இத்தகைய பெருமை வாய்ந்த, ஈழத்தமிழர்களின் பெரும் செல்வமாக விளங்கிய யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டிச் சிதைக்கப்பட்டு 35 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன.

இன்று இதன் கட்டடம் மீளமைக்கப்பட்டுப் புதிய நூல்கள் சேர்க்கப்பட்டிருப்பினும், எரிந்துபோன பல நூல்களும், பழைமைவாய்ந்த கையெழுத்துப் பிரதிகளும், வேறு பல ஆவணங்களும் திரும்பப் பெறமுடியாதவை எனபது மட்டுமல்ல இது யாழ்ப்பாணத் தமிழர்கள் வாழ்வில் மாறாத வடுவாகவும் பதிந்து போய்விட்டது.

# செய்தித்துளிகள்

## யாழ்.பொதுநூலக நினைவு நாளும் வண.பிதா.தாவீது அடிகள் நினைவும்

யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டு 35 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு நாளை 01.06.2016 புதன்கிழமை காலை 9 மணியளவில் நூலகத்தில் நினைவஞ்சலி நடைபெற இருப்பதனால் நூலக வாசகர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் பங்குகொள்ளுமாறும் கடந்த வருடம் நிகழ்ந்ததுபோல - யாழ்ப்பாணத்தில் மத்திய இலவச வாசிகசாலை ஒன்றை ஆரம்பித்த புத்தூர் சக்கடத்தார் பரோபகாரி அமரர் க.மு. செல்லப்பாவையும், நூலகம் 1981 இல் எரிகிறது என்ற செய்தியை கேள்வியுற்று உயிர்நீத்த வண.பிதா.தாவீது அடிகளையும் நினைவு கூரும் நிகழ்வும் இடம்பெறும். (இ-5)

## ஒன்றரை வயதுக் குழந்தை கிணற்றில் வீழ்ந்து மரணம்

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தோப்பூர் தங்கபுரம் பகுதியில் ஒன்றரை வயதுக் குழந்தையொன்று கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண்குழந்தையொன்றின் சடலமே கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. (இ-10)

## பதுளையில் இடம்பெற்ற விபத்தில் 8 பேர் காயம்

பதுளை - மீகஹகிவ்ல - போகஹதென்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 8 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் இந்திய நாட்டவர் இரண்டு பேரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பயணித்த கெப்ரக வாகனம் தொழில்நுட்பகோளாறு காரணமாக பாதையை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## மர்மமான முறையில் மாணவன் மரணம்

கல்கிரியாகம - கிரானேகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பாடசாலை மாணவரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ள ஜன்னலில் தொங்கியவாறு இருந்த குறித்த சடலத்தை நேற்று முன்தினம் மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் மாத்தளை பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் கல்வி கற்று வந்த 13 வயது மாணவர் என தெரிய வந்துள்ளது.

இது தற்கொலையா அல்லது கொலையா என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-10)

## புகையிரத சேவைகள் மீண்டும் ஆரம்பமானது

கடந்த சில நாட்களாக பெய்து வந்த தொடர் மழையின் காரணமாக தடைப்பட்டிருந்த அனைத்து புகையிரத சேவைகளும் சீரான நிலைமைக்கு திரும்பியுள்ளதாக, புகையிரத போக்குவரத்து அதிகாரி தெரிவித்துள்ளார்.

தபுத்கேம பிரதேசத்தைச் சேர்ந்த அநுராதபுர புகையிரத மார்க்கமானது நேற்று முன்தினம் பெய்த மழையினால் நீரில் மூழ்கியது. இதனால் புகையிரத போக்குவரத்து தடைப்பட்டது.

இதேவேளை, மலையக புகையிரத மார்க்கத்தில் சில இடங்கள் கீழ் இறங்கி காணப்பட்ட போதிலும் அதனை சீராக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (இ-10)

## கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலலூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# மகிந்தவிற்கே அஞ்சவில்லை யாருக்கும் அஞ்சமாட்டேன்

## அமைச்சர் ராஜித வீராப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கே அஞ்சாத தாம், ஏனையவர்களுக்கு அஞ்சப் போவதில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தீான் 15 ஆண்டுகளாக தொழிற் சங்கத் தலைவராக கடமையாற்றியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

நியமனங்களில் தலையீடு செய்ததில்லை எனவும் பல்கலைக்கழகங்களில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் மருத்துவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருத்துவ சங்கம் தனக்கு தேவையான வகையில் நியமனங்களை வழங்க முயற்சிக்கின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சில ஆண்டுகளாக மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் 40 கிராம வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுகாதாரத்துறையை மேம்படுத்தவே அரசாங்கம் முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சரை பணி நீக்குமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)




மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-30.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.35 | 148.18 |
| பிரிட்டன் | பவுண்ட் | 210.10 | 217.67 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 159.22 | 165.70 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 144.09 | 150.24 |
| கனடா | டொலர் | 109.55 | 114.20 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 102.37 | 107.30 |
| சிங்கப்பூர் | டொலர் | 103.94 | 108.04 |
| இந்தியா | ரூபா | 2.1699 | ------- |
| சீனா | யுவான் | 22.1434 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.5843 |
| குவைத் | டினார் | 482.5839 |
| ஓமான் | ரியால் | 378.5468 |
| கட்டார் | ரியால் | 40.0330 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8636 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6804 |




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 250 | 200 | 240 | 200 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 250 | 300 | 300 | 400 | 400 |
| தக்காளி | 200 | 200 | 160 | 180 | 180 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 50 | 60 | 60 | 80 | 70 |
| கோவா | 150 | 200 | 120 | 200 | 160 | 160 | 150 |
| கரட் | 180 | 200 | 140 | 160 | 140 | 200 | 200 |
| பூசணி | 60 | 80 | 50 | 40 | 50 | 80 | 50 |
| புடோல் | 100 | 150 | 100 | 160 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 50 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 150 | 140 | 140 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 70 | 80 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 400 | 200 | 240 | 200 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 100 | 160 | 120 | 100 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 90 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 160 | 200 | 200 | 200 | 240 | 240 | 200 |
| பீற்றூட் | 140 | 100 | 120 | 200 | 200 | 200 | 160 |
| கறிமிளகாய் | 240 | 300 | 200 | 280 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 120 | 100-200 | 140 | 200 | 150 |
| போஞ்சி | 200 | 400 | — | 400 | 240 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 140 | 200 | 200 | 200 | 250 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 50 | 40 | 30 | 60 | 70 |
| தேசிக்காய் | 400 | 400 | 200 | 300 | 250 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-25 | 40 | 25 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 140 | 300 | — | 240 | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 400 | 300 | — | 240 | — | — | 150 |
| முள்ளங்கி | 100 | 100 | — | 120 | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 20 | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 150 | — | 80 | — | — | 80 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க மரணம் 192



போரில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பின்னடைவையும் பலத்த உயிர் சேதத்தையும் தொடர்ந்து அவர் அங்கிருந்து அவசரமாக நாட்டிற்குத் திரும்பினார்.

ஆனையிறவைக் கைப் பற்றியது குறித்து லண்டனில் வெளியிடப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்த தாவது,

### ஏமாற்றம்

ஆனையிறவு அருகே உள்ள முக்கிய இராணுவ முகாமான இயக்கச்சி முகாம்மீது விடுதலைப்புலிகள் அதிரடித்தாக்குதல் நடத்தினார்கள். அப்போது நடந்த சண்டையில் ஏராளமான சிங்கள வீரர்கள் பலியானார்கள்.

அந்த முகாமுக்கு உணவு விநியோகமும் இல்லை, பாதுகாப்புக்குக் கூடுதல் வீரர்களும் வரவில்லை. இதனால் ஏமாற்றம் அடைந்த நிலையில் இருந்த இராணுவ வீரர்களில் பலர் விடுதலைப்புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

பல மணிநேரம் நடந்த இந்தச் சண்டையில் அங்கிருந்த பல இராணுவ டாங்கிகள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் அழிக்கப்பட்டன.

### முழுக்கட்டுப்பாட்டில்

இயக்கச்சி முகாமை கைப் பற்றியபின் அங்கிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய விடுதலைப்புலிகள் அங்குள்ள மிகப்பெரிய இராணுவ முகாமைப் பல திசைகளில் இருந்தும் சுற்றி வளைத்துத் தாக்கினார்கள். அந்தத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் அங்கிருந்த ஏராளமான வீரர்கள் கிளாலிப் பகுதியை நோக்கி தப்பி ஓடினார்கள்.

ஆனையிறவுப் பகுதியும் இயக்கச்சியும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன. அங்குள்ள இராணுவ முகாம்களில் இருந்து ஏராளமான ஆயுதங்களையும் இராணுவ வாகனங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தேர்தலில் வாக்களித்து விட்டுத் திரும்பும் போது மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்துக்கு 10.10.2000 அன்று தேர்தல் நடந்தது. ஒரு கோடியே 20 இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட நாட்டில் வாக்குப் பதிவுக்காக 9,944 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 4 மணிக்கு முடிவடைந்தது. விடுதலைப்புலிகளின் மிரட்டல் இருந்த போதிலும் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக இருந்தது.

### குண்டு வீச்சு

யாழ்ப்பாணப் பகுதியில் வாக்குப் பதிவைச் சீர்குலைக்க விடுதலைப்புலிகள் குண்டு வீசினார்கள்.ஆனாலும் மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.

விடுதலைப்புலிகளின் பீரங்கித் தாக்குதலில் யாழ்ப்பாணக் கச்சேரிக் கட்டடம் சேதம் அடைந்தது. இதனால் அங்கு நடைபெறுவதாக இருந்த வாக்கு எண்ணிக்கை இந்துக் கல்லூரி கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

இது தவிர யாழ். இந்துக் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை இராணுவத்தினர் கைப்பற்றிச் செயல் இழக்க வைத்தனர்.

இந்த வெடிகுண்டு காலை 7.22 மணிக்கு வெடிக்கும் வகையில் வைக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே கண்டுபிடிக்கப் பட்டதால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

இதுபோல பாதுகாப்பு அமைச்சர் அனிருத்தா போட்டியிடும் கண்டித் தொகுதியில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

இதில் 2 பேர் கொல்லப் பட்டனர். வேறு பெரிய அளவில் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை.

### மரணம்

இந்த நிலையில் கொழும்பு புறநகர்ப் பகுதியில் தனது சொந்த தொகுதியான ஹோரகுல்லா என்ற இடத்தில் வாக்களித்து விட்டு சிறிமாவோ பண்டாரநாயக்க காரில் கொழும்புக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடனே அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அவர் இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க உலகின் முதல் பெண் பிரதமர் ஆவார்.



(தொடரும்)

நல்ல காரியத்தைச் செய்ய நினைக்கிறவர் ஒரு காலமும் ஏமாறுவதில்லை.

-லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மலையக மக்களுக்கு வன்னியில் இடம் கொடுங்கள்

மலையகத்தில் இடம்பெற்று வரும் மண் சரிவினால் ஏற்பட்டு வரும் சாவுகள் கண்டு கலங்காமல் இருந்து விட முடியாது.

எங்கள் மலையக உறவுகள் படும் துன்பத்தை இலங்கை அரசு நீக்கவேண்டுமாயினும் அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் நடப்பதாக இல்லை.

மண்சரிவு என்ற பயங்கரத்தோடு போராடி வாழ்வதென்பது சாதாரண விடயமல்ல. எந்த நேரமும் மண்ணுக்குள் புதையுண்டு போகலாம் என்ற வாழ்க்கை எத்துணை அச்சமானது; ஆபத்தானது.

இருந்தும் மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்கள் என்று அடையாளம் காணப்பட்ட பிரதேசத்து மக்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவதே அவர்களின் பாதுகாப்புக்கான ஒரே வழியாகும்.

இருந்தும் அத்தகைய நடவடிக்கைகள் எதனையும் இலங்கை அரசு முன்னெடுப்பதாகவோ, மலையக தமிழ் அரசியல் தலைவர்கள் எடுப்பதாகவோ தெரியவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் எங்கள் மலையக சகோதரர்களுக்கு கைகொடுத்து உதவ வேண்டும்.

எனவே, வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள அரச காணிகளை வழங்கி அங்கு மலையக மக்களை குடியமர்த்த வேண்டும்.

வன்னியில் சட்டவிரோத சிங்கள குடியேற்றங்கள் என்று கோஷம் போடும் நாம் அதற்கு மாற்றீடாக எங்கள் மலையக சகோதரர்களைக் குடியிருத்துவது நல்லது என்பதால் இது தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

மலையகத் தமிழ் சகோதரர்களை வன்னிப் பெரு நிலப்பரப்பில் குடியமர்த்துவதன் மூலம் வன்னிப்பெரு நிலப்பரப்பில் விவசாய உற்பத்திகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுவதுடன் வடபகுதியில் தமிழ் குடித்தொகையும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

மலையக மக்களை வன்னியில் குடியிருத்துவது பொருத்தமில்லை என்று யாரேனும் கருதினால், அது மிகப்பெரும் தவறாகும்.

ஏனெனில் மண்சரிவு ஏற்படக் கூடிய இடங்களில் குடியிருக்கும் மக்களுக்கு இலங்கை அரசு ஒருபோதும் பாதுகாப்பான இடங்களை வழங்கப் போவதில்லை.

மண்சரிவு அபாய எச்சரிக்கையை விடுவது, மண்சரிவு ஏற்பட்டால் முடிந்தளவு சடலங்களை மீட்க நடவடிக்கை எடுப்பதென்பதோடு அரசின் கடமை நின்று போகும்.

இந்நிலையில் தமிழ் மக்களின் உரிமை என்று பேசும் எமக்கு எங்கள் மலையக சகோதரர்களின் உயிரைப் பாதுகாக்கின்ற தார்மீகக் கடமையும் உண்டு.

இது தவிர மலையக மக்களை வன்னியில் குடியிருத்துவதன் மூலம் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதற்கு மேலாக, விவசாய உற்பத்தி, வேலைவாய்ப்புக்கான மனித வளம் அதிலும் எங்களிடம் இல்லாத அளவில் மலையக மக்களிடம் இருக்கக்கூடிய தொழில் திறன் என்பவற்றையும் வடபுலம் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

இது தவிர மலையக மக்களை வன்னியில் குடியிருத்துவதன் மூலம் தமிழர் தாயகமும் மலையகமும் இணையக்கூடியதான உறவுப்பாலம் கட்டி எழுப்பப்படும்.

எனவே மண்சரிவு அபாயம் உள்ள மலையக மக்களுக்கு வன்னியில் காணி கொடுத்து அவர்களை இங்கு குடியமர்த்துங்கள். அங்கு ஏற்பட்ட மண்சரிவு இங்கு மண்ணின் பலத்தை அதிகரிக்கட்டும்.

## சுவிட்சர்லாந்தில் அகதிகளை ஏற்காத கிராமத்துக்கு ரூ.2 கோடி அபராதம்

சிரியா, லெபனான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு தஞ்சம் அடைய அகதிகள் வந்த வண்ணம் உள்ளனர். இந்த நிலையில் 26 ஐரோப்பிய நாடுகளும் 50 ஆயிரம் அகதிகளை ஏற்றுக் கொண்டு அவர்களை தங்க அனுமதிக்க வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அதை ஏற்று சுவிட்சர்லாந்து அரசு அகதிகளை தங்கவைத்துள்ளது. இந்த நிலையில் 10 அகதிகளை அங்குள்ள ஒபாவில்-லியவி என்ற கிராமத்தில் தங்கவைக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் அகதிகளை ஏற்க அக்கிராமத்தினர் மறுத்து விட்டனர்.

எனவே, அக்கிராமத்துக்கு ரூ.2 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அங்கு மொத்தம் 2 ஆயிரத்து 200 பேர் தங்கியுள்ளனர். அவர்களில்300 பேர்கோடீஸ்வரர்கள்.

அவர்கள் அகதிகள் வருகையை விரும்பவில்லை. கடுமையாக உழைத்து இக்கிராமத்தை முன்னேற்றி இருக்கிறோம். அன்புடன் வாழ்கிறோம். அந்த சூழ்நிலையை கெடுக்க விரும்பவிலலை. அவர்கள் எங்களுடன் ஒத்துப்போக மாட்டார்கள் என தெரிவித்துள்ளனர். அபராதம்கட்ட தயார் எனவும அறிவித்துள்ளனர். (இ-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் காரைநகர் சிவன் கோவில், கசூரினா கடற்கரை, மாப்பாணபுரி, இலகடி, சயம்பு வீதி, மல்லிகை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(கரணவாய்)

தேசிய சுற்றாடல் தினமானது 30.05.2016 தொடக்கம் 05.06.2016 வரையான காலப்பகுதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத்தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (இ-5-60)

## அகதி முகாம்களில் 60 அகதிகள் மாயம்

தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் வசித்து வந்த சுமார் 60 பேர் மாயமாகியுள்ளதாக ஈழ அகதிகள் மறுவாழ்வு மையம்தெரிவித்துள்ளது.

சென்னை, சேலம், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்தவர்களே தற்போது மாயமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாயமாகியுள்ளவர்கள் கேரளா அல்லது தூத்துக்குடியில் இருந்து கடலவழியாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல் திட்டமிட்டுள்ளதாக உளவுப்பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில் சென்னையில் இருந்து தனிப்படை பொலிஸார் மாயமானவர்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்பிடி தடைகாலம்நிறைவடைந்து நேற்று முதல் விசைப் படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க செல்கின்றன. இதனால் பொலிஸார் கண்காணிப்பு பணியை தவிரப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(இ-10)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வண்ணார் பண்ணை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (ARV) கீழ் வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்ளும்வண்ணம்கேட்டுக்கொள்கின்றோம் இவ் வளர்ப்பு நாய்க்கான உரிமக் கட்டணமாக ரூபா 30/- செலுத்தப்பட வேண்டும்.

01.06.2016 மு.ப.9- மு.ப.-11 மணி வரை பிறவுண்றோட் கலட்டி சந்தியிலும் மு.ப.11- பி.ப.-1 மணி வரை வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கையிலும் பி.ப.2- பி.ப. 3.30 மணி வரை காமாட்சி பாலர் பாடசாலையிலும் 02.06.2016 மு.ப.9- மு.ப.-11 மணி வரை மெதடிஸ் மிஷன் பாடசாலை கலட்டிஇராமநாதன்வீதியிலும் மு.ப.11- பி.ப.-1 மணி வரை சைவ பரிபாலன சபை நீராவியடியிலும் பி.ப.2- பி.ப. 3.30 மணி வரை ஆரோக்கியமாதா கோவிலடி கஸ்தூரியார் வீதியிலும் 03.06.2016 மு.ப.9- மு.ப.-11 மணி வரை கனகசபை வீதியிலும் மு.ப.11- பி.ப.-1 மணி வரை சிவகுருநாதர் கோவிலடி சிவகுருநாதர் வீதியிலும் பி.ப.2- பி.ப. 3.30 மணி வரை குமாரசாமி வீதி D.S. Office இலும் 06.06.2016 மு.ப.9- மு.ப.-11 மணி வரைஆத்திசூடி சனசமூக நிலையத்திலும் மு.ப.11- பி.ப.-1 மணி வரை ஞானக் குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதியிலும் பி.ப.2- பி.ப. 3.30 மணி வரை கலா ஜோதி சனசமூக நிலையத்திலும் 07.06.2016 மு.ப.9- மு.ப.-11 மணி வரை முருகமூர்த்தி வீதியிலும்மு.ப.11- பி.ப.-1 மணி வரை கலைவாணி சனசமூக நிலையத்திலும் பி.ப.2- பி.ப. 3.30 மணி வரை தாமரை வீதியிலும் 08.06.2016 மு.ப.9- மு.ப.-11 மணி வரை பெரிய தம்பிரான் வீதியிலும் மு.ப. 11- பி.ப.-1 மணி வரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் பி.ப.2- பி.ப. 3.30 மணி வரை கலைமகள் சனசமூக நிலையம் கே.கே. எஸ் வீதியிலும்09.06.2016 மு.ப.9- மு.ப.-11 மணி வரை பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையிலும் மு.ப.11- பி.ப.-1 மணி வரை பிறவுண் வீதி 1 ஆம் ஒழுங்கையிலும் பி.ப. 2- பி.ப. 3.30 மணி வரை அன்னசத்திரலேன் நாவலர் வீதியிலும் 10.06.2016 மு.ப. 9- மு.ப.-11 மணி வரை மணிக்கூட்டு லேன் மு.ப.11- பி.ப.-1 மணி வரை சபாபதி லேனிலும் பி.ப.2- பி.ப. 3.30 மணி வரை பூநாறி லேனிலும் 13.06.2016 மு.ப .9- மு.ப.-11 மணி வரை பலாலி வீதி 4 ஆம் ஒழுங்கையிலும் மு.ப.11- பி.ப.-1 மணி வரை ஐயனார் கோவிலடியிலும் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ-10

## அடைமழையால் ஆறுகளின் நீர்மட்டம் மீண்டும் உயர்வு

நாட்டில் மீண்டும் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையின் சீற்றத்தினால் பல ஆறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நீலகந்த பிரதேசத்தில் களுகங்கையின் நீர் அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாக களுத்துறை மாவட்டத்தைச் சேர் ந்த 105 பேர் நான்கு அன ர்த்த முகாம்களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே ஜின் கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் பத்தேகம, தொடங்கொட, உனன் விட்டிய ஆகிய பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தப் பகுதிக்கான போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளதால் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு சாரதிகளை பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். அத்துடன் நில்வளகங்கையின் நீர்மட்டமும் அதிகரித்து வருவதாக பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினம்- மே.31

வகை வகையாய் புகைப்பதனால்
தொகை தொகையாய் இறப்புக்கள்
தொடரணுமா புகைத்தலை
தொலைந்திடுமே உன் வாழ்வு

நெஞ்சம் பட்ட காயத்திற்கு
நெருப்பிலா மருந்துண்டு!
புகைவிட்டு ஆற்றிக்கொள்ள
பெண்ணிலா பகையுண்டு!!

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை.**

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



மக்களுக்கு உதவி செய்ய எண்ணுபவர்கள் தமது சொந்த சுக துக்கங்களையும் புகழையும் எல்லாவகை ஆசைகளையும் மூட்டை கட்டிக் கடலில் எறிந்து விட்டுப் பின் இறைவனிடம் வரவேண்டும். மகான்கள் அனைவரும் சொன்னதும் செய்ததும் இதுவே.

எல்லாக்கேடுகளுக்கும் முக்கிய காரணம் பிரிவு மனப்பான்மையே.


எனது சகோதரர்களுக்கு நான் உதவுவேனாக. நான் தேடுவதெல்லாம் இதுவே.

ஏதேனும் நன்மை வரவேண்டுமானால் உங்கள் கிரியைகளை எறிந்துவிட்டு வாழும் தெய்வமாகிய மனித தெய்வ வடிவத்தை அதாவது மனித உருவம் கொண்ட ஒவ்வோர் உயிரையும் வழிபடுங்கள். பகவானைப் பிரபஞ்ச வடிவத்திலும் தனித்தனி வடிவத்திலும் வழிபடுங்கள்.

இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால் அவை இறைவனது அம்சம் என எல்லா உயிர்களுக்கும் பணி செய்வது மிக நல்லது.

ஜோன்சன் ஹெற்றிக் கோல்

# வல்லவன் உதைபந்தாட்ட தொடர் வார்நகர் சென். ஜோசப் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்டதொடரில் 25.05.2016 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் ஜோசப் வார்நகர் சென்ஜோசப் அணியினை அரியாலை ஐக்கியம் வி.க எதிர்த்தாடியது. போட்டியில் மிக வேகமாக விளையாடிய சென்.ஜோசப் ஜோன்சன் ஆட்டத்தின் 21, 24,35 ஆவது நிமிடங்களில் தொடர்ந்து 3 கோல்களை அடித்து வடமாகாண வல்லவனில் ஹெற்றிக் சாதனையினை பதிவு செய்தார். தொடர்ந்து பதிலுக்கு அரியாலை ஐக்கியம் வி.க. 37 ஆவது நிமிடத்தில் கணேசனும் 43 ஆவது நிமிடத்தில் நிரோஜனும் கோலினை அடித்தனர். எனினும் தொடர்ந்த ஆட்டத்தில் சென்.ஜோசப் வி.க. 53 ஆவது நிமிடத்தில் டெசில், 58 ஆவது நிமிடத்தில் அஜித், 59 ஆவது நிமிடத்தில் மீண்டும் ஜோன் சன் ஆகியோர் கோலினை அடித்ததன் மூலம் வார்நகர் சென் ஜோசப் வி.க. 6:2 என வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக 4 கோல்களினை அடித்த சென்.ஜோசப் வி.க. வீரர் ஜோன்சன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை ஞானசாரியார் கல்லூரி உப அதிபர் ஸ்ரீ.சந்திரா வழங்கி கௌரவித்தார். (க)

# செம்மலை உதயசூரியனை வென்றது பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம்





ஹென்றீசியன் சவால் கிண்ண" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

25.5.2016 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் செம்மலை உதய சூரியன் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

ஆட்டத்தின் 9 வது மற்றும் 17 வது நிமிடங்களில் விண்மீன் அணிவீரர்கள் டினோயன், டேமியன் ஆகியோர் கோலடிக்க முதல் பாதியில் விண்மீன் அணி முன்னிலை பெற்றது. உதய சூரியன் அணி பதிலுக்கு ஒரு கோலடித்ததுடன் ஆட்டத்தை சமன் செய்யப் போராடியது.

இரண்டாவது பாதியில் விண்மீன் அணி டேமியன், உதயதாஸ் ஆகியோரின் உதவியுடன் மேலும் அடுத்தடுத்து கோலடித்து அசத்தியது. உதயசூரியன் அணிக்கு கோலடிக்கும் வாய்ப்புக்கள் கிடைக்க அதனைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. எனினும் நகுலேஸ்வரன் அசத்தல் கோலொன்றை அடித்தும் மேலதிக கோல்கள் அடிக்காது போக இறுதியில் 4:2 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணி வெற்றி பெற்று லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றது. (க)

# ஹென்றீசியன் சவால் கிண்ணம் ஊரெழு றோயல் வெற்றி





ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

24.5.2016 அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

இரு அணிகளும் பலமான அணிகள் என்பதனால் போட்டி ஆரம்பத்திலிருந்தே விறுவிறுப்பை ஏற்படுத்தின. மிக வேகத்துடன் தொடர்ந்துகொண்டிருந்த ஆட்டத்தில் பந்துகள் கோல் கம்பங்களுக்கு மேல் அடிக்கடி பறந்தன.

ஜெகமீட்பர் அணி வீரர்களின் ஆதிக்கம் அதிகமாக காணப்பட்டபோதும் றோயல் அணியின் பின்களம் சிறப்பாக செயற்பட்டதனால் அவர்களால் கோலடிக்க முடியவில்லை. இந் நிலையில் றோயல் அணியின் நட்சத்திர வீரர் கஜகோபன் 20ஆவது நிமிடத்தில் பின்களத்திலிருந்து வந்து கோலடித்து அசத்த றோயல் அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பதியாட்டத்தில் ஜெகமீட்பர் அணி ஆட்டத்தை வேகப்படுத்தியது. அதற்குப்பலனாக 43 வது நிமிடத்தில் சுரேஸ் குமார் (சுமன்) பதில் கோலடித்து ஆட்டத்தை சமன் செய்தார். இருந்தபோதும் 50 மற்றும் 57 வது நிமிடங்களில் கோல் காப்பாளரின் தவறால் றோயல் அணி அடுத்தடுத்து கோலடித்து முன்னிலை பெற்றது.

பதில் கோலடிக்க ஜெகமீட்பர் அணியினர் முயன்றும் அது பலனளிக்கவில்லை. இறுதியில் 3:1 என்ற கோல்கணக்கில் றோயல் வெற்றி பெற்று B பிரிவில் சென் லூசியஸ், டயமன்ஸ் அணிகளுடன் மூன்றாவது அணியாக தகுதிபெற்றது. (க)

# ரதனின் அதிரடியான கோல் யங்கம்பன்ஸ் அசத்தல் வெற்றி



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் 27/05/2016 அன்று நடைபெற்ற போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் வி.கழகத்தை எதிர்கொண்டு கம்பர்மலை யங்கம்பன்ஸ் மோதியது. முதலாது பாதியாட்டத்தில் நெருக்கடியை கொடுத்த ஆனைக்கோட்டை 10 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் போட ஆட்டம் தொடர்ந்தது. 15 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் வி.கழக வீரர் ரதன் கோல் போட்டு ஆட்டத்தை சம்பபடுத்தி வைத்திருந்தார்.

மீண்டும் யங்கம்பன்ஸ் வி.கழகத்துக்கு 18 ஆவது நிமிடத்தில் கோல் போடும் வாய்ப்பு ரதனால் சுழற்சி முறையில் அடிக்கப்பட்ட (சுப்பர் சொட்) கோலாக மாற்றப்பட 2:1 என்ற அடிப்படையில் முதல் பாதி நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் வேகமாக ஆட்டத்தை ஆரம்பித்தது. கோல் போடுவதற்காக எத்தனித்து அதனை யங்கம்பன்ஸ் வி.கழக பின்கள வீரரின் சிறந்த ஆட்டத்தால் முறியடிக்கப்பட்டது. போட்டி நிறைவின் கடைசி 38 நிமிடத்தில் ரதன் மேலும் ஒரு கோல் போட்டார். ஆட்டம் 3:1 என்ற ரீதியில் யங்கம்பன்ஸ் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (க)

# இன்றைய போட்டிகள்

அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட போட்டியை அராலி வடக்கு மடத்தடி திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி யுத் விளையாட்டுக்கழகம் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலட்டி ஐக்கியம் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

இளவாலை ஹென்றீஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றீசியன்சவால்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியினை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடத்துகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் புனித ஹென்றியரசர் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 2016/2017 கல்வி ஆண்டிற்கான புதிய ஆசிரிய மாணவர்களை பதிவு செய்தலும் பயிற்சி நெறி ஆரம்பிக்கும் வைபவமும் நேற்று திங்கட்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் 314 புதிய ஆசிரிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

## மனநலம்...

வீட்டின்கதவை பூட்டி திறப்பை கையில் வைத்துக் கொண்டு தன்னுடைய அனுமதி இல்லாமல்யாரும் வீட்டுக்குள் போகக் கூடாது என வீட்டில் இருந்தவர்களை வற்புறுத்துவதை வழக்கமாக கொண்டிருந்துள்ளான்.

இந்நிலையில் கடந்த 15ஆம் திகதி மேற்படி இளைஞனின் தாய் கூலி வேலைக்கு சென்றுவிட்டு மழை காரணமாக வீடு திரும்பாத நிலையில் மேற்படி வயோதிப மாது தன் பேரனை சோறு சாப்பிடுமாறு கேட்டிருக்கின்றார்.

அதற்குபேரன் மறுத்த நிலையில் இல்லை கட்டாயம் சாப்பிடவேண்டும் என கேட்டவாறு மேற்படிவயோதிப மாது குசினிக்குள் சென்ற நிலையில் மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன் (பேரன்)தனது அம்மம்மாவை மர சட்டத்தால் தாக்கிவிட்டு வீட்டின் தாழ்வாரத்தில் கொண்டுவந்து போட்டுள்ளான்,

இந்தச் சம்பவத்தின் போது குறித்த வயோதிப மாது சத்தமிட்ட போதும் அயலவர்களோ வீட்டில் இருக்கிறவர்களோ வீட்டுக்கு வராத நிலையில் மறுநாள் 16ஆம் திகதி மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞனின் தாய் வந்து தனது தாயை காப்பாற்ற முயன்று யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (செ-9)

## மீள்குடியேற்றம்...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நேற்று மாலை இடம்பெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு அறிவுறுத்தினார்.

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் அவர்களது காணிகளை இனம்காணும் செயற்பாட்டினை யூன் 3ஆம் திகதிக்குள் நிறைவு செய்வதுடன் அப் பணிகளை யூன் மாத இறுதிக்கு முன்னர் முழுமையாக நிறைவு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, காணி அமைச்சின் செயல்ாளர் ஐ.எச்.கே மஹானாம உள்ளிட்டவர்களும் முப்படைகள் மற்றும் அரச அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். (செ-11)

## பலாலி விமான...

ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் போது, பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களான மாவை சேனாதிராஜா, திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரே மேற்படி உறுதியை வழங்கியுள்ளனர்.

மேற்படி கூட்டத்தில் பலாலி பிரதேசத்தின் மீள்குடியேற்ற விடயம் பற்றி எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பொதுமக்கள் தமது காணிகள் விடுவிக்கப்படல் வேண்டும் எனவும். பலாலி விமான நிலைய அபிவிருத்திக்கென தமது காணிகளை சுவீகரிக்கக் கூடாது என கோரிக்கைகள் முன்வைத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா, இந்த விடயம் தொடர்பில் இந்திய உயர் அதிகாரிகளுடன் கலந்து உரையாடியுள்ளோம். அவர்கள் காணிகளை சுவீகரித்து விமான நிலைய அபிவிருத்தியினை மேற்கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்.

எங்களுடைய சம்மதம் இல்லாமல் பலாலி விமான நிலையத்திற்கென ஒரு துண்டு காணியும் சுவீகரிக்கப்பட மாட்டாது என உறுதியளித்த அவர், பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிப்பு செய்யப்பட மாட்டாது எனவும், பிரதேச விமான நிலையமாகவே அபிவிருத்தி செய்யப்படும் எனவும்,

அது தற்போது அமைந்துள்ள விமான நிலைய காணிகளுக்கு உள்ளேயே மேற்கொளஎப்படும் எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். பின்னர் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கென காணி சுவீகரிக்கப்படும் என அரசாங்கம் உறுதியாக அறிவிக்கவில்லை.

அந்த காணிகள் மக்களுடையது தான் அவை கட்டுப்பாட்டிலிருந்து எப்போதாவது விடுவிக்கப்பட்டேதான் ஆக வேண்டும். மக்களுடைய மீள்குடியேற்றத்திற்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது என அவர் உறுதியளித்திருந்தார். (செ-4)

## கட்சி ஆரம்பிக்கு...

துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தான் ஏன் புதிய கட்சியை ஆரம்பிக்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்புலிருந்து விலகி, புலம்பெயர் தமிழர்களின் ஆதரவுடன் புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளார் போலத் தோன்றுவதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

புதிதாக உருவாகும் கட்சி கடும் போக்கு கொள்கையை பின்பற்றும் எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் விக்னேஸ்வரனை சமாளிக்க முடியாத நிலை காணப்படுவதால், கூட்டமைப்பு இதற்கு அனுமதியளிக்கும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த செய்தி தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது ஒரு முட்டாள்தனமான வதந்தி என தெரிவித்துள்ள முதலமைச்சர், சம்பந்தனை தாம் ஒரு வாரத்திற்கு முன்னர் சந்தித்தாகவும், தங்களுக்கிடையில் உறவு சிறப்பாக உள்ளதாகவும் குறிப்பிட்டார். (செ-11)

## பொருத்து வீடுகள்...

றைய தினம் நடைபெற்றது.

இதன்போது இணைத்தலைவர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்ட இந்தப் பொருத்து வீடுகள் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளன. இதனால் அதனைப் பற்றி கதைக்க வேண்டிய அவசியம் இல்லை. மக்களுக்கு சரியான வீட்டுத்திட்டங்களை பெற்றுக கொடுப்பதுடன். மீள்குடியேறிய அனைவருக்கும் வீடுகள் கிடைக்கும்" என்றார். (செ-4)

## கஞ்சா...

குழுக்கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கீழ்நிலை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கஞ்சா கடத்தலைக் கண்டுபிடித்தால், அந்த உத்தியோகத்தர்களை மேல்நிலை அதிகாரிகள் இடமாற்றம் செய்கின்றனர்.

இது பெரும்பாலும் இளவாலை பொலிஸ் பிரிவில் இடம்பெறுகின்றது. இதற்கான ஆதாரங்கள் இருக்கின்றது என்றார்.

அந்த ஆதாரங்களை எழுத்து மூலமாக சமர்ப்பியுங்கள். விரைவில் பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாணம் வருகை தருவார். அவ்வேளையில் அவரிடம் இதனை ஒப்படைத்து நடவடிக்கை எடுக்கலாம் என இணைத்தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.(செ-4)

## சிவில் விவகாரங்களில்...

காரிக்கும் ஏற்பட்ட முரண்பாடு என்று எதிர்க்கட்சித்தலைவர். இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முதலமைச்சரின் கௌரவம் அந்தஸ்து பதவி நிலை காப்பாற்றப்பட வேண்டும். கவனிக்கப்பட வேண்டும். அவரை அவகௌரவப்படுத்தும் வகையிலோ பதவியை உதாசீனம் செய்யும் வகையிலோ யாரும் நடந்து கொள்வதை ஏற்றுக் கொள்வது பண்பற்ற செயலாகும். சிவில் நிர்வாக விடயத்தில் பல்வேறு காரணங்களையும் கூறிக் கொண்டு படைத் தரப்பினர் நுழைவது தவிர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஞானசார தேரருக்கு...

ப்பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஞானசார தேரர் வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகியிருக்கவில்லை. கடந்த 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ஆம் திகதி தேர்தல் சட்டங்களை மீறி வெலிப்பனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மீகம அந்தாவல ஸ்ரீ மங்களாராமய விஹாரையில் அரசியல் கூட்டம் நடத்தியதாக ஞானசார தேரர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுன என்ற கட்சியில் ஞானசார தேரர் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். விஹாரைக்கு அருகாமையில் உள்ள பகுதி ஒன்றில் கூட்டம் நடத்த பொலிஸாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு விஹாரையில் கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. கூட்ட ஏற்பாட்டாளர்களிடம் இது பற்றி அறிவித்த போது கூட்டத்தை விஹாரையில் நடத்தாமல் இருக்க இணங்கிய போதிலும், ஞானசார தேரர் உள்ளிட்டவர்கள் பின்னர் அந்த விஹாரையிலேயே அனுமதியின்றி கூட்டத்தை நடத்தியிருந்தனர்.

இது தொடர்பில் அப்போதைய வெலிப்பனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.வழக்குடன் தொடர்புடைய பௌத்த பிக்குகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். 27ஆம் திகதி வழக்கு விசாரணைகளில் ஞானசார தேரர் முன்னிலையாகத் தவறிய காரணத்தினால் மத்துகம நீதவான் மேற்படி பிடியாணை பிறப்பித்துள்ளார்.(செ-11)

## கிழக்கு முதலமைச்சர்...

லயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கடற்படை அதிகாரியொருவருக்கும் முதலமைச்சருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளின் போது முதலமைச்சரால் கடற்படை அதிகாரி மீது கடும் வார்த்தை பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதனையடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு முப்படைகளின் தளங்களுக்குள் நுழைய முப்படைகளினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர்கலந்து கொள்ளும் நிகழ்வுகளை புறக்கணிக்கப் போவதாகவும் முப்படையினரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த தீர்மானம் தற்போது நீக்கப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளரான பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர கூறினார்.

இந்த முடிவை வரவேற்றுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தடை விதிக்கும் தீர்மானம் எடுத்தவர்களினால் தான் தடையும் நீக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த முடிவுக்கான காரணம் பற்றி தான் எதுவும் இதுவரை அறிந்திருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்

இந்த முடிவு ஜனாதிபதி நாட்டில் இல்லாத நேரத்தில் முப்படையினரால் எடுக்கப்பட்டிருந்த நிலையில் அரசியல் பின் புலத்தில் எடுக்கப்பட்ட முடிவு என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தனது கண் டனத்தையும் வெளிப்படுத்தி ஜனாதிபதி க்கும் பிரதமருக்கும் குறித்த சம்பவம் தொடர்பாக விளக்கமளித்து கடிதமொன்றை எழுதியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)

# புதிய கட்டிடத்தை ஜனாதிபதி திறப்பு

பொலநறுவை சேவாமுக்த முகாம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற தேசிய சுற்றாடல் வாரத்தை பிரகடனப்படுத்தும் வைபவத்தில் கலந்துகொள்வதற்கு நேற்று பொலநறுவைக்குச் சென்ற ஜனாதிபதி பலுகஸ்தமன பல நோக்கு கூட்டுறவு சங்க த்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 1974ஆம் ஆண்டு கூட்டுறவு விநியோக உத்தியோகத்தராக பலுகஸ்தமன பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் தனது தொழிலை ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது வாழ்வுடன் இணைந்த முக்கிய ஒரு இடமான இங்கு புதிய கட்டிட திறப்பு வைபவத்தில் ஜனாதிபதி மிக மகிழ்ச்சியுடன் இணைந்து கொண்டதுடன், அதன் பழைய உறுப்பினர்களுடனும் நண்பர்களுடனும் சிநேகபூர்வமாக உரையாடினார்.

அத்துடன் பலுகஸ்தமன பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிராமிய வங்கியை, கிராமிய வங்கி கணனி முறைமையுடன் வலையமைப்பிற்குட்படுத்துதல் ஜனாதிபதியின் கரங்களினால் மேற்கொள்ளப்பட்டது.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-12)

## வடக்கு ஆசிரிய...

ப்பாணத்தில் அமைந்துள்ள வட மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

எனவே தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் (பெண்கள் இள வர்ண சாறியுடனும், ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேட்டும் அணிந்து) குறித்த திகதியில் தவறாது வட மாகாண கல்வி அமைச்சிற்கு சமுகமளித்து தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

நியமனம் பெறும் பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் 04-ம் பக்கத்தில்... (செ)

## ஜுலை 26 வரை...

கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவொன்றை முன் கொண்டு ஆராய்வதற்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மக்கள் விடுதலை முன்னணி தாக்கல் செய்த மனு, நேற்றுத் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தபோது கருத்துக்களை தெரிவித்த சட்டமா அதிபர், மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள குமரன் பத்மநாதனுக்கு எதிராக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எனவே, இந்த மனுவை முன்கொண்டு விசாரணை செய்யும் அவசியம் ஏற்படாதென்று கூறிய சட்டமா அதிபர், அதனை தள்ளுபடி செய்யமாறு வேண்டுகோள் விடுத்தார்.

பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகள் குறித்து தங்களுக்கு திருப்தியில்லாத காரணத்தால், மனுவை முன்கொண்டு விசாரணை செய்யுமாறு தங்களது வழக்கறிஞர் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்ததாக மனுவை சமர்ப்பித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக குமரன் பத்மநாதனை கைது செய்யுமாறு சர்வதேச பொலிஸார் பிடியாணை பிறப்பித்துள்ளதாக கூறிய விஜித்த ஹேரத், குமரன் பத்மநாதன் விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் தலைவராகவும் சிறிது காலம் செயற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போதைய நல்லாட்சி அரசாங்கம், குமரன் பத்மநாதனை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற காரணத்தினால்பொலிஸ் விசாரணைகள் திருப்திதரவில்லை அவர் கூறினார்.

எனவே, குமரன் பத்மநாதனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் வரை, தாங்கள் சமர்ப்பித்துள்ள மனுவை முன்கொண்டு விசாரணை செய்வது அவசியமென்று நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அந்த வேண்டுகோளை ஆராய்ந்த நீதிமன்றம், எதிர்வரும் யூலை மாதம் 26-ஆம் திகதியன்று மனு முன்கொண்டு ஆராயப்படுமென்று தீர்ப்பளித்துள்ளது. (செ-12)

## சண்டை பிடிக்க...

தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, மாகாண சபை உறுப்பினர் ப.கஜதீபன், வசாவிளான் சிறிவேலுப்பிள்ளை பாடசாலை உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வசாவிளான் மத்திய கல்லூரியிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில், இராணுவக் கட்டுப்பாடுப் பகுதி உள்ளது.

ஆகவே, இந்த பாடசாலையை விடுவிக்க கோருவதன் மூலம் பாடசாலை அமைந்துள்ள காணியினையும் விடுவிக்கலாம் என நியாயமான கோரிக்கை ஒன்றினை அவர் முன்வைத்தார். இதன் போது குறுக்கிட்ட மாகாணசபை உறுப்பினர் பரஞ்சோதி ஏதோ கூற முயலும் போது, அதனை மாவை சேனாதிராஜா தடுத்திருந்தார்.

பின்னர் பாடசாலை மீள இயங்கப்படாமைக்கு பாடசாலை அதிபர்கள் அதனை மீள இயக்குமாறு கோரிக்கை முன்வைக்கவில்லை எனவும், அவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டால் மாத்திரமே பாடசாலைகளை விடுவிப்பது குறித்து தம்மால் பேச முடியும் என தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ்.சிறிமோகன் தெரிவித்தார்.

பிரதேச செயலரின் இந்த பதிலால் விசனமடைந்த மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் இந்த பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இது தொடர்பில் நாங்களே கோரிக்கை முன்வைக்கின்றோம் எனவும் கஜதீபன் கூறினார், இதன்போது மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி மீண்டும் கருத்தொன்றினை கூற முயன்றார்.

இதனை இடைமறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் இணைத்தலைவர் மாவை சேனாதிராஜா, மாகாண சபை உறுப்பினர்கள் சண்டை பிடிப்பதற்கு வேறு இடம் உள்ளது. இங்கு சண்டை பிடிக்க வேண்டாம் என எச்சரிக்கை செய்தார். இதன்பின்னர் அங்கிருந்த மாகாண சபை உறுப்பினர்கள் அமைதியாக இருந்தனர்.

தொடர்ந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள அனைத்து பாடசாலைகளும் விடுவிக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானம தெல்லிப்பளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அனைவரது ஆதரவுடனும் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

மேலும் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்து தெரிவித்த மாவை சேனாதிராஜா, அரச அதிகாரிக்ளை மிரட்டும் வகையிலும் இந்த கூட்டங்களை குழப்பும் வகையிலும் யாரும் செயற்படக்கூடாது.

பொறுப்பற்ற வகையில் பிரதேச அபிவிருத்தி கூட்டங்களில் பேசுவதனை தவிர்க்க வேண்டும். அவ்வாறு அரச அதிகாரிகளை சாடும் வகையில் செயற்பட்டால் பொதுமக்களே பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (செ-4)




யாழ் மண்ணில் கடந்த 12 ஆண்டுகாலமாக மக்களின்
நன்மதிப்பைப்பெற்று அன்றும் இன்றும் கல்விச் சேவையில் சிறந்து விளங்கும் உங்கள் நம்பிக்கைக்குரிய
IDM Nations Campus Since 1981 இல்
UK பட்டப்படிப்பு
O/L, A/L தகமையுடன் புதிய பயிற்சி நெறிகளில் இணையும் வாய்ப்பு ....
இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்

LLB (Hons) BRITISH DEGREE | ELIGIBLE TO SIT ATTORNEY-AT-LAW EXAMINATION
இலங்கைச்சட்டக் கல்லூரியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (Sri Lanka Law College)

B.Sc (Hons) SPORTS SCIENCE & COACHING
இலங்கையில் முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்ட பயிற்ச்சிநெறி விளையாட்டுத் துறையில் பிரகாசிக்கும் மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

B.A (Hons) BUSINESS MANAGEMENT
வங்கி ஊழியர்கள், காப்புறுதி உத்தியோகத்தர்கள், விற்பனைப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு உகந்த பயிற்சி நெறி.

குறிப்பு
அனேக உத்தியோகத்தர்களின் வேண்டுகோளிற்கு இணங்க கிழமைநாட்களில் மாலை 6 மணிதொடக்கம் 8 மணிவரையும். சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே உள்வாங்கப்படுவதனால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

IDM Nations Campus Since 1981
216, Navalar Road, Jaffna.
(இலுப்பையடி சந்திக்கு அருகில்)
Tel: 021 222 9901
HOTLINE 077 441 9901
(C-4752)

விற்பனைக்கு
பூட் சிற்றி ரக் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு
077 2810471
(4611)

நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் பணியிடப்பயிற்சி
(பணியிடப்பயிற்சியின் பின் நிரந்தர தொழில் ஏற்பாடு)
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
SCHOLARSHIPS AVAILABLE
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY Business - Hospitality - English SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Batch 1 : 01.06.2016
Batch 2 : 04.06.2016
Batch 3 : 06.06.2016
Batch 4 : 08.06.2016
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550
Hotlines 077 036 5728, 077 758 5913, 077 722 2422
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
(C-4748)

விற்பனைக்கு
NP TK xxx இலக்கமுடைய Benly CD 125 HONDA (ஜப்பான்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
077 9553 216
(C-4750)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விசேட கணக்கீடு வகுப்புக்கள்
A.P.பகீரதன் B.B.A(FM.SPI)
A/L - 2018
VAI
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி
திங்கள், புதன் 4.00 - 6.00
ஆரம்பம் : 1.6.2016 புதன் 4 மணி
IBS
சுண்டிக்குளி
செவ்வாய், வியாழன் 4.00 - 6.00
ஆரம்பம் : 2.6.2016 வியாழன் 4 மணி
தொடர்புகளுக்கு : 0774598499
(4817)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.